Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA
30 MAY 1960
8630

149 R.C

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



PUBLIC LIBRARY
30 MAY 1960
8030
MUNICIPAL COUNCIL
JAFFNA

# வியாகுல பிரசங்கம்

முன்னாள் இவ்விலங்கையின்
வேத விற்பன்னராய் விளங்காநின்ற
**யாக்கோமே கொன்சால்வேஸ்**
என்னும் அருந்தவ முனிவரால் இயற்றப்பட்டது.

பொதுசன நூ
யாழ்ப்பாண

இதில்
**எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து**
மானிடர் ஈடேற்றத்துக்காகப்
**பூங்காவனத்திலே தொடங்கிச் சிலுவைமரணம் வரைக்கும்**
அனுபவித்த பாடுகளின் சங்க்ஷேபம்
**ஒன்பது குறிப்பிடப் பிரசங்கங்களாக**
வகுக்கப்பட்டிருக்கின்றது.

117802

யாழ்ப்பாணம்
அர்ச். சூசைமாமுனிவரின்
கத்தோலிக்கு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.
1952

[*All rights reserved*]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

232.901
2

*Re-Imprimatur :*

H. LE COUTOUR, O. M. I.,
Vic. Gen.

Jaffna, 29 April 1952.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

30 MAY 1950
MUNICIPAL COUNCIL
8530

# முகவுரை

முன்னாளில் இவ்விலங்கையின் கண்ணியமான விண்மணியென விளங்காநின்ற சாங்கோபாங்கரெனப் புகழ்நாமதேயம்பெற்ற வேத விற்பன்னராகிய "யாக்கோமே கொன்சால்வேஸ்" என்னு மருந்தவ முனிவரா லருளிச்செய்யப்பட்ட "**வியாகுல பிரசங்கம்**" என்னுமிப்புத்தக மானது கிறீஸ்தவர்களுக்குப் பத்தியையும் பாவத்தில் வெறுப்பையும் வருவித்தற்குரிய வொரு மேலான கருவியேயாம்.

இதில், ஆதியிலே வாக்குப்பண்ணப்பட்டவரும், அக்காலந் தொடங்கிப் பிதாப்பிதாக்கள் முதலான மகாத்துமாக்களால் காத்திருக்கப் பெற்றவரும், பரிசுத்த கன்னியாஸ்திரீ திருவயிற்றி லவதரித்துப் பிறந்தவரும், அமிர்த போதனைகளாலு மற்புதங்களாலு முலகத்தைப் பிரமிக்கச் செய்தவருமாகிய நம்முடைய நாயக யேசுக்கிறீஸ்து மானிட ரீடேற்றத்தை நிறைவேற்றி யவர்கள் சிறையை மீட்டுப் பரகதிவாழ்வின் உரிமையைக் கொடுக்குந் தகைமையையுடைய தமது திருப்பாடுகளின் நேரஞ் சமீபித்ததைக்கண்டு முந்தமுந்தப் பூங்காவனத்தில் பிரவேசித்துத் தியானித்ததும், யூதர்கையி லகப்பட்டதும், அடிபட்டதும், முண்முடி தரிக்கப்பட்டதும், சிலுவையைச் சுமந்துகொண்டு கபாலமலைக்குச் சென்றதும், சிலுவையி லறையுண்டதும், மரணித்ததுமாகிய சகலவித பாடுகளினும் சங்க்ஷேபம் ஒன்பது பிரசங்கங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது.

இதிலடங்கிய பிரலாபத்திற்குரிய விஷயங்களை எப்பொழுதும் விசேஷமாய்த் தபசுநாட்களில் பத்தியோடு வாசித்துத் தியானிக்கில் மிகுந்த பலனை யடையலாயிருக்கும்.

இதனை வாசிக்கிறவர்கள் உலகபிராந்திகளை யொழித்து, மனதை ஒருவழிநிறுத்தி, அமைதியாயிருந்து தலையிற் பாகை முதலிய இல்லாமலும், வாயிற் தாம்பூலம்முதலிய வடசாமலும், சந்தோஷகாரணங்கள் யாவையுந்தள்ளி, மிகுந்த வியாகுலத்துடன் யேசுக்கிறீஸ்துநாதர் பாடுபட்ட அந்தநாளை இந்தநாளாகப் பாவித்து, அவர்பட்ட பாடுகளெல்லாந் தங்கண் முன்பாகச் சம்பவிக்கிறதாக ரூபிகரித்துக்கொண்டு இரக்கவோசையாய் வாசித்தல்வேண்டும்.

இதனைக் கேட்போரு மவ்விதமே அடக்கவொடுக்கமாய்க் கை குவித்தமேரையாயிருந்து இதிலே தங்களுடைய மனதுகளை யழுத்திக் கேட்கக்கடவார்கள். இப்படிச் செய்வார்களேயானால் அது சகல துர்க்குணங்களுக்கும் ஓர் பொதுவான அவுடதமாயிருக்கும்.

மேலும் இதன் ஈற்றில் கிறீஸ்தவர்களின் நன்மையையும் வசதியையும் விரும்பித் தபசுகால உபயோகத்துக்கடுத்தவைகளாகிய பிழைதீர்க்கிறமந்திரம், யேசுநாதர்பட்டபாடுகளின் பிரார்த்தனை, சிலுவைப்பாதை முதலியவைகளுஞ் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னுக்கொலுவென்கிற மகா அசனசாலே

யேசுநாதர் தாம் பாடுபடப்போகிற நாளுக்கு முந்திய நாளாகிய வியாழக்கிழமை யிரவு தமது சீஷர்களுடன் அசனம்பண்ணிக்கொண்டிருக்கையில் அப்பத்தை யெடுத்து ஆசீர்வதித்துப் பிட்டுத் தம்முடைய சீஷருக்குக் கொடுத்து: "இதை வாங்கிப் புசியுங்கள், இது என் சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்துத் தோத்திரஞ் சொல்லி அதை அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் எல்லோரும் இதிலே பானஞ் செய்யுங்கள்—ஏனெனில், இது பாவங்களின் பொறுத்தலினிமித்தம் அநேகருக்காகச் சிந்தப்படும் புதிய உடன்படிக்கையின் என் இரத்தமாயிருக்கிறது" என்றருளித் திவ்விய நற்கருணை என்னுந் தெய்வீக விருந்தை ஏற்படுத்தச் சித்தமானார்.

**பரிசுத்த பரம திவ்விய நற்கருணைக்கு எந்நேரமும் ஸ்துதியும் ஸ்தோத்திரமும் உண்டாகக்கடவது.**

(இதைச் சொல்லும் ஒவ்வொரு முறைக்கும் 100 நாட் பலன்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# வியாகுல பிரசங்கம்

இதில்
எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து
மானிடர் ஈடேற்றத்துக்காக அனுபவித்த
**பாடுகளின் சங்க்ஷேபம்**
ஒன்பது குறிப்பிடப் பிரசங்கங்களாக
வகுக்கப்படுவது



## முதலாம் பிரசங்கம்

யேசுநாதர்
பூங்காவனத்திலே தியானத்தோடு பாடுபட்ட
குறிப்பிடங் காண்பிக்கப்படுவது

வானமும், பூமியும், விருக்ஷ, மிருக, பக்ஷி முதலான சகலத்தையு முண்டுபண்ணினவரான சருவ வல்லப பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவென்கிற திரீத்துவத்தின் இரண்டாம்பேராகிய வெங்கள் நாயக யேசுக்கிறீஸ்து பாவிகளாயிருக்கிற எங்களுக்காகத் தம தனந்த செல்வ பாக்கியமுள்ள மோக்ஷராச்சியத்தினின்று துக்கசமுத்திரமாயிருக்கிற பூமியிலே மனுஷனாகப்பிறந்து பாடுபட்ட அளவற்ற பாடுகளைப் பிரசங்கமாக இந்தத் தபசுநாளையில் துவக்கம்பண்ணுவது:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேதெனில், நெறி நீதிபொருந்திய சுகிர்த மகிமை யுடைத்தான நரபதியானவிராயனுக்குத் தன் குடியானவன் செய்த துரோகத்துக்காக அவனை வதைக்கப் பறையிட்டுக் கொண்டுபோகிறதை அந்த இராசாவின் குமாரன் கண்டு மகாதயாபர கருணையாயிரங்கி அவனைக் கொல்லவேண்டாம், நான் அந்தக் குற்றத்தை உத்தரிப்பே னவனுக்காக நான் கொலையுண்பேனென் றவன் விலங்குகளைத் தா னணிந்து கொலைக்களத்துக்குப் போவானாகி லப்படிப்பட்ட காரணத் தைக் காண்கிறவர்கள் அந்தக் குமாரன்பேரி லெத்தனை தயாபர பக்ஷமாயிரார்களோ? இந்தக் கிருத்தியத்தை மகா கீர்த்தியாய்ச் சகல லோகத்துக்கும் பிரசித்தம்பண்ணிச் செப்புப் பத்திரங்களிலெழுதி நித்தமும் நினைக்கமாட்டார் களோ! நினைப்பார்களே. அப்படிப்போ லெங்களுடைய ஆதித் தகப்பனு ராதாஞ்செய்த பாவத்துக்காக அவனு மவன் புத்திரர்களாயிருக்கிற சகல மனுச் செனங்களும் நரகமரணத் துக் கேதுவாய்ப்போகிறதைப் பிதாவாகிய சருவேசுரனுடைய மெய்யான குமாரனாகியவெங்கள் நாயக யேசுக்கிறீஸ்து கண் டளவில்லாத கிருபையோடிரங்கி யெங்கள் பாவக்குற்றங்க ளெல்லாந் தாமே சுமந்தெங்கள்பேரில் வரவிருந்த மரணத்தை விலக்கி யெங்களுக்காகத் தாம் பாடுபடவும் மரணிக்கவுஞ் செய்தாரே. ஆனா லிப்படிப்பட்ட கிருத்தியத் தையு மெங்களுக்காக வநுபவித்தசகல பாடுகளையும் மரணத் தையும் நாங்கள் நித்தமும் நினைக்கவு மவருடைய துக்கித்த ரூப சுரூபத்தை வியாகுலத்துடனே கண்டிரங்கி அவர்பேரிற் பக்ஷ பிரமாணமாயிருக்கவும்வேணுமே. அதினால் முதலவர் பூங்காவனத்திற் றியானத்தோடிருந்து பட்ட வாதைகளைப் பிரசங்கிப்போம்.

அதெப்படியென்று லுதித்த அருணனனது முப்பது நாழிகை அயனம்பண்ணித் தனது பிரபைக் கிரணங்களாற் சகல லோகமும் பிரகாசித்து மனுச்சித்தங்களைச் சுக செல்வ சந்தோஷங்களால் நிரம்பி அஸ்தமானத்துக்கு வந்த வுடனே லோக வலங்கிர்த மெல்லாம் மறைத்துச் சம்பத்துக்க ளொளித்து மனுஷர் கண்களெல்லா மிருளாக்கிச் சகலதிக் கினு மந்தகாரம் வியாபித்திருக்குமே. அம்மருவாதிபோலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்விய சூரியனுகிய வெங்கள் நாயக யேசுக்கிறீஸ்து முப்பத்துமூன்று வருஷம் பூலோகத்திலே வாசமாயிருந்து தமது சுகிர்தங்களா லுலோகத்தைப் பிரகாசித்து மனதுகளை வாக்கியங்களா லமிர்தம் நிரப்பி ஆச்சரியங்களாற் சுக செல்வங்களைக் கொடுத்ததின்பின் னிப்போ மரணமென்கிற மேகத்தினுள்ளே மறைய நேரமாச்சுதே! ஆகையா லெங்கள் முகங்களி லொளிவு மறைத்து மனதுகளிலே துக்கமுஞ் சலிப்பும் நிறைந்து முந்த முந்த நினைக்கிற வியாகுல மெப்படியோ வென்றால் எங்கள் கர்த்தரான யேசுக்கிறீஸ்து எங்களீடேற்றம் நிறைவேற்றப் பாடுபட வேணுமென்கிறகாலம் முடுகினதைக்கண்டு தம்முடைய மரணத்துக்குமுன் மாதாவைத் தெரிசித்து, மினவி யனுபாதம் வாங்கவேணுமென்கிற சித்தமா யவரிருந்த வெத்தானியவென்கிற வூருக்கெழுந்தருளினர்.

அந்நேரந் தம்முடைய மாதாவைக்கண் டுன்ரத்த வசனங்களையு மதற்கு மாதா மறுமொழிசொன்ன வசனங்களையு முங்களுக்குச் சொல்லக் கண் கண்ணீருறணியாக மறைக்குதே. மனது வியாகுல பிரலாபத்தினுற் சோபிக்குதே. ஐயோ! ஆண்டவர் மாதாவைப் பார்த்துச் சொன்ன மேரையைக் கேளுங்கோ :— எனது தயாபரமுள்ள மாதாவே! ஆத்தும சரீரம்போ லொன்றுயிருந்த வும்மையு மென்னையு மின்று விட்டுப் பிரிக்கப்பண்ணுகிற நெஷ்டூர ஈரரிவாளை யுமக்குக் காண்பிக்க வந்தேன். அதேதென்று லென்சீஷனுயிருந்த யூதா சென்னைச் சதிபண்ணத்தக்கதாக அவன் மனதிலே பிசாசு குடிகொண்டிருக்கிறது. என்பிரசையான யூதர் குரோத வைராக்கியமென்கிற வாள்களை யுறைகழற்றிக்கொண்டென்னைப் பிடிக்கவும் வாதிக்கவு மாலோசனை பண்ணுகிறார்கள். ஆயுதங்களைக் கூர்மையாக்குகிறார்கள். என்னைக் கட்டக் கம்பாங்கயிறுகளு மிருப்புச் சங்கிலிகளும் மூட்டுகிறார்கள். என்னையடித்து வாதிக்கக் கசைகளை... சாட்டை சம்மட்டிகளையுங்கொண்டு மூங்கிற்றடி... மொடித்து முள்ளுக்களாற் சிரசி லழுத்த முடிகளு... மாக்குகிறார்கள். என்னைச் சிலுவையிலே யறைய ... யுஞ் சிலுவைமரத்தையு மிது முதலான வாதி...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வியனங்களையு மியற்றுப்பண்ணுகிறூர்கள். இப்படிப்பட்ட வாதைகளா லென்சரீரத்தி லோர்துள்ளி யிரத்தமு மிருக்க மாட்டாது. மாங்கிஷம் மாங்கிஷமாயிராது. முகம் முகமா யிராது. என்பு, பொருத்துக்கள் பிசகி, நொருங்கி, சிரசில் ரோம மிசிபட் டும்முடைய குமாரனென்கிற வுருபமுஞ் சாயலு மடையாளமு மொன்றுங் காண்கிறதா யிராது. ஆனு லென் னன்புள்ள மாதாவே! இப்படிப்பட்ட வசன மும்து செவிக்கேறியதால் நீர் துக்கிக்கவேண்டியதல்ல. உம்முடைய வுதரத்தி லெடுத்த சரீரம் வாதிக்கப்படுவதென்றுங் கொங்கை களா லமுதங்கொடுத்து வளர்த்ததென்றும் பரதவிக்க வேண்டியதல்ல. என் னுத்துமம்போ லொன்ருயிருந்த நீரும் நாமு மின்றுவிட்டுப் பிரியவேணும். நானும்மைக் காணு மலும் நீரென்னைக் காணுமலு மிருக்கவேணும். என்பிதா வின் கட்டளை நிறைவேற்றப்போக வும்முடைய அமிர்தம் நிறைந்த வாக்கால் விடைதரவேணுந் தாயேயென்று சொன்னுர்.

இப்படிப்பட்ட வசனங் கேட்டவுடனே குமாரன் சொன்ன வாதை யாயுதங்க ளெல்லாந் தமது சரீரத்திற் பட் டுருவினது போல் மேலெல்லா மழற்றுதலா யிருதயஞ் சோகவக்கினிச் சூளைக்குச் சமானமா யிருகண் நீராறுகளாய் நடுக்கமு மேக்கமுந் துயரமுமாகத் தரையில்வீழ்ந் துரைத்த மொழியாவது:— என் பிராணனுஞ் சீவனுமாகிய வென் மகனே! நீ ரென்னைவிட்டுப்பிரிந்தா லெனு துயிரிருக்குமோ? என்முகத்தி னழகான வும்மைக்காணும லென்முகத்தி லொளி யிருக்குமோ? என்கண் வெளிச்சமானது நீரல்லவோ? எனது சகல பாக்கியமுஞ் செல்வமுந் திரவியமும் நீரல்லவோ? நீரென்னை விட்டுப்பிரிந்தால் நான் சீவிக்கிற வகையுண்டோ? உம்மைப் பெற்றநாள் துவக்கி மற்றொருவர் கைக்கொடாம லென் கரத்திலேதானே ஏந்தி அணைத்திருந்தேனே. ...றுபோது ஏரோதேசு செய்த நெருக்கிடை தப்பத்தக்க ... கூடமலைகளிலேறிக் காடுகளைச்சுற்றிப் பரதேசந் ...னே. நீர் பிரசங்கம்பண்ணுகிற தேசங்களிலேபோய் ...யெல்லாங் கூடநடந்து வாசனைகளுடைய வமிர்தஞ் ...சரியங்களைக்கண்டு வெகுமானித் திருந்தேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



ஆனு லிப்போ நீரென்னை விட்டுப் பிரியவேணுமானுல் நீர் போகிற பயணம் நானும்போகவேணும், உம்முடைய சிலுவை நானுஞ் சுமக்கவேணும், உம்முடைய கரங்களி லறையப்படுகிற வாணிக ளென் கைகளிலு மறையப்பட் டும்முடைய பிராணனே டென்சீவனும் போகவேணும். அப்படியல்லாதே என் சீவனுன மகனே! உம்மைவிட்டுப் பிரிந்திருக்கக் கடவே னல்லவென்று மாதா சொன்ன மொழிக்கு மறுபடியும் ஆண்டவ ரருளுவது :—

என்னேசமுள்ள மாதாவே! அப்படிச் சொல்ல வேண்டிய தல்ல. நான் மரிக்கவும் நீர் சீவிக்கவும் பிதாவினு டைய வபிப்பிராயமாயிருக்குது. என் னுடலினின்று சிந்தின விரத்தம் நீர்காணவு மென்சிலுவை யடியி லிருக்கவு மென் சீவன் போகிறதைக்கண்டு வியாகுலப்படவு மென்னுடைய சகல கஸ்திவாதைகளிலே துக்கத்தை யனுபவித் தென்கூட மனுஷ ரீடேற்றத்துக்குத் துணைச்செய் தென்மரணத்துக்குப் பின் னென்னைப் பின்செல்லுகிறவர்களுக் காறுதலா யிருக்கவும்வேணும். ஆனதினு லிப்படிப்பட்ட பிதாவின சித்தத்துக்கு நீர் சந்தோஷமாயிருக்கவேணுமென் ருறுதல் சொல்லி மினவி அனுபாதம்வாங்க முடுகினுர்.

ஐயோ கிறீஸ்தவர்களே! ஓரிருதயம் போலிருந்த மாதா வுங் குமாரனும் பிரிந்துபோகிற இந்தவேளையில் வந்த துக்க மோவென்ரு லிருவர்நடுவிலே ஆகாசத்தால்வந்த வோ ரீரரி வாள்பட் டுடுருவினதுபோ லிருவருடைய விருதயமு மிருபாதி யாய்ப்பிளந்து கண்கள் கண்ணீ ருற்றுக்களா யோடத் துவங் கினதே. ஆனதினு லிப்படிப்பட்ட துக்கத்தைப்பார்த் தெங் கள் மனதுந் துக்கசமுத்திரமாகி, எங்களுக்காகப் பாடுபடப் போகிற ஆண்டவருடைய திருப்பாதத்திலே சாஷ்டாங்கமாய் விழுந் தெங்கள் பாவங்களைப் பொறுக்க மன்ருடுவோம்.

இத்தன்மையா யெங்களாண்டவர் மாதாவை மினவியனு பாதம் வாங்கினதின்பின் எருசலேம்நகரிக் கெழுந்தருளினுர். அந்நாளிலே பாஸ்குத்திருநாள் முடுகினதினுற் திருநாளின் சடங்கெல்லாஞ் சென்னுக்கொலுவென்கிற மகாசனசாலையில் நிறைவேற்றிச் சீஷர்களுடைய கால்களைக்கழுவித் தம்முடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்துக்கு நினைவாக நற்கருணையென்கிற மகா தேவரக சியத்தின் போசனத்தை யுண்டாக்கித் தமது சீஷர்களுக்குக் கொடுத்தார். அந்நேரம் அவர்களி லொருவன் தம்மைச் சதிபண்ணுவானென்கிற வசனத்தைத் திருவுளம்பற்றினர். அப்படிப்பட்ட வசனத்தைத் துரோகியான யூதாசு கேட்டுச் சற்றுகிலு மையப்படாம லவரோடேகூடப் போசன மனுபவித் தின்னமு மவரைச் சதிபண்ணவேணுமென்று நினைத்தநினைவை விடாம லெழுந்திருந்து யூதர்களுடைய சிரேஷ்டகுருமா ரண்டையிற்போ யென்குருவை யுங்களுக் குக் கையளிக்கவேது தியாகந் தருவீர்களென்று கேட்டான். அதற்கவர்கள் முப்பதுவெள்ளி தருவோமென்று சொன்ன தற்குச் சம்மதிப்பட் டாண்டவரைக் கையளிக்க நல்லநேர முஞ் சமயமும் பார்த்திருந்தான். இப்படிப்பட்ட சதிமான வுபாயமெல்லா மாண்டவ ரறிந்து வெளிவிடாமற் பதினொரு சீஷர்கள்கூடத் தாம் எப்போதுஞ் செபிக்கப்போகிற மேரையாகத் தயிலத்தோப்பின் மலையடிவாரமாயிருந்த யெத்சேமெனியவென்கிற பூங்காவனத்திற்குச் சமீபமாக வெழுந்தருளிச் சீஷர்களைப்பார்த் திந்த விராத்திரியில் நமக் காக நீங்க ளபக்கியாதிப்படுகிறதுண்டு. அதேதெனி லிடையன்பிடிபடக் கிடையாடெல்லா முளறிப் போமென் றெழுதியிருக்கிறதே. அதின்படியே நீங்களெல்லாரு மென்னைக் கைவிட்டுப்போவீர்களென்று திருவுளம் பற்றி னர். இந்தவசனத்தைச் சீஷர்கள்கேட்டு வெகுவாய்க் கிலேசப் பட்டுப் பேதுருவென்கிறசீஷ னெழுந்திருந்து வாய்புதைத்து விண்ணப்பஞ்செய்வது :—ஆண்டவரே! எல்லாருமும்மைவிட் டுப் பிரிந்தாலும் நான் தேவரீரோ டென் பிராணனைச் செல வழிக்கிறதல்லாதே விட்டுப்பிரியமாட்டேனென்று சொன் னன். அப்போ தாண்டவ ரவனைப்பார்த்து, சேவ விருதரங் கூவமுன்னம் நீ மூன்றுமுறை நம்மை மறுதலிப்பாயென் றருளிச்செய்தார். அதன்பின் னவர்களி லெட்டுப்பேரை யவ்விடத்திற் பொறுப்பித்து, பேதுரு, யுவாம், தீயோகு வென்கிற மூன்றுபேரைமாத்திரங் கூட்டிக்கொண்டு பூங்கா வனத்திற் பிரவேசித்து நமதாத்துமம் மரண அவஸ்தையாக வியாகுலப்படுவதென் றருளிச்செய்தார். அதேதென்றாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் படப்போகிற வரிய கஸ்தி, வாதை, நெஷ்டூர, நிர்ப்பந்த மரணத்தையு நினைத் திதெல்லாந் தாம் மனுஷருக்காக வனுபவிக்கச்செய்தே இன்னமு மவர்களிற் சில ரதின்பலனையடையாமற் பாவமிகுதியாய் நரகத்துக் கேதுவாவார்களென்றதைத் திருவுளத்திலறிந் தந்தச்சோகம் மனதில்நிரம்பிச் சருவாங்கமும் அனற்கொளுத்தினதுபோற் றீநாக்கெழும்பி இருதய துவாரமிறுகி மூச்செறியமாட்டாமல் மரண அவஸ்தைக்குச் சமானமான துக்க மனுபவித்ததைக் காண்பிக்கச்செய்தார்.

அதின்பின் மூன்று சீஷரையும்பார்த்து: நீங்கள் பேய்ச் சோதனைக் கேதுவாகாமற் சாகரணமாய்த் தியானித் திருங்கோ வென் றருளிப்பாடுபண்ணி யொருகல்லெறி தூர மவர்களை விட்டுவிலகி முதற்சாமவிருளிலே பிதாவைப் பிரார்த்திக்கப் போய்த் தரையிலே முழந்தாளிட்டு வானத்தைநோக்கிச் சாஷ்டாங்கமாய் விழுந்தார்.

ஐயோ! எங்கள் பக்ஷபிரமாணமுள்ள யேசுவே! தேவரீரிந்தத்தரையிற் கல், மண், சல்லிமீதே முழந்தாளிலிருக்கக் காரணமேது? வானத்துக்கும் பூமிக்கும் நாயகன் நீரல்லவோ? பிதாவாகிய சருவேசுரனுக்குச் சமானமா யொருசிங்காசனத்திலிருக்கிறது நீரல்லவோ? ஆனு லிப்போ பூமியில் முழந்தாளிட் டிருப்பதென்ன? சகல லோக சக்கிரவாளமுமது கரத்தி லேந்தத்தக்க வலதுள்ள நீராகி லிப்போ வசப்பிழையாய் விழுந்திருப்பதென்ன? உமது மோக்ஷானந்த மகிமையுள்ள முகமண்டலந் தரையிற் பணிந்திருப்பதென்ன? என்னுடைய அக்கிருத்தியமான தும்மைச் சவிகேடாக்கினது. என்னுடைய வாங்கார மும்மைச் சொற்பப்படுத்தினது. ஆனுற் கிறீஸ்தவர்களே! இந்தப்பிரகாரமாயிருந்து நம்முடைய ஆண்டவர் மூன்றுநாழிகைத்தியாலந் தமதுபிதாவைப் பிரார்த்தித்துக்கொண்ட மேரையைக் கேளுங்கோ:—

முதல்நாழிகையிற் பிரார்த்தித்த மேரையாவது:— என் பிதாவே! உமது ஞானதிருஷ்டியாற் பிரசவித்த சுதன் நான்தானே. ஆதாமென்கிற ஆதிமனுஷனுடைய பாவியான பிள்ளைகளின் வேஷந்தரித்திருக்கிறது நான்தானே. நானெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத்த பெலவீன மனுஷசுபாவந் துக்கசோப விருளடைந்து மரணிக்கிற வச்சத்தோடிருக்கிற வேஷத்தைப்பாரும். உமதப்பிரமாண தெய்வீக வல்லப சுபாவமுள்ள குமாரன் நிலத்தில் விழுந்திருக்கிற துயரத்தைப் பாரும். என் பிதாவே! உமது நேசமுள்ள சுதனை எனக்குவந்து சம்பவிக்கப் போகிற துக்க மெண்ணளவில்லையே. சத்துராதியான யூதர்க ளென் பேரிற் பற்றியிருக்கிற குரோத மிம்மட்டென்றில்லையே. இப்படிப்பட்ட பாரத்தைவிலக்கி லோகம் வேறுபாயமா யீடேறவு மிந்த வியாகுலத்தின் பாத்திரம் விட்டகல வியலுமானு லப்படியே செய்வதாக. ஆகிலு முமது சித்தத்தினனுகூலப் படியல்லாதே என்மனுஷீக மனதாம்படியே வேண்டாம். இந்த மனுஷ சரீரம் பெலவீனமானதினு லப்படியே கருதுகிலு மனதில் மிகு திடாரிக்கமுண்டு. உமது சித்தத்தின் படியே பாடுபடவும் மரணிக்கவு மாயத்தமாயிருக்கிறேனென் றறிந் தப்படியே பிரார்த்தித்துக் கொண்டார்.

இந்தப் பிரார்த்தனையி லெங்க ளாண்டவருக் கொரு பிரத்தி யுத்தரமுங் கிடைக்கவில்லை. ஆகாசவாசல் தாள்பூட்டின மேரையாய்ப் பிதாவாகிய சருவேசுரன் குமாரனுக் கொரு வசனமு மருளிச் செய்யவில்லை. அத்தா லெங்க ளாண்டவருக் குண்டாயிருந்த சோகசந்தாப மதிகமாயிற்று. ஆனதினு லெழுந்திருந்து சீஷர்க ளண்டையிலே போயவர்கள் நித்திரைச் சோத்தியமா யிருக்கிறதைக் கண்டு கடினமாயருளிச்செய்வது :— நீங்கள் நம்மோ டொருநாழிகை யானுலுங் கண்விழித்திருக்க மாட்டாதே போனீர்களோ வென்று திருவுளம்பற்றி, மறுபடியு மிரண்டாம் நாழிகையிற் பிதாவைப் பிரார்த்திக்கத்தக்கதாக முதலிருந்த விடத்திற் போய் ஆகாயத்தைநோக்கி முழந்தாளிட்டு முதற்பிரார்த்தித்த மேரை இப்படியே பிரார்த்தித்துக் கொண்டார் :— எனது தயாபரமுள்ள பிதாவே! என்பேரில் வரப்போகிற வதிகவுக்கிரமமான மரணவாதைகளு மளவற்ற நிந்தை நிர்ப்பந்தங்களும் நா னனுபவியாமல்விலகத் தேவரீருடைய வபிப்பிராயத்துக் கேற்றிருக்குமாகி லப்படியே யுண்டாகவும் அல்லதெல்லாம்படச் சித்தமானு லுமது கருணையனுகூலத்துக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெனக் காயிரம் பிராணனிருக்கிலுஞ் செலவழிக்கவும் நூறுயி ரஞ் சிலுவைமரணங்க ளனுபவிக்கவு மிகுந்த சந்தோஷத்துட னிருக்கிறேனென்று பிரார்த்தித்துக்கொண்டார். ஆனு லிந் தப் பிரார்த்தனைக்கும் மறுமொழிகிடையாததினு லெங்க ளாண்டவருடைய வியாகுலங்கள் மிகுதியதிகரித்து மறுபடி யெழுந்திருந்து புத்திர ரண்டையேபோ யவர்களுடைய நித்திரைச்சோத்தியங் கனமாயிருக்கிறதைக் கண் டொன் றும் வசனியாம லவர்களைவிட்டு மூன்ரும்நாழிகையிலும் பிதாவை மன்ருட வத்தலத்துக்குத்தானே யெழுந்தருளினுர். இந்தவேளையி லெங்களாண்டவருக்குவந்த முசிப்பு மனப் பீடை, சந்தாப மேராளமாய் மிகுந்து மரணகேவலமாய் வாதிக்கப்பட்டிருந்தார். இப்படியே மரணச்சமீபமான வாதையோடிருக்கிறவேளையில் வெகு அபயசத்தமாய்க்கூப் பிட் டென்பிதாவே! உமது பிரியகுமாரனுன வென்பேரிற் தயையாயிரும். உமது பக்ஷமுள்ள சுதனுன வென்பெரி லும்முடைய தயாபர கண்களைநோக்கி யிந்தமரணவாதைக ளகற்றுகிலும், வருகிலு மும்முடைய சித்தத்தின்படியே யாகட்டென்று கூப்பிட்டு மன்ருடினவிடத்திலேயு மொரு மறுமொழியுங் கிடைக்கவில்லை.

ஆனதினுல் தமக்குச் சம்பவித்த தனிமையின் மேரையும் பரலோகவாசல் தாளிட்டதாயிருக்கிற மேரையும், மூன்று முறை பிரார்த்தித்து மோ ருத்தரமும் பிதாவாற் கிடையாத மேரையும் விசாரித் தத்தா லனுபவித்த துக்கத்தின் மிகுதியும் சோகத்தின் குவியலும் வியாகுலத்தின் தாழ்வு மிவ்வளவென் றியம்பக் கூடுவதல்ல. அப்படிப்பட்ட துக்கத்தினுற் பிராண னடங்க முடுகினதாய்ச் சருவாங்கமு மொருகாலுங் காணுத விரத்த வேர்வை வேர்த்துச் சகல நரம்புகளிலு மென்புப் பொருத்துகளிலு முரோமத்துவாரங்களிலு முதிரந் ததும்பி, வழிந்த குமிழி பீரிட் டாண்டவருடைய திருமுகமண்டலந் திரு அஸ்தபாதமுதலான அவயவ வுறுப்புக்கள் துவைந்து திருத்துகில் நனைந்து அந்தவிரத்தந் துள்ளி துள்ளியாய்ச் சொரிந்து நிலத்திற்பெருகி யுதிரவாரு யதி லெங்க ளாண் டவர் விழுந் திருந்தார்.

117862

149

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயோ! அனந்த பிரமாண வல்லபமுள்ள வென்னுண்டவரே! ஏதுநிமித்தமாக விம்மாத்திரம் வசப்பிழையாய்த் தரையில் விழுந்திருக்கிறீரோ? உமது தர்யுதரத்திலெடுத்த விம்மாத்திர முதிர மேதுகாரணமாகப் பூமியிலே சிந்தப்படுவதோ? எங்க ளாதித் தகப்பனுருக்கு முகவேர்வையினுற் பிழைக்கக் கற்பித்ததினுல் நீர் வேர்வை வேர்க்கிறீரோ? அவன்செய்த பாவத்துக் கந்தவாக்கினை யனுபவித்தவிடத்திலே நீரொரு தோஷமுமில்லாம லிப்படிப்பட்டவாதை யனுபவிப்பதேது? அவனுக்குக் கற்பித்த ஆக்கினை முகவேர்வைமாத்திரமென்ரு லுமக்குச் சருவாங்கமும் வேர்வை வேர்த்ததேது? அவனுக்கு வேர்த்த வேர்வை தண்ணீரா மென்ரு லும்முடைய வேர்வை யுதிரமாவதென்ன? அவன் பாவத்தினு லனுபவித்த வாக்கினையினு மும்மக் கதிகமான வாக்கினையேது? தர்மிஷ்டவெர்ணுத்து வசனித்ததின்படியே ஆத்துமாக்களைச் சுத்திகரம்பண்ணவும் பாவ அழுக்குகளைக் கழுவவு மிந்தப் பவித்திரமான வுதிரஞ் சிந்தப்பட்டதென்று சொல்லியிருக்குதே.

ஆனுற் பாவிகளாயிருக்கிற கிறீஸ்தவர்களே! இந்த விரத்த சாகரத்திலே உங்கள் பாவ அசுத்தங்களைச் சுத்தமாக்க வாருங்கோ. இந்த நிர்மலமான கங்கையிற் றூய்மையாக்க வாருங்கோ. அல்ல தித்தனை வசைப்பிழையாகத் துயரத்தோடு விழுந்திருக்கிற ஆண்டவருக் காறுதல்பண்ண வாருங்கோ. வானத்திலேயும் பூமியிலேயு மவருக்கோராதாரமு மில்லாம லிருக்கிறதைப் பாருங்கோ. பத்திசுவாலகரென்கிற சம்மனசுகளே! நீங்கள் தேவலோகத்திலே எங்களாண்டவருடைய திருமுகத்தைக்கண் டனந்த சந்தோஷமடைகிறபோ திப்போ மனுலோகத்திலே அவர் படுகிற வியாகுலத்துக்கு யாதொரு ஆறுதல்சொல்ல வரவேண்டாமோ? காபிரியேலென்கிற தேவதூதனே! நீரிந்த ஆண்டவர் பூலோகத்திலே பிறக்கிற சந்தோஷமங்களஞ்சொல்ல வந்தபோதே இப்போதவர் மரண அவஸ்தை வாதை யனுபவிக்கிறவேளையிற் தேற்றரவுபண்ணவுங் கைதூக்கிவிடவும் வரவேண்டாமோ? பரமண்டலங்களிலிருக்கிற அநாதிபிதாவான சருவேசுரனே! இவருமது திருக்குமார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னல்லவோ! தபோரென்கிறமலையில் விசுவரூபமானபோதும், யோர்தானென்கிற கங்கையிற் பாவவாளன் வேஷமாய் ஸ்நானம் பெற்றபோதும் நமது பக்ஷபிரியமுள்ள குமாரனிவர்தாமென் றறிவித்தீரே. இப்போ தனிமையோடேயும் வசக்கேடோடேயும் விழுந்து மரணவியாகுலமா யிருக்கிறவேளையிலொருவசனமுஞ் சொல்லாமலிருப்பதென்ன? என் மகனேயென் றழையாதிருப்பதென்ன? ஒரு சகாயமு மாறுதலு மனுப்பாமலிருப்பதென்ன?

ஐயோ கிறீஸ்தவர்களே! இந்தவேளையிற் பிதாவாகிய சருவேசுரன் தமதுகுமாரனுக்கு ஆறுதல்பண்ணின தன்மையைப் பாருங்கோ! காபிரியேலென்கிற தூதனை யவரண்டையிலே யனுப்ப அந்தத் தூதன்சொல்லுவது:—தேவகுமாரனே! நீரனுபவித்திருக்கிற விந்தச் சோகவியாகுலத்தையும் வசக் கேடுகளையுந் தனிமையையுங் கண்டிருக்கிறேன். பெலவீனருக்குப் பெலன் கொடுக்கிறதுந் துக்கித்தவர்களுக்குத் துக்க நிவாரணம்பண்ணுகிறதும் நீர்தாமே. உமக்கெந்தவித மென்னலாறுதல்பண்ணலாமோ. உமக்கு மனுஷர்பேரிலுள்ள தயையு மவர்களை இரட்சிக்கவுள்ள கருணையுமில்லாதிருக்கப்போகாதென்று விந்தத் துக்கமுமில்லாமற் போகமாட்டாது. அவர்களுடைய ஆக்கினை நிவாரணம்பண்ணவேணுமாகி லும்முடைய வாதை விலகுதலாயிராது. அவர்களுக்குச் சததமான சீவியத்தைக் கொடுக்கவேணுமாகில் நீர் மரணத்தை யனுபவிக்க வேணும். அதேதெனில், மனுஷ சென்ம மிரட்சிக்கிறவர் நீரல்லாது வேறில்லையே. ஆனதினால் நீர்தாமே பாடுபட்டு லோகத்தை இரட்சிக்கவேணுமென்று தேவதூதன் விண்ணப்பஞ்செய்தார். அதின்பின் தரையில் விழுந்திருந்த ஆண்டவரைக் கைத்தாப்ரமாயெழுப்பித் திருமுகமண்டலந் தொடுத்து இரத்தப்பிரளயமாயிருந்த சருவாங்கமும் பரிவட்டத்தாற் துடைத்து அவர் மரணிக்கப்போகிற சிலுவை யடையாளமுங் காண்பித்தார்.

ஐயோ என்னாண்டவரே! உமது தயையுள்ள பிதா உமக்கனுப்பின வாறுத லிவ்வண்ணமோ? பாடுபடவேணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்கிறவசன மாறுதலாமோ? மரணம் விலகப்போகா தென்றும் பிராணனைக் கொடுக்கவேணுமென்றுஞ் சகல வாதை வேதனை அனுபவியாமல்விடப் போகாதென்று மிவ்விதவசன மும்முடைய சித்தத்துக் காறுதலாமோ? ஐயோ! எனது சோகம் நிறைந்த ஆண்டவரே! எந்தனை வாகிலு மும்முடைய துக்கத்துக் கின்றொரு ஆறுதலு மில்லையே.

ஐயோ பத்தியுள்ள கிறீஸ்தவர்களே! இரக்கம் நிறைந்த மனதுள்ள ஆத்துமாக்களே! எங்கள் பிராணனுமா யெங்கள் சகல நன்மையு மொரே யாதாரமுமாயிருக்கிற ஆண்டவ ரின்றெங்களுக்காக விம்மாத்திரம் வியாகுலமாய் மரணவாதைக்குச் சமீபமாயிருக்கிறவிடத்திலே அதே தென்று விசாரிக்க வேண்டாமோ? கூடத்திரிந்த சீஷன் சதிமானஞ்செய்தானே. வேதம் போதித்த யூதர் குரோத விரோதங்கொண்டார்களே. பூலோகத்தை உண்டாக்கின ஆண்டவரைப் பூலோகத்தி லொருவருந் தாபரிப்பவரில்லையே. தமது அநாதிபிதாவை யத்தனைதரம் பிரார்த்தித்தவிடத் திலேயு மொருவசனமும் ஆறுதலாய்க் கிடைக்கவில்லையே. எங்களாத்துமங்களை யிரட்சிக்கவேணுமென்கிற தயையல் லாதே தமது குமாரனுடைய துக்கத்தைப் பார்க்கவில்லையே. தேற்றரவுபண்ணவந்த சம்மனசுஞ் சிலுவையைக்காண்பிக் கிறதல்லாதே ஆறுதல் சொல்லவில்லையே. தம்மைப்பெற்ற மாதாவாகிலு மிந்நேரத்தி லாதரிக்க வரவில்லையே. ஐயோ கிறீஸ்தவர்களே! இப்படியே தமது தயையுள்ள பிதாவினு லுந் தூதரானவர்களாலுந் தாம் படிப்பித்த சீஷர்களாலு முண்டாக்கப்பட்ட மனுஷரொருவராலு மொருசகாயமும் வசன ஆதாரமுமில்லாம லெங்களாண்டவர் மரணிக்கிற வாதையாய்த் தமது இரத்தப் பிரளயத்தில் விழுந்திருக்கிற விடத்திலே நாங்களாகிலு முடுகித்து நமஸ்கரித்து யாதோ ராறுதல் சொல்லப்போவோம்.

ஆண்டவரே! தேவரீ ரிப்படிப்பட்ட நெஷ்டுர மரணத் தையுங் கடினமான வேதனைகளையு மனுபவிக்க வேண்டா மென்றுசொல்லுவோம். ஆகிலு மிப்படிச்சொல்லுகி லெங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBL… JAFFNA

ளாத்துமங் கரையேற வடைமானமில்லையே. ஆனா லிந்த வாதையெல்லாம் நாங்கள் எங்கள் பாவத்துக்காக அனுபவிப் போமென்று சொல்லுவோம். ஆகிலும் நாங்களெத்தனை வாதை யனுபவித்தாலு மெங்கள் பாவ மெங்களா லுத்தரிக்க ஏலுவதில்லையே. அப்படியென்றால் வேறெந்தவாறா யின்றெங்க ளாண்டவருக் காறுதல் சொல்லலாமோ. ஒருவகை யாய்மாத்திர மவருடைய துக்க மாறுதலாயிருக்கும். அதேதெனி லவர்படுகிற கஸ்திகளெல்லா மெங்கள் பாவத்துக்காக வேண்டிப் படுகிறதினா லெங்கள் பாவங்களை நாங்கள் விடுவோமென்று விண்ணப்பஞ்செய்தா லவருடைய துக்கஞ் சிறுகப் பண்ணுகிறதாயிருக்கும்.

ஆகையாற் பத்தியுள்ள கிறீஸ்தவர்களே! இப்படிப்பட்ட ஆறுதல் வசன மெங்களாண்டவருக்கு விண்ணப்பஞ்செய்யப் போகவேண்டாமோ? வேணுமே. ஆனதினா லெங்களுக்காகத் தியானத்தில் விழுந்திருக்கிற ஆண்டவரே! உமது திருப்பாதம் நாங்கள் நமஸ்கரிக்கவு மெங்களுடைய பாவத்துக்குப் பொறுதி கேட்கவும் உம்முடைய துக்கித்த திருமுகத்தை எங்களுக்குக் காண்பியுஞ் சுவாமீ.



## உத்தம மனஸ்தாப மந்திரம்

எனது ஏக பக்ஷபிரமாணமுள்ள ஆண்டவரே! சருவதயாபரரான பிதாவே! அனந்த கருணைச் சமுத்திரமான தேவவிராசாவே! இந்தத் துக்கத்தை நீரெங்கள் பாவத்துக்காக அனுபவிக்கிறதினா லின்று துவக்கமாக வெங்கள் பாவங்களை விடுகிறோம். எங்க ளாங்கார வொய்யாரத்துக்காக நீர் பூமியிலே பணிந்திருக்கிறதானா லின்றுதொடுத் தெங்க ளாங்காரங்களை விட்டுத் தாழ்ச்சி தணிமையோடே நடக்கிறோம். எங்க ளாத்துமங்களைக் கழுவுதலாக்க வுமது திருச் சரீரத்தி னுதிரஞ் சொரிந்ததினா லிந்தவுதிரத்தி லெங்க ளாத்துமங்களைக் கழுவிச் சுத்தமாக்க வுமக்கே கையளிக்கிறோம். இந்நாள்வரைக்கு மறியாமற்செய்த பாவங்களைப் பொறுஞ்சுவாமீ! உம்முடைய அளவில்லாத கிருபையைப் பார்த்துப் பொறுஞ்சுவாமீ! உம்முடைய விலைமதியாத இரத்தத்தின் பெறுபேறுகளைப் பார்த்துப் பொறுத்துக்கொள்ளுஞ் சுவாமீ! ஆமென்யேசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டாம் பிரசங்கம்

## யேசுநாதர் யூதர்கையி லகப்பட்ட குறிப்பிடங் காண்பிக்கப்படுவது

சருவ பராபர தேவ சருவேசுரனுடைய ஏக குமாரனாகிய வெங்கள் நாயக யேசுக்கிறீஸ்துப் பாடுபடத் துவக்கிச் சீஷர்கள் மூன்றுபேர்கூட யெத்சேமெனியவென்கிற பூங்காவனத்திலேபோய்த் தாம் பிதாவைப் பிரார்த்தித்த மேரையுமதி லனுபவித்த வாதை விதனமும் முந்தின பிரசங்கத்திலே சொல்லப்பட்டதே. இன்றெங்கள்நாதனுக்கு யூதாஸ்கரியோத் தென்கிற துரோகிச்சீஷன் சதிமானம்பண்ணின மேரையையும், யேசுநாதர் யூதர்கையி லகப்பட்டு அந்த இராநாலு சாமமும் பட்ட கஸ்திவாதைகளையுஞ் சொல்லுவோம்.

அதெப்படியென்றா லெங்கள் தயாவதிக யேசுநாதர் பூங்காவனத்திலே மூன்றுநாழிகை பிதாவைப் பிரார்த்தித்துக் கொண்டு சருவாங்கமு மிரத்தவேர்ப்பாய் வேர்த்து விழுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதூதனால் தேறுதல்பண்ணினபின் மறுபடி யெழுந் திருந்து சீஷாட்கள் மூன்றுபேரண்டையிற் போனவிடத் திலே அவர்கள் வெகு உறக்கமாய்க் கண்விழியாமலிருக் கிறதைக் கண்டு திருவுளம்பற்றுவது :— இன்னமுஞ் சுகமாய் நீங்கள் நித்திரைபண்ணுங்கோ, நான்மாத்திரம் விழித்துக் காத்திருப்பேன். சதிகாரச் சீஷனென்னைக் காட்டிக் கொடுக்க வாருனே. சத்துராதி யூதர்படைக ளாயுதங்க ளெடுத்துக்கொண் டென்னைப் பிடிக்கவுங் கட்டவும் வாதிக் கவும் வருவதே. இந்தப்படையில் நான்மாத்திர மகப்படப் போகிறேன், நான்மாத்திரஞ் சீவபலியாகப் போகிறேன். மக்களே! நீங்க ளெண்ணிக்கை அச்சமில்லாமற் சுகமா யிருங்கோவென் றிந்தவசனங்களை மொழிந்தவேளையி லந் தத் தயிலத்தோப்பின் மலையடிவாரத்தி லந்த விருக்ஷ அட விக்குள்ளே மனுக்குழாங்கள் காணப்பட்டது; ஆயுதங்க ளுடைய தொனியு மாட்களுண்டைய வதிர்ச்சியுஞ் சேட்கப்பட் டது. உடனே அந்தச் சுறுதியிற் கைவிளக்கு, தாளவிளக்கு, கள்ளவீதுறுவிளக்கு, வெண்கலத்தீவட்டிகளு மெடுத்துக் கொண்டு மகா வந்தகாரவிருளை யூடறுத்துவருகிற செனங் களும்; வாள், சமுதாடு, கிறிசு, எறிவல்லையம், எறிகோல், ஈட்டி, அம்பு, வில்லு, கேடையங்கள் கொண்டுவருகிறவர் களும்; துண்டுக்குழல், கைத்துவக்கு, சதிமானத்துவக்குகள் கொண்டுவருகிறவர்களும்; கம்பாங்கயிறு, இருப்புச்சங்கிலி, பாசம், பூதநாதவிலங்குகளும்; கசை, சாட்டை, சம்மட்டி முதலான சகலவாயுதங்களெடுத்துவருகிறவர்களும்; மூந்நூறு காலாட்களுக் கதிகமாய்ப் படைச்சேவகர் கையிலே யுறை விட்டவாளா யணிவகுத் தவர்களெல்லாருக்கு முதற் தலைவ னாய் யூதாஸ்கரியோத்துச் சதிகாரன் வழிகாட்டிக் காட்டி வருகிறதுங்காணப்பட்டது. அப்போதவ னெட்டவிருந்து கொண்டு கூடவந்த செனங்களுக்குச் சொல்லுவது :— நீங்க ளென் குருவை யறியமாட்டீர்கள்; அவர்முகச்சாயலுள்ள வேறேசீஷனுமுண்டு. இதல்லாம லவருடைய விமரிசையை யும் மாயாரூபத்தையு மறியமாட்டீர்கள். நீங்கள் சத்துராதி கள் பிடிக்கவருகிறதைக் கண்டால் தேவமாயத்தால் விலகி மறைந்துவிடுவார். ஆனதினுல் நான் முந்தப்போய் முன்னுட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலே ஆசரித்துக் கன்னத்திலே முத்தமிடுவேன். அந்த அடையாளம் நீங்கள் கண்டவுடனே தாமதியாமல் முடுகித்து வளைத்துச் சிக்கெனக் கட்டுங்கோவென்று சொன்னான்.

இவையெல்லா மாண்டவ ரறிந்து சீஷாட்களைநோக்கி வசனிப்பது :—இதோ! என்னைப் பிடிக்கவருகிறவர்கள் முடுகித்தார்கள். அவர்களுக் கெதிராக நாங்கள் போவோமென்று சீஷாட்கள் மூன்றுபேரையு மழைத்துக்கொண்டு முன்னுக்கெழுந்தருளினார். அப்போ யூதாசென்கிற சதிகாரச்சீஷன் முன்னேவந் தாண்டவ ரண்டையிலேசென்று, குருவே! சருவேசுர னும்மை இரட்சிக்கவென்று கன்னத்திலே முத்தமிட்டான். அப்போதாண்டவ ரவனைப்பார்த்து முனியாம லன்பனே! ஏன் வந்தாய்? சிநேகங்காண்பித்து வினையஞ்செய்ய வந்தாயோ? ஆசாரஞ்செய்து அவகடம் பண்ண வந்தாயோ? உன் குருவு மாண்டவனுஞ் சருவேசுரனும் நானல்லவோ? இற்றைவரையு மொருகுறையுமில்லாம லுன்பேரிலிருந்த தயையும் பக்ஷமுங்காணவில்லையோ? இன்றுதானே உன்னை யென்கூட வோரணியிலிருத்தி யமுதுகொடுத்து என்கையாற் கால்கழுவித் துகிலால் துடைத்ததல்லவோ? இப்படிப்பட்ட நன்றியெல்லாம் மறந்து ஏதுநிமித்தமா யவநன்றிசெய்தாய்? வெள்ளிக்காசைப்பட்டுச் செய்தாயாகி லுன்னுடைய குருச்சுவாமி முப்பதுவெள்ளிக்கதிகம் விலைபெறமாட்டாரோ? அம்மாத்திரம் வெள்ளி மோக்ஷகருவூலமுள்ள வென்கையா லுனக்குப்பெறப்போகாதோ? ஐயோ பாவவாளனே! உன்னுடைய ஆத்தும மித்தாற் கெட்டுப்போகிறதினா லெனக்குத் துக்கமல்லாது நான் சாகிறதற்குத் துக்கிக்கவில்லையென்று திருவுளம்பற்றினார்.

இப்படித் திருவுளம்பற்றியிருக்கச்செய்தே, சேவகருக்குக் குறித்தவடையாளத்தை யவர்கள்கண்டு முடுகித்தார்கள். அப்போதாண்டவ ரவர்களுக் கெதிராகப்போய், ஆரைத் தேடி வந்தீர்களென்று கேட்டருளினதற்கு, யேசுநசரேனுவைத் தேடிவந்தோமென்று சொன்னார்கள். அதற் காண்டவர் யேசுநசரேனு நாம்தானேயென்று தேவ வல்லமையோடு திருவுளம்பற்றினார். அப்படிப்பட்ட மகிமையுள்ள வச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்தைக் கேட்டவுடனே சகலமான படைச்சேவகரும் மின்னலடிபட்டதுபோலப் பின்பறித்து மல்லார்ந்து விழுந் தார்கள். அப்போது விழுந்தவர்களை யெழுந்திருக்க வரங் கொடுத்து மறுபடியு மாரைத்தேடி வந்தீர்களென்று மென் னைத்தேடி வந்தீர்களாகிலென் சீஷாட்கள் வழிசெல்லா திருங்கோ, நானிதோ விருக்கிறேனென்று பிடிக்க வுத் தாரங் கொடுத்தார்.

அப்போ தவர்கள் கிட்டநெருங்குகிற நேரத்திலே பேதுருவென்கிற சீஷன் வாளையுறைகழற்றி யவர்கள்மேலே வீசினவுடனே மாற்குவென்கிற வொரு சேவகனுடைய செவி யற்று விழுந்தது. அதைக்கண் டாண்டவர் பேதுருவைப் பார்த் துன்னுடையவாளை யுறையிலேபோடு, வாளால் வெட் டினவன் வாளாலே சாகிறதாயிருப்பானே. நமக்கு வேணு மாகில் தேவதூதர்களுடைய வாயிரஞ்சேனைகளை இக்ஷண மழைக்கப் போகாதோ? என்பிதா நிருபித்ததை நா னனு பவிக்கவேண்டாமோ? வேதாகமங்களி லெழுதியிருக்கிறபடி முற்றவேண்டாமோவென்று திருவுளம்பற்றி அறுபட்ட செவியை மறுபடியுந் தமது திருக்கரத்தினு லொட்டவைத் தார்.

ஐயோ கிறீஸ்தவர்களே! இப்படிப்பட்ட துஷ்டாட்டத் தைச்செய்யவந்த சனங்களுக் கெங்களாண்டவ ரின்று செய்த தயைக்கிருபையின் மகிமை எம்மாத்திரமென்று பாருங்கோ :— முதலாவது, யூதாசென்கிற சதிகாரனை என் னன்பனேயென்று கூப்பிட்டுத் தயைகாண்பித்தார். இரண் டாவது, தம்முடைய நாமத்தைக் கேட்டுவிழுந்த யூதசத்து ராதிகளை யெழுந்திருக்கக் கிருபைபண்ணினுர். மூன்ருவது, பேதுருவென்கிற சீஷன் பண்ணின யுத்தத்தைவிலக்கி வாளை யுறையி லடக்கச் சொல்லித் தயைகாண்பித்தார். நாலாவது, சத்துருச் சேவகனுடைய அறுபட்ட செவியைக் குணமாக்கி யனந்த தயைக்கிருபை காண்பித்தார். இந்தப் பிரகாரமாகக் கிருபைகளு மற்புதங்களு மொன்றின் மேலொன் றவர்கள் முன்பாகச்செய்து காண்பித்திருக் கையிலேயு மந்தத் துஷ்ட யூதர்களுடைய மனது சற்ருகிலு முருகவில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆனதினு லாண்டவ ரவர்களுடைய மனதுக்குத் தம்மை யொப்புக்கொடுத்தவுடனே குரூர கொடிய சிங்கம், புலி, ஓநாய், கடுவாய் முதலான் துஷ்டமிருகங்க ளோராட்டுக்குட் டியின்மேலே தாண்டிப் பற்றினதேயுண்டானுல் நகம்பட்டுச் சதைபிய்யாத விடமுண்டோ? பற்படாத விடமுண்டோ? கால்கைபடாதவிடமுண்டோ? தசையென்னப்பட்ட தொன்றுமில்லையே. இரத்தமென்னப்பட்ட தொருதுள்ளியு மிருக்கமாட்டாதே. ஐயோ கிறீஸ்தவர்களே! இந்தப்பிர காரமா யந்தப் பேய்நாய்க்குச் சமானமான துஷ்ட நிஷ்டூரக் கொலைச்சேவக ராண்டவரை நெருங்கிவந்து முன்னும்பின்னு மிடமும் வலமுமாய்ச் சூழ்ந்துகொண்டு செய்தவாதைகள், ஐயோ! எந்தநாவினு லிசைத்துச் சொல்லுவேனே! எங்க ளாண்டவருடைய திருப்பாதங்களைத் தங்க ளசுத்தக் கால் களால் மிதிக்கிறதுந் தங்களுடைய நரகக் கைகளா லெங்க ளாண்டவருடைய திருக்கரங்களைப் பிடிக்கிறதுந் திருமேனி யிற் குத்துகிறதுந் திருச்சிரசில் ரோம மிழுக்கிறது மீட்டி யெறிவில்லையங்களால் நிகழ்த்தப்பண்ணுவதும் அறம்புற மாய்ப் புரட்டுகிறதுந் துஷ்ட வாய்களா லவதூறு நிந்தை யுதாசன தூஷணங்கள் சொல்லுவது மிப்படியே யந்த நரக வோநாய்க ளெங்களாண்டவரை யெண்ணளவில்லாத பங்க நிர்ப்பந்தங்கள் படுத்தினபின் சாதுகுணம்நிறைந்த செம் மறியான வெங்கள் யேசுவைச் சீவபலியாக வதைக்கக் கொண்டுபோகிற விலக்ஷணத்தைப் பாருங்கோ.

எங்க ளாண்டவருடைய கழுத்திலே பெரிய விருப்புச் சங்கிலி பூட்டி அரையைப் பெரும்பாசத்தா லிறுக்கித் திருக் கரங்களைப் பின்முரியச்சேர்த்து அந்தப் பந்தனங்க ளிறுகின நெஷ்டூரத்தால் மேலிலுள்ள தோலுரிந்துபோ யங்குலிகளா லுதிரத் தாரைகள் சொரியத் தொடங்கினது. ஐயோ! என் யேசுநாதருக் கிந்தநேரஞ் சம்பவித்த வியாகுலத்தின் மிகுதி சொல்லலாயிருக்கவில்லையே. எங்களுக்கு மோக்ஷசம்பத்துக் கொடுக்கிற திருக்கரங்கள் கட்டுண்டிருக்கிறதே! அமிர்தவச னங்க ளெழும்புகிறகண்டம் பாசத்தா லிறுகப்பட்டிருக் கிறதே! எங்களுக்காகப் பிரயாசப்படுகிற திருச்சரீர விடை யுறுப்புக்களிப்படியே கட்டப்பட்டு அசைக்கமாட்டாமலிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறதே! என்னமிர்தமான யேசுநாதரே! சம்சோனென் கிறவனுக்குக் கட்டினகட்டுக்கள் தெறிக்கப்பண்ணத் தேவரீர் பெலன் கொடுத்ததே யுண்டானு லிப்போ தேவரீரைக் கட்டின கட்டுக்கள் பீறிப்போட வுமக்கு வல்லமையில்லையோ?

ஐயோ கிறீஸ்தவர்களே! எங்கள் பாவக்கட்டுக்க ளிருக்குந்தனையு மாண்டவருடைய கட்டு அவிழ்க்கலா யிருக்கமாட்டாது. ஆனதினு லிப்படிப்பட்ட விலங்குகளோடு நாலுபேர் முன்னும் பின்னுமாய்க் கட்டின பாசங்களையுங் கயிறுகளையுங் கையிற் பிடித்துக்கொண்டு நாலுபுறமும் புடைசூழ்ந்த சேவகராயுதங்களை யுறைவிட்டோங்கி யதட்டி நிந்தித்துக் கடினமாய்ப் போபோவென்று, கல்லு, முள்ளு, செடி, சேறு, புனல்கள்மேலேயிழுத்துப் பயணப்படுத்திக்கொண்டு போகிற போது, ஐயோ! இப்படிப்பட்ட பயணத்தின் விடாயினைப் பினுலுங் கட்டின கட்டுக்களுடைய விறுக்கத் துண்டிக்கத் தினுலு மனுபவித்த் சகல வாதை வேதனைகளாலுஞ் சருவாங்கமும், நொறுங்கித் தசை ததும்பி வீங்கி நரம்புகள் சிதைந்து உதிரவேர்வை வேர்த்ததுமாய், மூகங்குருவி மூச்சடங்கினதுமாயிருந்தார். இப்படியே ஆண்டவரைக் கூட்டிக்கொண்டு யெருசலே நகர வீதியூடே பந்தங்களுடைய வெளிச்சத்துடனே ஆர்ப்பரித்துக்கொண்டு போனுர்கள்.

ஐயோ! என்னிரக்கமுள்ள ஆண்டவரே! யேசுவே! இந்த யெருசலேநகரவாசிகள் நாலுநாளைக்கு முன்னுகவும்மை ஆண்டவரென்று மிராசாதி ராயனென்றுந் தேவனென்றும் மங்களஞ்சொல்லிப் பாவாடைகள்விரித் திந்தத் தெருவூடேதானே யெழுந்தேற்றம்பண்ணினுர்களல்லவோ? இப்போ வும்மைத்தானே சோரன் சதியன் புரளிக்காரனென்று நிந்தித்து வாதித்துக்கொண்டு போகிறதென்ன? ஐயோ! அன்று வேச்ரிவாகனத்தின்மீதே வெகுமானத்துடனே எழுந்தேற்றம்பண்ணி இப்போ விலங்குகளோடே தரையிலிழுக்கிறுர்களோ? அன்று விருக்ஷக்கொம்புகளைக் கையிற்பிடித்துப் புடைசூழ்ந்து நமஸ்கரித் திப்போ வாயுதங்களையுங் கசை சம்மட்டிகளையுங் கையிற்பிடித் ததட்டிக் கொண்டு போகிறுர்களே? ஐயோ! என்னேசமுள்ள யேசுவே! குருவே! இந்தவிதமாய்த் தேவரீர் லோகத்தி

149 ரூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய வெகுமான வொய்யாரங்கள் நிலையில்லாதென்று காண்பித்துச் சுகசெல்வ பாக்கியங்களெல்லாம் வெறுக்கப் படிப்பிக்கிறீரே.

கிறீஸ்தவர்களே! எங்கள் திவ்விய குருவான யேசுவை இந்தப் பங்கங்களோடு அந்தத் துஷ்ட சேவகர் கூட்டிக் கொண்டு கைப்பாசென்கிறவனுடைய வர்ண்மனைக்குப் போனார்கள். அப்போதவனு மானுசென்கிறவனும் யூதருக் குக் குருத்தலைமையா யிருந்ததினு லாண்டவரைக் கொண்டு வந்தார்களென்று சந்தோஷப்பட்டுத் தங்களுடைய மந்திரிமா ரெழுபத்திரண்டு பேரையுமழைத் தவர்கள்முன்பாகப் பதமை யோடே கண்கவிழ்ந்திருந்த வெங்கள் நாதருடைய முகத்தை யேறிட்டுப்பார்த்துச் சொல்லுவது :— நீ தானோ விந்த நாடுக ளெல்லாங் குழப்பம்பண்ணித் திரிந்தது? நீ படிப்பித்த படிப் பினையேது? உன் சீஷர்கள் கூடவராததேது? உன்னைப் பின்பற்றின சனங்கள் போனவழியேது? நீ தானோ மோசே செழுதின வேதத்தைப் பொய்யென்றுஞ் சலமோ னுண் டாக்கின் வாலயத்தையிடித்து மூன்றுநாளையி லுயர்த்துவே னென்றும் யூதர்சனங்களுக்குத் தானே இராசாவென்று மிப்படிப்பட்ட பொய்கள் பிரசித்தம்பண்ணினது மெய்யோ? இவையல்லாமற் சதத சீவிய சத்தியசுரூபியான சருவேசுர னுடைய குமாரனென்று நீசொன்னதும் மெய்யோ? சரு வேசுரனுடைய ஆணைப்படியே இந்தவசனத்தை உண்மை யாகச் சொல்லென்றான்.

அதற்கு ஆண்டவர் மிகுந்த தாழ்ச்சியுடனே வசனித்த பிரகாரமாவது :— நான் சருவேசுரனுடைய குமாரனென் றதை உனது வாயினுலேதானே சொல்லப்பட்டதே. ஆனு லின்னமும் பிதாவாகிய சருவேசுரனுடைய வலதில் நானிருக் கிறதையும் மேகத்தினுடைய சிங்காசனத்தின்மீதே பூலோ கத்திலே வருகிறதையு மினிமேற் காண்பாயாக. இதுவல்லா மல் நான் போதித்த படிப்பனைகளாலயங்களிலும் பள்ளிகளி லுஞ் சகலமனுஷர் முன்பாகப் போதித்ததல்லாதே இரகசிய மாய்ப் படிப்பித்ததொன்றுமில்லையே. ஆனதினு லதைக் கேட்டு நின்றவர்களிடத்திலே விசாரித்தாற் சொல்லுவார்க ளென்று வசனித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவசனங் கேட்டவுடனே அந்த யூதர்சபையெல்லா மக்கினி பற்றினமன்தாய் விதறிக்கொண்டு அதிலொரு கொடிய சேவக னுண்டவரைநோக்கி, எங்கள் குருச்சிரேஷ்டன் முன்பாக விப்படி யுத்தரஞ் சொல்லுவையோவென்றிருப்புச் சுவடணிந்த கையையோங்கி ஆண்டவருடைய கமலமான திருக்கன்னத்தில் வலுவாயறைந்தான். அந்தவடியினுலாண்டவர் தியங்கிவிழுந்து திருமுகத்திலும், நாசியிலுனின்றுதிரம் பீரிட்டோடப்பட்டது.

ஐயோ! இப்படிப்பட்ட துரோகியானவனை ஆகாயமக்கினியா லெரிக்கவில்லையே. பூமி வாய்திறந்து விழுங்கவில்லையே. அளவற்ற பொறுதி யன்போ டெங்க ளாண்டவ ரவனைப்பார்த்து மொழிந்த வசனமாவது :—

நானுரைத்த வுத்தரத்திற் பிழையுண்டானு லந்தப்பிழையைக் காண்பிப்பாயாக. அல்ல துள்ளதை வசனித்தே னுகிலென்னையடித்த காரணமேதென்று கேட்டருளினுர். இத்தன்மையாய்ப் பாவிகளே! ஆண்டவருடைய சமுகத்திலே நாங்கள் பண்ணுகிற பாவங்களிந்தனைகளை ஏன் பண்ணுகிறீர்களென்று நடுத்தீர்க்கிறநாளையிலேயுங் கேட்கப்படுவ துண்டென் றறிந்து கொள்ளுவோம்.

கைப்பாசென்கிற குருச்சிரேஷ்ட னுண்டவர்சொன்ன மொழிகளைக்கேட்டுச் சருவேசுரனுடைய குமாரன் தானென்று சொன்னவசனஞ் சருவேசுரனைப் பழித்த வசனமென்று வெகு கோபம்பற்றி விதறி இருந்த வாசனத்தைவிட் டெழுந்து தானிட்டிருந்த சட்டையைக் கிழித்து, இவன் தன்னைத்தானே தம்பிரானென்கிறனே! இதிலும் பார்க்கப் பாதகமுண்டோ? இன்னமுங் குற்றங்கள்விசாரிக்கக் காரியமேதென்று சபையைப்பார்த் துங்களுடைய புத்திக்குத் தோற்றுகிறமேரை எப்படியென்று கேட்டான். அதற்கவர்கள் கொலையுண்ணப் பாத்திரனென்று குரவையிட்டுச் சொன்னதினுற் போஞ்சியு பிலாத்துவி னண்டையிற் கொண்டுபோமளவு மிந்த விராத்திரி முழுது மிவனைக் காத்துக்கொள்ளுங்கோ வென்று முறைச்சேவகர் கையிலே அவரை வாதிக்க வொப்புக்கொடுத்தான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐயோ கிறீஸ்தவர்களே! இந்த இராத்திரிமுழுது மாண்டவர்பட்ட வாதையும் விதனமும் நிந்தையும் வியாகுலமு மெப்படிச் சொல்லுவோம்? முதலாவது, தம்முடைய பிரிய சீஷனான பேதுருவென்கிறவர் தம்மை மறுதலிக்கவாச்சுது. அதேதென்று லாண்டவரைப் படுத்தப்போகிற பங்கங்களைக் கண்டு தன்னையு முகப்படுத்திக்கொள்வார்களென்ற பயத்தினால் தூரத்திலே பின்தொடர்ந்து போனவிடத்திலே சிலர் கண்டு நீயும் யேசுநசரேனுவுடைய சீஷனல்லவோவென்றும், மெய்யாகவே அவன்கூடத் திரிந்தாயென்றும், நீ பேசுகிற பாஷையினாலே யறியலாமென்று மிப்படியே மூன்றுமுறை யொவ்வொருத்தர் கேட்டவிடத்திலே, தானவருடைய சீஷனல்லவென்று மவரை யறியேனென்றுஞ் சாதித்து, மறுபடியுமொருபோது மவரைக் காணவில்லையென்றுந் தன்னைத் தான் திட்டிக்கொண்டு மாணையிட்டு மிப்படியே மூன்றுமுறை மறுதலித்தார். அந்நேரந்தானே சேவல் கூவின சத்தங் கேட்கப்பட்டது. அப்போ தாண்டவர் தம்முடைய கிருபைக் கண்களைப் பேதுருமேல் நோக்கினவுடனே இருதர்ஞ் சேவல் கூவுமுன்னே மூன்றுமுறை யென்னை மறுதலிப்பாயென்று முன் திருவுளம்பற்றினவசனத்தை யவர் நினைத்துப் பிரலாபித்தழுதுகொண்டு புறப்பட்டுப்போனார்.

ஐயோ கிறீஸ்தவர்களே! எங்களாண்டவ ரிப்படிப்பட்ட கஸ்திவாதைகளைப் பாராமற் பேதுருபண்ணின பாவத்துக்குத் துக்கித்து அவரைக் கிருபைக்கண்ணாற் பார்த் திரக்கம் பண்ணினதைப் பாருங்கோ. அதின்பின் னெங்க ளாண்டவரை யந்த விராநாலுசாமமும் படுத்தின கஸ்திவாதைகளுடைய நெஷ்டூரத்தைக் கண்ணீரோடுகிற கண்களாலும் விதனமூடுருவுகிற மனதுகளாலும் வியாகுல பிரலாபத்துடனே கேளுங்கோ.

முதலாவது, அந்தச் சபையிற் கூடின எழுபத்திரண்டமைச்சர்களுந் தீநாக்கெழுந்த மேரையாய்க் குரோதித்தெழுந்து தங்கள் நாவினாற் புறப்பட்ட தூஷண நிந்தனைகளு முதாசனித்துச் சொன்ன வதட்டுகளு மாண்டவருடைய விருதய மூடுருவுகிற வாயுதங்களா யொவ்வொருத்தன் கையா லிடைவிடாமற் பட்ட வடிகள் மண்மாரி பொழிந்ததற்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமானமாயிருந்தது. அதின்பின் கூடவிருந்த சேவகருஞ் சகல சபைச் சனங்களு மொருவருஞ் சற்றிரக்க மிளக்கமில் லாமற் குரூர கொடூரம்நிறைந்த விஷசர்ப்பங்கள்போல எங் கள்நாதனை வளைந்து நவமாகப் பந்தனங்களைச் சிக்கென விறுக்கிப் பங்கப்படுத்தத் துவங்கி, சிலர் தங்கள் கைப் பெலன் காண்பிக்கிற கெம்பீரத்தோடு ஆண்டவருடைய திருக்கரங்களைத் திருகி, சிலர் பெலனோடே அறம்புறமா யிழுத்து, சிலர் நகமுள்ளகைகளினால் மேலிற் கீறிக்கிழிப்ப தும், சிலர் மூகத்தி னுரோமங்களை யலைப்பது மிடுங்குவது மான வவமான நிந்தனை நகைப்புக் கோப்புக ளெண்ணள வில்லையே. இவைபோதாம லின்னமு மொரு நவமான நெஷ் டூரத்தை யுன்னிச் சீலைத்துணியால் நேத்திரவிழி யிரண்டை யும் மறைத்துத் திருச்சிரசி லடித்து அடித்தவனைக் கண்டு சொல்லுமென்று இத்தன்மையாக விரா முப்பது நாழிகையு மிடைவிடாமல் தங்களுடைய குரோதமென்கிற விஷ மாறுந் தனையும் பங்கப்படுத்தியிருந்தார்கள்.

அந்தந்தோ! என்னிரக்கம் மிகுந்த நாதனே! மனுஷ, மிருக, பக்ஷி சகலது மிளைப்பாற விராத்திரிகாலத்தைக் கட் டளை பண்ணினவிடத்திலே, அந்தவிராத்திரியி லொருநாழிகை யுமுமக் கிளைப்பாற்றிகிடையாமல் வாதிப்புக்காலமாச்சுதே. அற்பமாகிலும் மூச்சுவிடவும் முசிப்பாறவு மிடங்கிடைக்க வில்லையே.

ஐயோ! இப்படிப்பட்ட விதனநோய்தாங்க வொருவ ராலு மேலுவதில்லையே. திருக்கரங்க ளசைக்கவேணுமாகி விருப்புச்சங்கிலிபூட்டி இறுக்கிமுறுக்கியிருக்கிறதினாலசைக்க மாட்டீரே! திருக்கால்களை நீட்டவேணுமாகில் பட்டவடிகளா லென்பு நொருங்கி நரம்பு பிசகினதினால் திருப்பாதம் நீட்ட மாட்டீரே! திருவாக்கா லேதும் மொழியவேணுமாகி லறை பட்ட வதிர்ச்சியா லலகுதிறக்க வேலுவதில்லையே! மூச் செறியவேணுமென்றாற் கண்டத்திலிறுக்கின கம்பாங் கயிறு களில் தடுக்குதே! ஒருபுறமாய்ச் சாரவு மிடையிழுத்துக் கட்டி யிருக்கிற பந்தனங்களாற் கூடுவதில்லையே. சருவாங்கமு மொரு வேதனையு மொருபுண்வாதையுமா யிருக்கிறதினா லிருக் கிறதிலும் விதனம், படுக்கிறதிலும் விதனம், எழும்புகிறதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதனம். ஐயையோ! பிதாவாகிய சருவேசுரனுடைய ஏக சுதனே! ஒருநாழிகை, இருநாழிகையல்லவே, ஒருசாம மிரு சாமமல்லவே. நாலுசாமமும் முப்பது நாழிகையு மெள்ளளவாகிலுங் கண்வளருதலு மிளைப்பாறுதலும் மனவாறுதலு மில்லாமலிருக்கிறீரே!

ஐயோ! கிறீஸ்தியானி ஆத்துமாக்களே! இந்த வாதைகளெல்லா மாண்டவ ரெங்கள்பாவங்களுக்காக வனுபவிக்கிறதை யறிந் தின்னமு மெங்கள் பாவங்களை விடாமலிருப்போமோ? நாங்கள் சுகவாஞ்சையிற் கட்டப்பட்டிருக்குந் தனையு மவருடைய கட்டுக்க ளிளகமாட்டாதென்றறிந் தின்னமு மெங்கள்மனதை வாஞ்சை, அபேட்சையாற் கட்டியிருப்போமோ? அப்படிச் செய்யக்கடவோமல்ல. ஆனதினாலெங்கள் பாவக் கட்டுக்களாற் கட்டப்பட்டிருக்கிற வெங்களாண்டவரே! தேவரீருடைய கட்டுக்களை நாங்க ளவிழ்க்கவுந் திருப்பாதம் நமஸ்கரித்து மன்றாடவு மும்முடைய துக்கித்த திருமுகத்தை எங்களுக்குக் காண்பியுஞ் சுவாமீ!




## உத்தம மனஸ்தாப மந்திரம்

எங்க ளமிர்தமான யேசுவே! தேவரீருடைய திருக்கரத்தின் கட்டுக்களைப் பார்த்து எங்கள் கைகளை அவக்கிரிகைகளுக்-கேதுவாக்காமற் காத்தருளும். உம்முடைய திரு நேத்திரங்கள் மறைந்ததைப்பார்த்து எங்கள் கண்கள் ஆகாமியங்களிலே நோக்குதலில்லாமற் பண்ணியருளும். உமது கழுத்தின் கயிற்றைப்பார்த்து எங்கள் வாயால் தூர்ச்சன வசனங்க ளெழும்பாமற் பண்ணியருளும். தேவரீர் சருவாங்கமுங் கட்டப்பட்டிருக்கிறதினா லெங்களை யுலோக சஞ்சாரக் கட்டுக்களிலுஞ் சகல பாவக் கட்டுக்களிலு நின்றவிழ்த் திரக்ஷியுஞ் சுவாமீ! உம்முடைய அனந்த கிருபையினா லெங்கள் பாவங்களைப்பொறுத் திரக்ஷியுஞ் சுவாமீ! ஆமென்யேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மூன்றாம் பிரசங்கம்

### யேசுநாதர் கற்றூணிலே கட்டுண்டு அடிபட்ட குறிப்பிடங் காண்பிக்கப்படுவது

எங்கள் கர்த்தரான யேசுக்கிறீஸ்து பூங்காவனத்திலே தியானத்தோடு பட்டவாதைகளும் யூதர்கையிலகப்பட் டன்று பட்ட கஸ்திகளும் முன்பிரசங்கங்களிலே சொல்லப்பட்டதே. இப்போ தெங்கள் தயாவதிக யேசுநாதர் போஞ்சியு பிலாத்துவி னரண்மனையில் நடுவேறப்பட்டதையு மவ்விடத்திற்பட்ட கஸ்திவாதைகளையுஞ் சொல்லிக் காட்டக்கடவோம்.

அதெப்படியென்றால், வியாழக்கிழமை யிராத்திரியன்று நாலுசாமமும் விடியுமட்டும் பலபலவாதைகள் பட்டதின்பின் வெள்ளிக்கிழமை விடிந்தது. ஆனாலன்று விடிந்தமேரை மற்ற நாட் சாயலாய்க் காணவில்லை.

அதேதெனில் மற்றநாட்களில் விடிவேறுகண்டவுடனே மிருகசெந்துக்கள் சந்தோஷமாய்க் குரவையிட்டுப் புல்புன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லருந்தப்போவதும் பறவை பக்ஷிகள் சிறகடித் தாகாசத்தில் மதுரநாதஞ் செய்வதும் சகலலோக மக்களிப்பானதுமா யிருக்குமே. ஆனால் வெள்ளிக்கிழமையன்று சகலத்தையும் படைத்த ஆண்டவர் மரணிக்கப்போகிறதினால் சகலபொருட் களுஞ் சந்தோஷமுக மில்லாததுமாய் மிருக பக்ஷி முதலான சீவாத்துமாக்கள் வாய்பூட்டினதுமாய்ச் சந்திரன் சூரியன் முதலான ஒளிவுகள் குன்றினதுமாய், ஆகாசம் வியாகுல முகம் நிறைந்ததுமாய்ப் பூமண்டலம் பயங்கர நடுக்கமுண்டா னதுமாய்ச் சகல லோகவிஸ்தார மிருண்டதுமா யிரக்கத்துக் குக் காரணமாயிருந்தது.

இப்படியே வெள்ளிக்கிழமை விடிந்தவுடனே எங்கள் தயாவதிகயேசுநாதரை யெருசலேநகர மணியகாரனை பிலாத் துவின் முன்பாகக் கொண்டுபோக வாயத்தமாய் யூதர் சேனை படைகளுங் குருவமைச்சர், முகாரிக்காரரும் வீதியடங்காத கூட்டமாய்க்கூடி ஆண்டவரை வெறுங்கால் வெறுந்தலையு மாய்க் கட்டினகட்டுக்கள் சிக்கென விறுகப்பிடித்துச் சதி யன் சோரனைக் கொண்டுபோகிறோமென்று கூக்குரலிட்டு வீதியூடே நடத்திக்கொண்டு போனார்கள்.

அப்போதன்று பாஸ்குத்திருநாள் நிமித்தமாய்ப் பலபல தேசங்களினின்று கூடின மனுக்களரிக ளிந்தவதிர்ச்சியு மபய சத்தமுங்கேட்டுக் கும்பல்கும்பலாய்ப் பார்க்கவந்தவிடத் திலே எங்கள் நாதன் ரூப மரூப விலக்ஷணமாய்ச் சருவாங்க மும் வீங்கித்ததும்பி உதிரந் தோய்ந்ததுமாய்க் கட்டின கட் டுக்களோடு கொண்டுபோகிறதைக்கண் டிந்தப் புதுமை யேதென்று பயந்தாச்சரியப்பட்டு முன்னிருந்த சாயலு மிப்போதிருக்கிற தன்மையுங்கண்டு மனது வெகு இரக்க மாகிச் சொல்லுவது :—

ஐயோ! இப்படிப்பட்ட தருமவாளனுக் கிந்தநெருக் கிடையாச்சுதோ? கொஞ்சநாளைக்குமுன் னெங்கள் நாடு களிலே பண்ணின பிரசங்கங்களுடைய மகிமை யின்னமு மெங்களுக் கதிசயிக்குதே. அந்தத் தர்மவாக்கியங்களுடைய வமிர்த மெங்கள் செவிகள் நிறைந்து இருதயங்களைவிட்டுப் போகாமலிருக்குதே. ஐயோ! எப்படிப்பட்ட வியாதிப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனு மங்கவீனப்பட்டவனு மவருடைய கைதொடச் சுக மடையாதவ னில்லையே. கேள்வியடைந்த செவிடருங் கண் பார்வை யடைந்த குருடருங் கைகாலடைந்த முடவரு மெண் ணளவில்லையே. பிசாசு ஆவேசங்களை யோட்டினதுஞ் செத்தவர்களை யுயிர்ப்பித்ததுங் கடலிலேயுங் கரையிலேயுஞ் செய்த வற்புதங்களைக் காணுதவனுண்டோ! கேளாதவ னுண்டோ! இப்படியே லோகத்துக்கு நவமான அருண னுதித்ததுபோலச் சகலரையு மிரட்சித்திருந்தவ ரிப்போது சோரன் சதியனென்று பேர்பெறலாமோ? ஐயோ! இவை களைக்கண்டெங்கள் மனது வியாகுலத்தா லதிர்ந் திரக்கத்தா லுருகுதே. அந்தந்தோ! ஐயையோ! என்றந்தச் சுற்றுக் கிராமங்களால் வந்த சனங்கள் பெருமூச்செறிந்து துக்கித் துப் பிரலாபித்திருந்தார்கள். ஆனுற் கொடிய யூதர்களுடைய மனதின் கோப குரோதத்தின் சுடர் சற்று மமராம லந்த வேகத்தோடே சுவாமியை மண்டலாதீஸ்பரனுன பிலாத்துவி னரண்மனையிற் கொண்டுபோய் முறையிட்டுச்சொல்லுவது:—

இந்தச் சோரன், சதியன், புரளிக்காரனை நாங்கள் பிடித்து வந்தோம். இவன்தா னெங்களுடைய நாடுகளைக் குழப்புகிறதும் வேதங்களைப் பழிக்கிறதுந் தன்னைத்தான் தேவனென்று புதியமார்க்கங்களை யுண்டாக்குகிறதும் வினைய மாயங்களாற் சனங்களைத் தன்பக்ஷமாக்குகிறது மிதல்லாமல் தான் யூதருக்கிராசாவென்றுஞ் சேசார் மகா ராயனுக்குக் கொடுக்கிற இறைப்பகுதியை மறுக்கிறது மிவன்தானே. இப்படிப்பட்ட குழப்பக்காரனை எங்கள் வேதமுறைமையின் படியே சிலுவையிலே வதைக்கவேணுமென்று முறையிட்டுச் சொன்னுர்கள்.

ஐயோ! இரக்கமுள்ள கிறீஸ்தவர்களே! அற்பமும் வடு மாசில்லாத வெங்கள் யேசுவை இன்று குற்றவாளனு யித் தனை படாபழிசுமத்தி நெருடு தப்பறைகளாற் சிலுவையில் வதைக்கப்பண்ணுகிறவிடத்தி லிப்படிப்பட்ட நீதியீனத்துக் கவருக்குதவியாக வொருவருமில்லையே. அவருடைய நன் மைத்தனத்தின் நேர்மையைக் காண்பித்துக் குற்றமில்லாத தனத்தை யொப்புவிக்க வெவருமில்லையே. ஆனதினுல் நாங்க ளாகிலு மெங்கள் நாதன்பேரில் சுமத்தியிருக்கிற குற்றச்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சாட்டுகள் பொய்யென் றெப்புவித் திந்தச்சபையி லெங்க ளாண்டவரைக் குற்றமற்றவராய்க் காண்பிக்கக்கடவோம்.

எங்களன்புள்ள யேசுவே! பாவிகளான யூத ரும்முடைய பேரி லித்தனை குற்றஞ் சுமத்தியிருக்கிறதென்ன? நீ ரெவ ருடைமையைக் கொள்ளைகொண்டீர்? ஏது அபூருவத்துக் காசைப்பட்டீர்? எந்த ராச்சியத்தைக் கலைத் தெவரிறையை மறுத்தீர்? மோக்ஷராச்சியத்தி லெண்ணளவில்லாத சம்பத் துண்டாயிருக்கிற வுமக்காசையென்ன? சகல பொருட்களை யுங் கைக்கொண்டிருக்கிற வுமக்குக் களவென்ன?

ஆனாற் கிறீஸ்தவர்களே! ஒரு பெரிய வாஞ்சையுங் களவு மெங்க ளாண்டவர்பேரி லுண்டு. அதேதெனிற் பூலோகத்தி லிருக்கிற ஆத்தும குடிகளைப் பரலோகத்துக்குக் கடத்திக் கொண்டுபோக வந்ததினாற் களவுண்டு. தங்களிச்சையாயிருக் கிற மனுஷரைத் தம்முடைய அடிமைகளாக்கி யெங்களுடைய ஆத்துமங்களைத் தமது கைவசமாக்க வித்தனை பரம வுபாயங் களைப் பண்ணுகிறதினா லிந்தக்குழப்பமும் வாஞ்சையும் மிகுதி கண்டிருக்குது. ஆனதினால் யூதர்கையாற் பாடுபடவுஞ் சாக வும்வேண்டியதாயிருக்குது. ஐயோ பக்ஷபத்தியுள்ள ஆத்து மாக்களே! இப்படிப்பட்ட களவுக ளெங்க ளாண்டவர்பேரிற் சாராதபடிக் கெங்கள்மனஞ் சந்தோஷமா யெங்க ளாத்து மாக்களை யவருக்குக் கையளிப்போம். எங்கள் மனப்பிரி யத்தா லவருடைய மோக்ஷவிராச்சியத்துக்குக் குடியாகப் போகத் தெண்டித்து அவரைக் குற்றமில்லாதவராய்க் காண் பிக்கக்கடவோம்.

துஷ்ட நெஷ்டூரங்கொண்டிருக்கிற யூதர்களே! எங்க ளாண்டவர்பேரி லிப்படிப்பட்ட நன்மைசெய்த குற்றமல் லாதே வேறொரு குற்றமுமில்லையே. உங்கள் மனதுகளிருக் கிற குரோதத்தின் படலங்களை யகற்றிப் புத்தியின் கண் களைத்திறந்து உங்கள் ராச்சியங்களி லவர்பண்ணின நன்மை களையும் புதுமைகளையும்பார்த்து உலோகத்தை இரக்ஷிக்க வந்த ஆண்டவரென்றறிந்து அவராலே மீட்சியடையத் தெண்டிக்கிறதல்லாதே அவரைக் குற்றவாளனென்று முறைப்படக்கடவதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப்பிரகாரமாய்க் குற்றமில்லாத வெங்கள் நாதனைத் துரையனான பிலாத்துவி னெதிராக நிறுத்தியிருக்கிற விடத்திலே அவன் பார்த்து யூதர்சொன்ன குற்றங்களெல்லா மாராய்ந்து ஒருகுற்றமு மெய்யாகவே யொப்புவிக்கலா யிராததினாற் குற்றமில்லாதவரென்றறிந்து தன் சமீபமாயழைத்து உமதுபேரிற் சுமத்துகிற விம்மாத்திரங் குற்றங்களுக் கோருத்தாரமுஞ் சொல்லாமல் மவுனத்தோ டிருக்கிறதென்ன? ஆனால் தாம் யூதருக் கிராசாவென்றது மெய்யோவென்று கேட்டான். அதற்காண்டவர் தமதிராச்சியம் பரலோகத்திலல்லாதே பூலோகத்திலில்லையென்று வசனித்தார்.

அதைக்கேட்டுப் பிலாத்துஸ் பயந்து ஆண்டவரை விடுகிற மனதாய்த் தன்பேரில் யூதர் வைராக்கியங்கொள்ளாதபடிக் காண்டவரைக் கலிலேயதேசவாசி யென்றறிந் தந்தத்தேசத்தை யாளுகிற ஏரோதையென்கிற விராய னவ்விடத்திலே வந்திருந்ததினா லந்தவிராசாவின் பக்கலிலே கொண்டுபோக வுத்தாரங்கொடுத்தான்.

ஏரோதையென்கிற விராசா வெங்க ளாண்டவருடைய வற்புதங்களை முன்கேட்டு ஆண்டவரைக் காணவேணுமென்று வெகு தாற்பரியமாயிருந்ததினால் தன்னண்டையிலவரைக் கூட்டிவந்ததைக்கண் டகமகிழ்ச்சியாய்த் தன்முன்பாக யாதொரு அற்புதத்தைக் காண்பிக்கவேணுமென் றநேகவிதமாய்க்கேட்ட விடத்தி லாண்டவ ரோருத்தரமும் மொழியாமல் மவுனவேஷத்தோ டிருக்கிறதைக்கண்டு மூகன் மதியீனனென்று நிந்தித்து நிராகரித் திந்த நிந்தைக் கிலக்காகவோர் வெள்ளைச் சட்டையை யணிவித்து மறுபடியும் பிலாத்துவினண்டையே அனுப்பினான்.

எங்க ளன்புள்ள யேசுவே! பிதாவாகிய சருவேசுரனுடைய மட்டில்லாத ஞானமாயிருக்கிற வும்மைப் புத்தியீனனென்றுசொல்ல வாச்சுதே! உம்முடைய திருவாக்கால் லோகத்தையுண்டாக்கி இத்தனை போதகங்களைப் போதித்த வும்மை ஊமையென்றுசொல்ல வாச்சுதே! உம்முடைய சுகிர்தவலங்கார மெல்லாம் பரிகாசவணிமையாச்சுதே! இப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியே ஏரோதைசெய்த துஷ்டாட்டத்தைக்கண் டதிலுந் துஷ்டரான யூத ராண்டவரை இந்தப் பரிகாச கோலத்தோடு வீதியூடே பயணப்படுத்தி ஆகடியமாய்க் கூக்குரலையிட்டுக் கைகொட்டி, அசங்கதமடித்துச் சீக்கலிட்டுச் சிலர் மண் கல் சேறெறிந்துஞ் சிலர் கையோங்கியுந் தடிக்கம்புகள் சுழற்றியு மிப்படியே யவமான நிந்தைகள்பண்ணி எங்கள் பாவத்தி னுடைய வுக்கிரமுந் துர்க்குணங்களுடைய அவலக்ஷணமும் வெகுமானத்தினுடைய பரியாசமுங் காண்பிக்கப்பட்டது.

இப்படிப்பட்டவேஷமா யாண்டவரைக் கூட்டிக்கொண்டு மறுபடியும் பிலாத்துவின்முன்பாகக் காண்பித்தவுடனே அவ னுண்டவரிருக்கிற தன்மையைக்கண்டு மிகுதி துக்கித் திருந்தான்.

அதேதெனிற் பிடிபட்டநேரந்துவக்கங் கட்டின கட்டுக் கள் நெகிழ்க்காம லிறுக்கின கட்டின்மேற் தசைவளர்ந்தது மாய், நேத்திரவிழிதுவக்கிச் சரீரமேகமு மிரத்தங் கன்றி யிருக்கிறதுமாய்ப் பரிகாசக்கோப்புக் கிலக்ஷணமாய்க் கால் மட்டாக வெள்ளையிலாஞ்சனம் போர்த்தினதுமா யின்னமு மிளைப்புஞ் சுவாசத்தோடு மிருக்கிறதைக்கண்டு, ஐயோ! இந்த ஏழைபேதையை யிம்மாத்திரம் வாதைப்படுத்தினது போதாதோ? இன்னமு மென்னண்டையிலே கூட்டிவாற தென்ன? மாங்கிஷம் பீறிப்போய் முக மரூபமாய்க் குரூவிப் பிரேத சஞ்சாரம்போலிருக்கிற விந்தமனுஷனை யின்னமும் வாதைப்படுத்தக் கொண்டுவாறூர்களோ? ஐயோவென்று மிகுந்த விரக்கத்தோடு பரதவித்து யூதரைநோக்கி, அற்பமும் பிழையில்லாத இந்த மனுஷனை ஏன் மறுபடி கூட்டிவருகி றீர்கள்? இவன்பேரிற் குற்றமில்லாதது கண்டல்லோ ஏரோதை ஆக்கினையிடாமல் விட்டுவிட்டான். இப்படிக் கொத்த மிடியனைக் கொன்றதினு லுங்களுக்குள்ள பிரயோ சன மேதென்று எங்களாண்டவரை யவர்கள் கையால் விடு விக்கத்தக்கதாக மனதா யதற்கோ ருபாயத்தைக் குறித் தான்.

அதேதென்றால் வறவாசென்கிற வல்லடி கொள்ளைக் காரன் அநேக மில்லங்களிற் கொள்ளையாடி வஸ்துக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யறமாறி உயிர்களைச் சேதப்படுத்தித் தேசத்தை யறம்புற மாய்க் குழப்பினதாற் சிறைச்சாலையி லடைபட்டிருந்தான். யூதர்மார்க்கத்தின் முறைமையின்படியே பாஸ்குத்திருநாளிற் காவற்கூடத்தி லிருக்கிறவர்களி லொருவனை விட்டுவிட வழமையாயிருந்ததினு லப்படிப்பட்ட கள்ளனை விடமாட்டார்க ளென்று நினைத்து அவனையு மெங்க ளாண்டவரையும் யூதர் முன்பாக நிறுத்தி, உங்களுடைய திருநாள் முறைமையின் படியே இந்த விரண்டுபேரில் நசரேனு யேசுவை விடு வோமோ? அல்லது வறவாசென்கிற கள்ளனை விடு வோமோ? என்று கேட்டான்.

கிருபை பத்தியுள்ள கிறீஸ்தவர்களே! துஷ்ட சத்துரா தியான யூதர்க ளிதற்கு மறுமொழி சொல்லுமுன்னமே நாங்களெங்கள் பக்ஷபத்தியின்படியே தெரிந்து சொல்லு வோம். வறவாசென்ற மகா குழப்பக்காரக்கள்ளனை விடா திருக்கிலு மெங்களாண்டவரை விட்டுவிடவேணுமென்று நிற் போம்.

ஆனுல் துஷ்ட யூத ரிப்படியே கேளாமல் வறவாசென் கிற கள்ளனை விட்டுவிடச்சொல்லி நசரேனு யேசுவைச் சிலு வையிலே யறைந்து கொல்லுகிறதல்லாதே விட்டுவிடப்போகா தென்று மகா சத்தமாய் முறையிட்டுச் சொன்னுர்கள்.

ஐயோ! வஞ்சகவிஷம்நிறைந்த பாவிகளே! இத்தனை விரோத குரோத முங்கள்மனதி லமைந்திருக்கிறவிதமென்ன? உங்களுக் கிராசாவும் பிதாவுஞ் சுவாமியுமாயிருக்கிற தேவ வல்லப குமாரனைக் கொலைப்படுத்தவுந் துஷ்டநெஷ்டூரக் கள் ளனை விட்டுவிடவுஞ்சொல்ல நீதமுண்டோ?

ஐயோ! அந்நீதங்களிற் சமானமில்லாத பெரிய வந்நீதமே! துஷ்டாட்டங்களில் நிகரில்லாத துஷ்டாட்டமே! சீவியர் களைக் கொல்லுகிறவனிருக்க மரித்தவர்களை யுயிர்ப்பிக்கிற வரைக்கொல்ல நியாயமோ? வஸ்துக் கொள்ளையாடினவன் பிழைக்கவும் வஸ்துக்கொடுக்கிறவர் சாகவும் நீதமுண்டோ? குற்றவாளனை விட்டுவிடவும் அற்பமுங் குற்றமில்லாத வெங் கள் நாதனை வாதிக்கவும் நடுவோ? இப்படிப்பட்ட அவநியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத் தெரிதலைத் துஷ்டயூதர் தங்கள் வைராக்கியத்தா லன்று பண்ணினாலும் பாவியான கிறீஸ்தவர்கள் தங்கள் பாவத்தினாலே நிதமும் பண்ணுகிறார்கள். அதேதெனிற் சுகிர்தத்தை விட்டுப் பாவத்தைக் கையேற்கிறதும், பரலோகத்தை மறந்து பூலோகத்தை விரும்புகிறதும், ஆத்துமத்தை யிழந்து சரீரம் பிழைக்கப்பண்ணுகிறது மிவையெல்லாம் யேசுநாதரை வாதித்து வறவாசைப் பிழைக்கவிடக் கேட்கிற ஞாயமென் றறியவும்.

இந்தப்பிரகாரமாய்ப் பிலாத்துவென்கிற துரையன் யூதருடைய மனக்கொடுமை பெரிதாயிருக்கிறதைக்கண்டு தான் நினைத்த வுபாயத்தினா லாண்டவரை விட்டுவிடலாயிருக்க வில்லை யென்றுகண்டு கொஞ்சமாய் வாதிக்கக் கட்டளை யிட்டா லவர்களுடைய மனவிஷ மெவ்வளவாகிலு மிளகி இரங்குவார்களென்று நினைத்து ஆண்டவரைச் சில்வான அடியடிக்க நிருபித்தான்.

அந்தவுத்தாரங் கிடைத்தவுடனே அந்தக் கொடிய சத்துராதி யூதரெங்க ளாண்டவரைச் சகலருங் காணத்தக்கதாகப் பிலாத்துவினுடைய முற்றவெளியிற் கொண்டுவந்து அவருடைய சருவாங்கமும் மறைத்திருந்த நீளிய வஸ்திரத்தைக் கழற்றி அந்த முற்றவெளியிற் குற்றவாளரை வாதிக்க நாட்டியிருந்த கற்றூணிலே எங்கள் யேசுவின் திருக்கரங்களிரண்டையுந் திருப்பாத மிரண்டையுஞ்சேர்த்து மகா துண்டிக்கமாய்ச் சிக்கெனக் கட்டினார்கள்.

ஐயோ மானிடரே! இப்படிப்பட்ட துஷ்டாட்டத்தைக் காணக் கண்கொள்ளுமோ? சொல்ல நாவழங்குமோ? கேட்கச் செவியாகுமோ? பொறுக்க மனதடங்குமோ? பாவியான கிறீஸ்தவர்களே! இன்றெங்களாண்டவர் மெய்யாகவே தமது பாவவாள வடிமைகளுடைய வேஷந்தரித்திருக்கிறாரே. மெய்யாகவே யின்று தாசருடைய வாக்கினைபடுகிறாரே. அனாதி பிதாவே! உம்முடைய பிரிய திருக்குமார னிந்தச் சபையி லிருக்கிற அவமான லக்ஷண வேஷத்தைப் பார்க்க வேண்டாமோ? தேவதூதர்களே! உங்கள் நாதனை வளைந் திருக்கிற யூதர்சபையை விலக்கி உங்கள் சேனைத்திரள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களாற் சூழ்ந்திருக்கவேண்டாமோ? ஆகாசமண்டல மேகங்களே! உங்கள் மேகபடலமென்கிற திரைகளா லாண்டவ ரணிந்திருக்கிற பாவ வேஷத்தை மறைத்து வெள்ளியென்கிற தீபங்களா லவருடைய தெய்வீக மகிமையைப் பிரகாசிக்க வேண்டாமோ? பூலோகத்திலிருக்கிற பாவ வாளர்களே! தருமவாளர்களே! உங்கள் சுவாமியிருக்கிற தனிமையைப் பார்த்துத் தருமவாதிகள் தங்கள் சுகிர்தங்களா லவரை வெகுமானிக்கவேண்டாமோ? பாவிகளாயிருக்கிற நாங்க ளெங்களுக்காகக் கட்டப்பட்டிருக்கிற அவருடைய குற்றமில்லாத திருக்கரங்களை யவிழ்த்து எங்கள் பாவக்கைகளை அந்தக் கற்றூணிலே சேர்க்கக்கடவோம்.

ஐயோ! இதிலோ ரடைமானமுமில்லாததினு லந்தத் துஷ்டயூத ரெங்களாண்டவரைக் கற்றூணோடு கட்டினதின் பின் அவ்விடத்தில் நின்ற சேவகர்களி லதிக சவி பெலனும் நெஷ்டூர மனதுமுள்ள ஆறுபேரைத் தெரிந்து பெலனுக வடிக்கத்தக்கதாக அவர்களுக்குக் கையிடை கட்டி மனச் சந்தோஷம்பண்ணி ஆயத்தப்படச் சொன்னூர்கள். அந்தப் படியே அவர்க ளாறுபேருந் தங்களுடைய சரீரத்தின் தத்துவத்தையும் மனசின்கொடுமையையுங் காட்டிக் கண்களால் நெருப்புப்பொறி பறக்கிறதுமாய் இராட்சதவேஷத்தைக் கொண்டு புறப்பட் டிருப்புச் சங்கிலிகளையுங் கசைவார்களையும் முள்ளழுத்திய சாட்டை சம்மட்டிகளையுங்கொண்டு ஊட்டியுறக்க வருகிற கொடூர சிங்கம் புலிபோல வாண்டவரை முடுகித்து வளைந்து இவ்விரண்டுபேராய்த் தொய்யாதபடிக்குக் கைமாறி மாறி யடிக்கத் தொடுத்தார்கள்.

ஐயோ! அந்நேரத்தி லெங்களாண்டவருடைய மென்மையான சரீரத்தி லிடைவிடாமற் படுகிறவடிகள், காய்ச்சின விருப்புக்கட்டியிற் சுத்தியலடி விழுகிற மருவாதியென்போமோ! கோடையிடிகுமுறி வருஷிக்கிற கல்மழைபோலென்போமோ! ஐயோ! சருவாங்கமும் கொப்புளமாய் மாங்கிஷ மெல்லாஞ் சிதைந்து என்புதோன்றுந்தனையுங் கீறிக் கிழிபட் டிரத்த சாகரங்கள் புறப்பட்டு மனுஷரூபமென்கிற தழிந்து ஏகமு மொருபுண்ணுய்ப்போச்சுது. அதினு லெங்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ளாண்டவரைக் கட்டின கட்டுக்க ளிரத்தக் கட்டுக்களாய், அடித்த கசைவா ரிரத்தவார்களாய், கற்றா ணிரத்தத் தூணுய், நின்றவிட மிரத்த சமுத்திரமாய்க் கட்டவிழ்த்த வுடனே யெங்களாண்டவர் பெலக்கேடா யந்த விரத்த சமுத்திரத்திலே விழுந்தார்.

ஐயோ! என்னன்புள்ள யேசுவே! இத்தனை வாதை வேதனையெல்லாம் படுகிறீரே! நான்செய்த பாவத்துக்கல்லாது நீர்செய்தகுற்றமில்லையே. இத்தனை இரத்தமெல்லாஞ் சிந்துகிறீரே! எங்களுடைய ஆத்துமத்தி னசுத்தங் கழுவுகிறதற்கல்லாதே உம்முடையபேரிலொரு அழுக்குமில்லையே. வறவாசென்கிற கள்ளனிலு மதிக கள்ளர் நாங்களே. ஊராருடைமைகளைக் கொள்ளையாடிகள் நாங்களே. வாக்கினுலுங் கிரிகையினுலும் பிறராத்துமங்களைக் கெடுக்கிறது நாங்களே. இந்த ஆக்கினைகளெல்லாம் நாங்கள் படுகிற தல்லாதே தேவரீர் படக்கடவதல்லவே. ஆனதினு லும்முடைய திருக்கரங்களிற் கட்டியிருக்கிற வெங்களுடைய பாவக் கட்டுக்களை அவிழ்க்கவு மும்முடைய திருப்பாத வடி வணங்கி நமஸ்கரித்துப் பாவப்பொறுத்தலை மன்றாடவுங் கற்றூணோடே பிடித்திருக்கிற வும்முடைய துக்கித்த திருமுகத்தை எங்களுக்குக் காண்பியுஞ் சுவாமீ!



## உத்தம மனஸ்தாப மந்திரம்

ஆண்டவரே! தேவரீர் எங்களுக்காகப்பட்ட ஐயாயிரத்தி னதிக அடிகளைப்பார்த்து எங்களுடைய பாவத்தி னதிகத்தைப் பொறுத்தருளும். உம்முடைய திருமேனியின் முரிவுகளைப்பார்த்து நாங்க ளெங்கள் சரீரத்தின் சுக செல்வங்களை வெறுக்கப்பண்ணியருளும். நீர் கட்டப்பட்டிருக்கிற தூணைப் பார்த்து, எங்கள் மனக்கடினங்களை இளகப்பண்ணும். உம்முடைய அனந்த கிருபாகடாக்ஷத்தா லெங்கள் சகல தோஷங்களையும் பொறுத்துத் தயவுபண்ணுஞ் சுவாமீ.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நாலாம் பிரசங்கம்

### யேசுநாதர் முள்முடி தரிக்கப்பட்ட குறிப்பிடங் காண்பிக்கப்படுவது

உலோகத்துக் கதிபதியான வெங்கள் யேசுநாதர் எங்கள் பாவத்தைத் தம்முடைய பேரிற் சுமந்து கசையடி படுவாரென்று இசையாசென்கிற தீர்க்கதரிசி யெழுதின பிரகாரம் அடிபட்டதையு மின்னமும்பட்ட வநேக வாதைகளையும் முன்பிரசங்கங்களிலே சொன்னோமே. இப்போ தவருக்குப் படுத்தின வேறேயொரு நவமான வாதைபங்கஞ் சொல்லக்கடவோம்.

அதெப்படியென்றால், பிலாத்துவின் கட்டளைப்படியே ஆண்டவரைக் கற்றூணிலேகட்டிக் கொடிதா யடித்ததின் பின் இன்னமும் யூதர்களுடைய மனதிற்கொண்ட குரோத வைராக்கிய மாறவில்லை: அதினால் வாதையின்மேல் வாதையுங் கஸ்தியின்மேற் கஸ்தியும் நிந்தையின்மேல் நிந்தையுமுண்டாக்கவேணுமென் றெருமித் தொருகாலுங் காணாததுங் கேளாததுமான வோர் புதிதான வாதைபங்கப்படுத்தவுன்னினார்கள்.

ஐயோ கிறீஸ்தவர்களே! எந்தப்பிரகார மெங்கள் மனதிற் பரதாப மடக்கியிருப்போமோ! எந்தக்கண்ணாற்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பார்த்திருப்போமோ! ஆனதினாற் கண்ணீர் நிறைந்த கண்களாலும் பிரலாபம்நிறைந்த வாக்கினாலு முங்களுக்குச் சொல்லுகிற இந்தப் புதுமையைக் கேளுங்கோ.

அதேதெனி லந்தத் துஷ்டயூத ராண்டவரைப்பார்த்துச் சொல்லுவது:— இந்த மனுஷ னெங்க ளிராசாவென்று சொல்லித் திரிந்தானே. இப்படிப்பட்ட ஈன னேழை யூதருக் கிராயனென் றுலோகத்துக்குப் பிரசித்தமாக்கின விந்தப்பெரிய நிந்தை கேட்டிருப்போமோ? இந்த அவதூறை யெந்தப்பரிசிலேயு மகற்றவேணும். அவனுண்டுபண்ணின இராசாங்கத்தின்பலனை அவனுக் கனுபவிக்கப்பண்ண வேணும். அதினா லவன்சொன்ன வார்த்தை சரசமாய் லோகத்தார் தூஷணித்துப்போடத்தக்கதாக வோராகடியத்தைச் செய்வோமென்று சொன்னார்கள்.

ஐயோ! எங்க ளாத்துமத்துக் குடையவரான யேசுவே! சகல லோகத்துக்குங் கர்த்தாவான தேவ இராயனே! உம்மைப்பார்க்க வதிக வதிபரான இராசாவுண்டோ? ஆகட்டுமென்றவுடனே சகலமு முண்டாகவும், அழியட்டு மென்றவுடனே சகலமும் நிர்மூலமாகவும் வல்லபமுள்ள தேவரீரல்லவோ? வருகாலஞ் செல்கால மிருக்குங்காலஞ் சகல வர்த்தமானத்தைத் தூரதிருஷ்டியாற் பார்த்திருக்கிற சருவ ஞானமுடையவர் நீரல்லவோ? சலமோனென்கிற விராசாவுக்கு நாற்பதினாயிரந் துரகசாலைகளும், பன்னீராயிர மிராவுத்தரு முண்டாயிருந்ததினால் மகா பேர்பெற்ற அரசனானதே யுண்டானா லுமக் கிலக்ஷகோடி தூதாதி தூதரும் முனிவரு முண்டாயிருக்கச்செய்தே நீ ரவனிலும் மிக்காய்க் கீர்த்தியுள்ள விராயனல்லவோ? அசுவே ரென்கிற விராசா தன்னிராச்சியத்தின் குடியானவர்களுக்கு நூற்றெண்பதுநாட் கொடுத்த விருந்தின் மகிமையைக்கண்டு மகா திரவியவிராயனென்று கீர்த்திப்பார்களானால் நீர் மனுஷ, மிருக, பக்ஷி சகலத்தையும் நித்தமுஞ் சம்பூரணமாக்கி இரக்ஷிக்கிற விடத்திலே நீ ரவனிலும்பார்க்க மகிமையுள்ள நிறைசெல்வனென்கிறதற்குச் சந்தேகமுண்டோ? அலெக்சாந்திருவென்கிற கோமா னிவ்வுலோகத்திலுள்ள மிகுந்த விராச்சியங்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களையு மிராசாக்களையும் வெற்றிகொண்டதினால் நிகரில்லாத வீரியமுள்ள நரபாலனென்று பாராட்டுவார்களானால் திரிலோகத்திலுள்ள சமஸ்தமுங் கைக்கொண்டிருக்கிற வும்மை அவனிலும்பார்க்க மகிமையுள்ள பூபாலனென்கிறதற்குச் சந்தேகமென்ன ?

இப்படியே சமஸ்தருக்கும் நீர்தா மதிபதியிராசாவாயிருக்கக்கொள்ளப் பரிகாசவிராசாவென்று கோறணி கோட்டிகளுக்கிலக்ஷணமா யிப்படிப்பட்ட நிந்தனைசெய்வார்களோ ? உமது திவ்வியவிராச்சிய மின்று பரிகாசவிராச்சியமாவதோ ? இருலோகத்திலேயுள்ள சகல வெண்ணளவில்லாத மனுச்சேனைகளு மசடராய்ப் போவார்களோ ?

ஐயோ கிறீஸ்தவர்களே ! எங்கள் நாதனுடைய மகிமைக்குப்பண்ணுகிற நிந்தனை யுன்னினமாத்திரத்துக்கெங்கள்மன திம்மாத்திரம் வியாகுலப்படுவதானு லிப்படிப்பட்ட நிந்தனைசெய்த பங்கமும் நெஷ்டூரமுங் கண்டோமாகில் மனதில் வியாகுலம் பொறுக்குமோ ? கண்ணிற் கண்ணீர் தரிக்குமோ ? வாக்கிற் பிரலாபமோயுமோ ? உலையிவிட்ட மெழுகுபோ லெங்கள்மன துருகவேணும். துருத்தியிலெழும்புகிற காற்றுப்போலெங்கள் பிரலாபமெழும்பிச் சமுத்திரம்போ லெங்கள் கண்ணீர் பெருகவேணும்.

அதேதெனி லந்தப் பாவதுரோகியான யூத ரெங்களாண்டவருக்குத் தாங்கள் செய்யநினைத்த வாகடியத்தைச் செலுத்தவேணுமென்று வளைந்துகொண்டு, இவனல்லவோ எங்க ளிராயனென்று சொன்னான். இராயனென்றா லிவனுக்குச் சிங்காசனம் ஸ்தாபிக்கவேண்டாமோ வென்றொரு வுடைந்த நாற்காலியின்மேலிருத்தி யின்னமுமந்த நாற்காலியை யிழுத்துத் தரையில்விழப்பண்ணி மறுபடியுமிருத்தி இந்தப்பிரகாரமாக வாதித்தார்கள். அதன்பின் இவர் மகாராசேந்திரனென்றா லவருக்கோ ரிந்திரவுத்தரியத்தைத் தொடுக்கவேண்டாமோ வென்றொரு சிவப்புச் சகலாத்தைத் தாரைபோர்த்து அபூர்வமான இராசாயத்தமென் றசங்கதமடித்தார்கள். இன்னமு மிவ னிராச்சியமாளுகிற குறிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகக் கையிலொரு செங்கோல்வேண்டாமோ வென்ேறொரு மூங்கிற்றண்டு கரத்திற்கொடுத்து அரசாளு மாளுமென்று கோறணிகொண்டார்கள். அதின்பின் னிந்தப் பூலோக வேகநாயக நிறைசெல்வனுக்குச் சிரசில் வயிரக்கிரீடஞ் சூட்டவேண்டாமோவென் றெழுபத்திரண்டு முள்ளுள்ள காரைக்கொப்பை யொடித்து முடியாக வளைத்துச் சிரசிற் பொருத்திக் கண், காதுமட்டாக விறங்குந்தனையு மடித்தார்கள். அத்தா லெழுபத்திரண் டிரத்தத்தாரைகள் புறப்பட்டுச் சருவாங்கமு மிரத்தத்துவையலாச்சுது. ஐயோ! என் யேசுநாதரே! இந்நேரமட்டுஞ் செய்த வாதைகளா லும் முடைய சரீர அங்கிஷத்திலுள்ள விரத்த மற்றுப்போகப் பண்ணி இப்போ திருச்சிரசில் மிஞ்சியிருந்த விரத்தமு மற்றுப்போகப்பண்ண விந்தவுப்ாயத்தைச் செய்தார்களோ? ஆனு லிந்த வாதையும் போதாம லின்னமுங் கோமாளமாய்ச் சொல்லுவது:— இந்த விராயனுக் காடையாபரணங்கள் கொடுத்ததுமாத்திரம் போதுமோ? அவரெங்களுடைய விராசாவென்றும் நாங்க ளவருடைய குடியானவர்களென்று மஞ்சலிபண்ணி நமஸ்கரிக்கவேணுமென் றேவ்வொருத்தனய் வந் தொருகால் முழந்தாளிட்டெழும்பி மகாராசாவே! நமஸ்காரமென்று சிரித்து நகைப்பாய்க் கையிலிருந்த மூங்கிற்றடியைப் பறித்து வாழ்க வாழ்கவென்று முடியிலோரடியுஞ் சிரசிலோரடியுமா யடிக்கிறவர்களுஞ் சிலர் முள்முடியை யசைக்கிறவர்களும் போர்த்தின சட்டையை யிழுத்துப் போர்க்கிறவர்களு மிப்படியே வாக்குக்கெட்டாத சரசம், கோப்பு, நிந்தனைகளும், வாதை, ஈங்கிஷைகளுஞ் செய்ய எங்க ளாண்டவருக்குப் பொறுக்கப்படாத கடுப்புங் குத்து முளைவும் விதனமு முண்டாகி இரத்தத்தாரைகளாற் கண்ணிமை நிறைந்து கண் திறக்கமாட்டாமலு மதர ரோம மொட்டி வாய்திறக்க வியலாமலு மிப்படியே தேவ மனுஷ குமாரனுக்கு மனுஷரூப சரீர லக்ஷணமொன்று மில்லாமல் ரூபி வெரூபியா யறியப்படாததாயிருந்தார்.

ஐயோ பாதக யூதர்களே! இப்படியே மனுஷனுக்கு மனுஷரூபங் கெடுமட்டும் வாதிக்கலாமோ? ஐயோ என்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ளுண்டவரே! என் யேசுவே! பாவியான வெனக்காக நீரிந்த வீங்கிஷை யவமானங்க ளனுபவிக்கலாமோ? விலைமதியாத நவரத்தின மணிமகுடந் தரிக்கப்பட்ட வும்முடைய சென்னியி லிப்போ முள்முடி யணியலாமோ? பத்தரைமாற்றுப் பசும் பொன்னினுற் செங்கோல் பிடித்திருக்கிற வும்முடைய திருக் கரத்துக்கிப்போ மூங்கிற்றண் டணையலாமோ? தெய்வீக மோக்ஷ வாடையாபரணம் பிரகாசிக்கிற வும்முடைய தேகத் துக்கிப்யோ பீற்றற்றுணி பொதியலாமோ? அதிக வல்லப தத்துவமுள்ள ஞானுதிக்கர் சிரசில் ஸ்தாபித்த பத்திராசனத் தின்மேலிருக்கிற வும்மை முரிந்த நாற்காலியி லிருத்த லாமோ? அதி நிர்மல பத்திச்சுவாலகர் பயபத்தியாய்ப் பார்த் திருக்கிற வும்முடைய திருமுகமண்டல மிந்தவிதம் நிற்பிழை யாகலாமோ? ஒன்பதுசபை மனுேரூபிகளும் மோக்ஷவாசி களுஞ் சாந்தூஸ் சாந்தூஸ் சாந்தூசென்று நித்தமுந் துதித்து நமஸ்கரிக்கிற வுமக் கிப்போ பொல்லாத யூத ரித்தனை தூஷணஞ் சொல்லி நிந்திக்கலாமோ?

ஐயோ வென்னுதனே! என் தேவாதி தேவனே! இப் படிப்பட்ட நிந்தனை யவமானங்களு மீங்கிஷை கஸ்திவாதை களும் நீரனுபவிக்கிற தெந்த நிமித்தமோ?

இசையாசென்கிற தீர்க்கதரிசி முன்னெழுதின பிரகார மெங்கள் பாவமானது சிவப்புச்சகலாத்துப்போலவுங் குரோத விரோதமானது செங்கண்மாரிபோலவு மென்றதினு லின் றுமக்குச் சிவப்புப்பீற லணியவாச்சுது.

சுவிசேஷக லூக்கா வெழுதினமேரை இவ்வுலோகத் தின் சம்பத்து முள்ளுக்குச் சமானமென்கிறதினு லெங்கள் சம்பத்துவாஞ்சையினு லுமக்கு முள்முடி தரிக்கவாச்சுது. எங்களாங்காரங் கற்பருவதச் சமானமானதினு லின் றுமக் குக் கற்பாரின்மீதே யிருப்பாச்சுது. எங்களுடைய கிரிகை வாக்குகள் பொய்யாங்கமும் வியர்த்தமுமாயிருக்கிறதினு லின் றுமக்கு வெண்டாயிருக்கிற வெறும் மூங்கிற்றண்டு கையிற் கொடுக்கப்பட்டது. நாங்கள் வீறுபாராட்டி யெங்களை வெகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிக்கிறதினு லின் றுமக்கு அவமானிக்கிறதும் நிந்திக்கிறது மாச்சுது.

ஐயோ கிறீஸ்தவர்களே! இந்த வாதை நிந்தனைமேரையெல்லா மெங்கள் பாவச்சாயலா யிருக்கிறபோதே இப்படிப் பட்ட பாவங்களை நாங்கள் விட்டுவிட்டு எங்க ளாண்டவருடைய வாதைகளை யாறுதலாக்கவேண்டாமோ? முட்களுக்குச் சமானமாயிருக்கிற வெங்கள் திரவியவாஞ்சையை விட்டவருடைய திருத்தலையின் முள்முடியை இறக்கவேண்டாமோ? வியர்த்த வெறுமையான வெங்கள் பொய்யாங்க வஞ்சகக் கிரிகைகளைவிட் டதின்குறிப்பா யாண்டவர் கையிலிருக்கிற வெண்டுக்குழலை யகலிக்கவேண்டாமோ? எங்களுடைய வகந்தை, பெருமைகளை நீங்கி ஆண்டவரைக் கற்பாறையான விருப்பிடத்தைவிட் டெழுப்பவேண்டாமோ? எங்களுடைய வீறு பாராட்டுதலைவிட் டவருடைய சரச நிந்தைகளை அகற்ற வேண்டாமே?

இந்தச் சொல்லப்பட்ட வித்தனைபோதகங்களா லுங்களுடைய மன துருகவில்லையென்று லெங்க ளாண்டவர்தாமே எங்க ளிராசாவானவர்தாமே எங்கள் பிதாவுஞ் சருவேசுரனுமாகிய வவர்தாமே எங்களைப்பார்த்துச் சொல்லுகிற வாக்கியங்களைக் கேளுங்கோ :—

பாவிகளான மக்களே! எனதப்பிரமாண பக்ஷத்தாலுங்களைப் படைத்ததினு லிந்த அளவற்ற ஈங்கிஷைகளெனக்குச் சம்பவித்திருக்குது. உங்களுக்கு நடக்கவுந் தெண்டிக்கவுங் கை, கால் கொடுத்ததினு லெனது கரம் பந்தனப்பட்டு, சரணங்களால் நடக்கப்படாததாயிருக்குதே. உங்களுக்குப் பேசப்பறைய வாய்கொடுத்ததினு லென்னுடைய முகத்திலிரத்தம்பெருகி வாய்திறக்கமாட்டாம லிருக்குதே. உங்களுக்குக் கண்பார்க்கவுங் காதுகேட்கவுங் கொடுத்ததினு லென் கண் புருவமட்டாகவுங் காதுக்குறும்பி மட்டாகவும் முள்ளுகளுடுருவியிருக்குதே. உங்களுக் கிராச்சியபாரங்களைக் கொடுத்ததினால் நமக்குப் பரிகாச இராசாயத்தமுண்டாச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதே. இப்படியே உங்களுக்காக விம்மாத்திர மவலக்ஷண மாகித் தேவவேஷமும் மனுஷவேஷமும் மட்டறியாதவாகா யிருக்கிறதைப் பாருங்கோ. இந்த வெழுபத்திரண்டு முள் முனையாற் புறப்படுகிற விரத்தவூறணிகளாற் சருவாங்கமுந் தோய்ந்திருக்கிறதைப்பார்த் திந்தவூறணிகளி லுங்கள் பாவங் களைத் தோய்க்கவும் ஆத்துமங்களைச் சுத்தமாக்கவும் வாருங்கோ. கெம்பீர கருவமுள்ள பாவிகளே! இன்று நான் பணிந்திருக்கிற தனிமையைப்பார்த் துங்களுடைய வகந்தை களை யடக்குங்கோ. குரோத விரோதமுள்ள பாவிகளே! என்னுடைய சாந்துவத்தைப்பார்த் துங்களுடைய மூர்க்கங் களைத் தணியுங்கோ. திரவியவாஞ்சை யுள்ளவர்களே! என் னுடைய தாரித்திரியத்தைப்பார்த் துங்களுடைய ஆசை நற் ருசைகளை விடுங்கோ. அலங்கார வணிமைகளையுஞ் சுக செல்வங்களையும் விரும்புகிறவர்களே! என்னுடைய சரீர விதனமு மணிந்த பீறலையும்பார்த்துச் சுகசெல்வ வாஞ்சைக ளெல்லாம் போக்கடியுங்கோ. நா னுங்களுக்குச் சொல்லுகிற விந்த நல்லறிவை மறவாதையுங்கோ. உங்களுடைய தாய் தந்தையரிலு மிக்காய மாதா பிதா நாமே. உங்களுடைய சகோதரர்களிலு மதிக பக்ஷமுள்ள பிறப்பு நாமே. உங்க ளுடைய சிநேகிதரிலு மதிக வன்புள்ள நேசவாதி நாமே. நா னுங்களுக்காகப் படுகிற பாடுகளையும் நிந்தை நிசிதங்களை யும் மரணவாதைகளையு முங்களுடைய சிநேகமுள்ள பிதா மாதாக்கள் படுவாருண்டோ? அன்பர், சிநேகிதர் படுவா ருண்டோ? இல்லையே. அதினுற் பிரியமுள்ள மக்களே! என் வாக்கை மறக்கக்கடவதல்லவென் றெங்களாண்டவர் சொல்லுகிருர்.

ஐயோ கிறீஸ்தவர்களே! இப்படியே எங்கள் சீவனுகிய சுவாமி சொல்லுகிற வசனங்களைக்கேட் டெங்கள் மனதில் விதனமில்லாதிருப்போமோ? இன்னமும் பாவங்களை விடாமல் லோகத்தை விரும்பியிருப்போமோ? எங்க ளாண்டவ ரிருக்கிற வேஷத்தைப்பார்த் தின்னமு மெங்கள் முகத்திலே அழகு தேடுவோமோ? சரீரத்திற் சுகந்தேடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


வோமோ? ஆபரணங்களைப் பாராட்டுவோமோ? வடிவு வஸ்திரங்களைத் தேடுவோமோ? பெருமை வெகுமானங்களை விரும்புவோமோ? ஐயோ என் யேசுவே! என்னுண்டவரே! என்னிராசாவே! உம்மைப் பார்த்து நாங்களின்று பூலோக வாஞ்சையை விடவும் உம்முடைய திருப்பாதத்தை நமஸ்காரம் பண்ணி யெங்கள் பாவங்களுக்குப் பொறுதிகேட்கவு மும்முடைய துக்கித்த திருமுகத்தை எங்களுக்குக் காண்பியுஞ் சுவாமீ.




## உத்தம மனஸ்தாப மந்திரம்

எனது பக்ஷபிரமாணமுள்ள யேசுவே! இற்றைவரைக்கும் நாங்கள் இச்சித்த லோகவாஞ்சைகளை விடுகிறோம். சுக செல்வங்களை விடுகிறோம். கருவத்தையும் பெருமையையும் விடுகிறோம். சகல வகங்காரத்தைவிட்டு உம்முடைய நிசிதவேஷத்தைப் பின்செல்லுகிறோம். எங்கள் பாவங்களைப் பொறுஞ்சுவாமீ! உம்முடைய முள்முடியையும் பரிகாச நிந்தைகளையும் பார்த்து எங்கள் பாவத்தைப் பொறுஞ்சுவாமீ! உம்முடைய அனந்த கிருபையால் பொறுத்துக்கொள்ளுஞ் சுவாமீ! ஆமென் யேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் பிரசங்கம்

## யேசுநாதர் பிலாத்துவினல் "எக்சே ஓமோ" என்று சனங்களுக்குக் காண்பிக்கப்பட்ட குறிப்பிடங் காண்பிக்கப்படுவது

இதுவரையு மெங்களாண்டவர்பட்ட வெவ்வேறே பாடுகளை முன்பிரசங்கங்களிலே சொன்னேமே. இப்போதவரை யூதருக்குக் காண்பித்துச் சிலுவையிலே அறையத்தக்கதாகப் பிலாத்துதீர்த்த நடுவின் வர்த்தமானஞ் சொல்லக்கடவோம்.

அப்படிப்பட்ட நடுவின் நீத வந்நீத கிரமத்தைத் தெளிவோடே காணத்தக்கதாக விரண்டு குற்றவாளரு மிரண்டு நடுவரு முண்டாயிருக்கிறார்களென்று நினைத்துக்கொள்ளுவோம். குற்றவாள ரிருவ ராரென்று லத்தறுவாயிலே யகப்பட்டிருந்த வறவாசென்கிறகள்ளனுந் தேவகற்பனைமறுத்த வெங்க ளாதித் தகப்பனுரு மிவர்களிருவரு மிரண்டு குற்ற

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாளராம். அதேதெனில் வறவாசென்கிற கள்ளன் பிற ருடைமையைக் கொள்ளையாடினதினுலும் மனுஷரை வதைத்ததினுலு மூலோக கள்ளனென்று சொல்லப்படும். ஆதாமென்கிற வாதித்தகப்பனுர் சருவேசுரனு லெங்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதங்களைச் சேதப்படுத்தினதினுலும், நரகமரணத்துக் கெங்களை யேதுவாக்கின்தினுலும் ஆத்தும கள்ளனென்று சொல்லப்படும். ஆனுலின்று ஆதாமென்கிற ஆத்தும கள்ளனுடைய வேஷத்தைக்கொண் டெங்க ளாண்டவ ரிருக்கிறதென்றும் வறவாசென்கிற கள்ளனிட மாய் நாங்க ளிருக்கிறுமென்றும் நினைக்கக்கடவோம்.

ஆனதினு லிந்த விரண்டுவித குற்றவாளருக்கும் நடுச் சொல்லுகிற விரண்டுவித நடுவராரென்ருற் பிலாத்துவென் கிறவன் லோகநடுவனுய்ப் பிதாவாகிய சருவேசுரன் பிராண நடுவனுய் நடுத்தீர்க்கிருர்கள். பிலாத்துவென்கிற லோகநடு வன் லோகருக்குப் பயந்து வற்வாசென்கிற குற்றவாளனை விட்டுவிட்டு அற்பமுங் குற்றமில்லாத வெங்கள் யேசுநாத ரைக் கொல்லத் தீர்வையிட்டான். பிதாவாகிய சருவேசுர னளவில்லாத கிருபையா லெங்க ளாத்துமத்தின்மேலிரங்கி நரகமரணத்துக்குப் பாத்திரமான நாங்கள் பிழைக்கவுந் தம் முடைய திருக்குமாரன் மரணிக்கவும் பொருத்தமானுர். ஆனுற் கிறீஸ்தவர்களே! ஒரு குற்றமுமில்லாத வெங்க ளாண்டவ ரின்று நடுவுக்குள்ளானபோதே அளவற்ற குற்ற முள்ள வெங்களுக் கெத்தனை கடினமான நடுத்தீர்வையுண்டா யிருக்குமோவென்று நினைத்துக்கொள்ளுவோம்.

அதேதென்ரு லெங்களாண்டவர்பேரிலே பொய்யாய்ச் சுமத்தியிருக்கிற சகல குற்றங்க ளெங்கள்மேல் மெய்யாகவே காணலாயிருக்குது. வறவாசென்கிறவனுடைய பாதகங் களினு மேலா யெங்களுடைய பாவதோஷங்கள் மிகுந்திருக் குது. அவன் கள்ளனுனுற் புறத்தியாருடைமையை யதிக மாய்க் களவாண்கிறது நாங்களே. அவன் மீறினவனுனுல் தேவகற்பனைகளை நாளுக்குநா ளதிகமாய் மீறுகிறவர்கள் நாங்களே. அவன் கொலைபாதகனுனு லதிகமா யாத்துமாக் களைச் சேதப்படுத்துகிறவர்கள் நாங்களே. அவன் குழப்பக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரனென்றால் மனுஷருடைய மனதுகளை யதிகமாய்க் குழப்புகிறவர்கள் நாங்களே. இப்படியே சகலமான பாதகங்களுக்கும் நாங்க ளுளராயிருக்கிறபோதே யெந்தநடுவிலு மீடேற மாட்டோமென்கிறதை யெங்க ளாண்டவ ரறிந் தின்று தாமே யெங்க ளீடாளியாக நமது சகல பாவங்களையுந் தளவு குழப்பங்களையுந் தம்முடைய பேரிற் சுமத்தி யெங்களுடைய நியமனமான மரணத்தைத் தா மனுபவிக்க வாயத்தமாயிருந்து எங்களைப்பார்த்து வசனிக்கிறதைக் கேளுங்கோ :—

என் னன்பான மக்களே! நீங்கள் செய்த பாவங்களினிமித்த மீடேற வடைமானமில்லாமல் நரகத்துக்குப் போகலாச்சுதென்று மினிக் கைதூக்குவா ராரென்றும் வியாகுலப்படவேண்டியதல்ல. இதோ நா னுங்களுடைய பிணையாளியாயிருக்கிறேன். உங்கள் கைகளிற் களவிருந்தா லென் கையைக் கட்டக்கொடுக்கிறேன். நீங்கள் படவேண்டிய வடிகள் நான் படுகிறேன். நீங்கள் செய்கிற சகல குற்றங்களுக்கும் நான் குற்றவாளனென்று பேர்ப்பட் டுங்களுக்கு வருகிற நெஷ்டூர நடுத்தீர்வைக்கு நானே யேதுவாய் உங்களுடைய மரணத்தை விலக்கி நான் மரணிக்கப்போகிறேனென்று திருவுளம்பற்றுகிறார்.

இப்படியே ஆயத்தமாயிருக்கிற வெங்களாண்டவரை யூதர் கொள்ளாத பங்கங்களையும் வாதைகளையும் படுத்தினதின்பின் பிலாத்துவின் முன்பாகக் கொண்டுவந்தார்கள். அப்போது பிலாத்து ஆண்டவரைப்பார்த் தவர்மேலிருக்கிற காயங்களையு மோடுகிற விரத்தங்களையும் முகத்தில் சிரசில் மனுஷரூப சாயலில்லாம லிருக்கிறதையுங்கண்டு மனதில் வியாகுல மடங்காமல், ஐயோ! இப்படியே மனுஷனுக்கு மனுஷரூப மில்லாமற் பண்ணுவார்களோவென்று வெகு அபயத்தோடு பரிதபித்துப் பிரலாபித்து இவனை வாதிக்கிற நெஷ்டூரத்தைக் கண்டா லிரங்காதவருண்டோ? பரதவியாதவர்களுண்டோ? எவராகிலுங் கண்டாற் போதும் போது மிவனை விடுங்கோ வென்பார்களேயென்று நினைத்து ஆண்டவர்பேரி லிரக்கமாய்ச் சபையிலேகொண்டுவந்து காண்பிக்கத்தக்கதாக வொருமித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனதினு லாண்டவருடைய திருக்கரத்தை யுறவணைத்து நிலத்திலே கால்பாவவொண்ணாததினு லடிமே லடிவைத்து மெல்ல மெல்ல நடத்தி அரண்மனையின் புறச்சாலையில் வெளிப் படுத்தி முற்றவெளியிலிருந்த வெண்ணில்லாத யூதர்சேனை கள்முன்புாகக் கொண்டுவந்து நிறுத்தினுன். அப்போ தாண் டவ ரிருந்ததன்மை யெப்படியோவென்ருல், திருச்சரீரத்திற் சிவப்புச் சகலாத்துப் போர்த்தியிருக்கிறதுமாய்த் திருக்கரங் கள் கட்டப்பட்டதுமாய்த் திருச்சிரசில் முள்முடியுங் கையில் மூங்கிற்றண்டு மணைந்திருக்கிறதுமாய் மாங்கிஷந் தெறிபட் டுக் கன்னங்கள் சரிந்ததுமாய்ச் சிரசில், முகத்தில் ரோமம் விதறப்பட்டுக் கண் ணேறச்சொருகி முகமண்டலம் வீங்கித் ததும்பியிருக்கிறதுமாய் உச்சிதொடுத் துள்ளங்கால்மட்டா கக் காயப்பட்டுச் சிதைவுண்டு·முதுகும் மார்பு மொரேபுண் ணுய்ச் சருவாங்கமும் வேற்றுருவாய் மனுஷவிலக்ஷண சாய லொன்று மில்லாமலிருந்தார்.

இந்தச் சாயலாகப் பிலாத்துவென்கிறவ ணுண்டவ ருடைய சட்டையைநீக்கி யூதர்முன்பாகக் காண்பித்து, "எக்சே ஓமோ" என்ற வசனத்தில் இதோ! இந்த மனுஷ ணைப்பாருங்கோ! இதோ! இந்த மனுஷனுக்கு மனுஷரூப முண்டோவென்று பாருங்கோ! இவன் மனுஷனுனல் மனுஷ சரீரத்திலுள்ள மாங்கிஷ மிவன் சரீரத்திலுண்டோ! மனுஷனு லெவனுக்குமுள்ள வென்பு தோல்க ளிவனங் கத்தி லுண்டோவென்று பாருங்கோ! சரீரத்திலொரு அவயவமுறுப்பானுலும் ஆம்படியிருக்குதோ! தபோரென் கிற மலையிற் கண்ட சூரியவொளியானமுக மிந்தமுகந்தானே வென்று பாருங்கோ! சீனுவென்கிற குன்றில் மோய்சேசு கண்ட மோக்ஷபிரதாப முதுகின் மகிமை இதுதானே! எசித்திராச்சியத்திற் பார்வோனென்கிற விராசாவின் முன் பாக வற்புதங்கள் செய்த அங்குலி இதுதானே பாருங்கோ! எழுவான்திக்கி லிருந்துவந்த மூவிராசாக்கள் நமஸ்காரம் பண்ணின பாதங்க ளிந்தப் பாதபற்பந்தானே பாருங்கோ! தேவனு மிராசாவும் மனுஷனு மொன்ருனவரென்று மூன்று காணிக்கைகளாற் குறிக்கப்பட்டவர் இவர்தானே! தேவ னென்ருற் தெய்வீக சாயலாய்க் காண்குதோ! இராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னென்றா லிராசமகிமை யிருக்குதோ! மனுஷனென்றால் மனுஷலக்ஷணந் தெரியுதோ! இல்லையே. ஆனாற் பாதக யூதர்களே! இம்மாத்திரம் வாதை வேதனைகளாலும் நெஷ்டூர பங்கங்களாலுங் குற்றமில்லாத விந்தமனுஷனை மனுஷரூபம் வேற்றுருவாகுந்தனையும் வாதித்தபோதே இனிமேலாகிலும் விட்டுவிடவேண்டாமோவென்று கேட்ட விடத்திலே, அந்தத் துஷ்ட நெஷ்டூர யூதர் முகத்தைத் திருப்பிக்கொண்டு இந்தமனுஷ னெங்கள் கண்முன்பாக நிற்கவேண்டாம். எங்கள் முகத்திலே விழிக்கவேண்டாம். சிலுவையி லறைந்து கொல்லுங்கோ, கொலைசெய்யுங்கோ வென்று மகா அபயக்குரலாய்க் கூப்பிட்டுச் சொன்னார்கள்.

இப்படிப்பட்ட நெஷ்டூரத்தைக்கண்டு பிலாத்துவென் கிற துரையன் மிகவுஞ் சோபித்து என்செய்வேனென்று தனதுள்ளறையிற் போய் விசாரமாயிருக்கிறவேளையில் தன் னகமுடையா ளாண்டவரைக்கொண்டு கண்ட தெரிசனங்க ளாற் பயந் தவரை விட்டுவிடவேணுமென் றொரு ஏவலாளை அனுப்பினாள்.

அதினாற் பிலாத்தென்கிறவ னாண்டவரை விட்டுவிட வேணுமென் றொருமித்து நடுக்கட்டில்வந்து, இவன்பேரி லொரு குற்றமு முண்டானபரிசாய்க் காணவில்லையே. எந்த நியாயத்தினால் வாதிக்கலாம்? விட்டுவிட நியாயமென்று யூதர்முன்பாகச் சொன்னவிடத்திலே, இராசதுரோகந் தேவ துரோகஞ்செய்த விவனை விட்டுவிட்டால் நீர் சேசார் மகா ராயனுக்குப் பக்ஷமுள்ளவரா யிருக்கமாட்டீரென்று சொன் னார்கள். அதினாற் தன்னுடைய துரைத்தனத்துக்கு விரோ தம்வருமென் றஞ்சித் தன்னுடைய நடுவாசனத்தி லிருந்து இந்த மனுஷனுடைய விரத்தப்பழி யென்பேரிலில்லை; இந்தப் பாவதோஷமு மென்கையிலில்லையென்று தண் ணீரைக்கொண்டு கைபூசிப்போட்டான்.

அந்நேரம் யூதரெல்லாருங் குரவையிட் டந்த விரத்தமும் பாவமு மெங்கள்மேலு மெங்கள் பிதிர்வழிமேலு முண்டா யிருக்கட்டுமென்றார்கள். ஆகையாற் பிலாத்துவென்கிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரையின் யூதர் கேட்டுநின்றபிரகாரமாய்த் தீர்வை யெழுதி ஆண்டவரை அவர்கள்கையி லொப்புக்கொடுத்தான்.

அந்தத்தீர்வையின் விபர மெப்படியோவென்றால், ஐயோ கிறீஸ்தவர்களே! கேட்டமனுஷர் பயங்கரத்தோடியங்குகிறதுமாய்ப் பருவதங்க ளதிர்கிறதுமாய் வானமும் பூமியும் நடுக்கங்கொண்டிருக்கவும் நியாயமாயிருக்குமே.

அதேதெனில், யேசுநசரேனுவென்கிறவன் மகா புரளிக்காரன், குழப்பக்காரன், இராசதுரோகி, தேவதுரோகியென்கிறதினாற் சிலுவையிலறைந்துகொல்லத் தீர்வையிட்டோமென் றெழுதப்பட்டது.

ஐயோ! இப்படிப்பட்ட துஷ்ட அதர்மிஷ்ட பாதகமான தீர்வையைச் சொல்ல நா வழங்கினதோ? எழுதக் கை வழங்கினதோ? லோகத்தை யிரக்ஷிக்கிறவர் கொலைபாதகனாய், சம்பத்துக் கொடுக்கிறவர் சோரனாய், மோக்ஷவழி காட்டுகிறவர் குழப்பக்காரனாய், நியாயந்தீர்ந்ததே. ஐயோ பிலாத்தாசுவே! உன்னுடைய சீவனாயிருக்கிறவரைக் கொல்லவுஞ் சரீரவாரோக்கியமா யிருக்கிறவரை வாதிக்கவும், வெகுமானராசாங்கமாயிருக்கிறவரை நிந்தைபண்ணவுந் தீர்வையிடுகிறாயோ? உன்னுடைய நடுத்தீர்ப்பவருக்கு நீ நடுவனாயிருக்கிறாயோ? உனது குருவுக்கு மாண்டவருக்கும் உனதிராசாவுக்கு முன்தேவனுக்கும் நடுச்சொல்லுகிறாயோ? உலோகத்திலே சீவித்த மரித்த சகலருக்கும் மகா நீதவானாய் நடுச்சொல்ல வருகிறவருக்கு நீ நடுச்சொல்லுகிறாயோ? ஐயோ கிறீஸ்தவர்களே! வானம் பூமியில் விழுந்து பூமி வானத்திலேறின பிரகாரமான நியாயமாச்சுதே. பாவம் மேற்பட்டுச் சுகிர்தம் மிதிபட்ட மருவாதியாச்சுதே. தா முண்டாக்கின நாவுகள் தம்மை மரணிக்கக் கூப்பிடுகிறதுந் தா முண்டாக்கின கைகள் தமக்குத் தீர்வையெழுதுகிறதுந் தாம் படைத்த சகல பொருட்களுந் தம்மை வதைக்க வியற்றினங் கொடுக்கிறதுமாய் ஆச்சுதே.

ஐயோ கிறீஸ்தவர்களே! இத்தனை நேர மெங்களாண்டவர் பட்ட பாடுகளிலே உயிர்பிழைக்குமென்று யாதொரு நம்பிக்கை கொள்ளலாயிருந்தது. இப்போ மரணிக்கவேணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்று தீர்ந்த தீர்வையைப் பறையிடச் சகல நம்பிக்கையு மற்றுப்போச்சுதே.

ஐயோ என்னிரக்கமுள்ள ஆண்டவரே! தேவரீர்பேரி லொரு குற்றமுமில்லாததை வானமும் பூமியு மறியும். தேவனு மனுஷருஞ் சகலமு மறியும். இப்படியிருக்க வெத்தனே நடுச்சபையேறியு முமக்கிழப்பமல்லாதே இளக்கமொன்றுங் காணவில்லையே. மூந்தமூந்த வகைப்பட்ட சத்துருச்சபையிலே உம்மைக் கள்ளனுகக் கட்டப்படத் தீர்ந்ததே. ஆனுசு கைப் பாசென்கிற குருமார்சபையிலே தேவதுரோகனென்று வாதிக்கத் தீர்ந்ததே. ஏரோதைராசாவின் சபையிலே மதி கேடனென்று நிந்தித்துப் பரிகாசிக்கத் தீர்ந்ததே. பிலாத்து வென்கிற நடுவனுல் முதல் நீசதாசனுயடிபடவும், பின் கொலை பாதகனுய்க் கொலையுண்ணவுந் தீர்ந்ததே. இப்படியே லோகத்தின் சகல சபைகளிலு மொரு விரக்கமும் நியாயமுங் காணுதபோதே பரலோகத்திற் சகல சபையோர்களுஞ் சகல விரக்கமுள்ள வநாதிபிதாவும் நீர் மரணிக்கவேணுமென்று சித்தமாயிருக்கிருர்களே.

இப்படியே கிறீஸ்தவர்களே! வானமும் பூமியுஞ் சகல லோகமு மொரு வார்த்தையா யெங்களாண்டவர் மரணிக்க வேணுமென்றுசொல்லிச் சகலபொருட்களு மெங்கள் நாதனே வதைக்க இணங்கினதா யொருவராலும் விலக்கப்போகாத தீர்வையாச்சுதே. இப்படிப்பட்ட தீர்வை எவனுலேவந்த தீர் வையென்று நினைக்கிறீர்களோ? பிலாத்துவும் யூதருமிட்ட தீர்வையல்லவே; எங்கள் பாவத்தினுடைய துன்மார்க்க விசாரங்க ளிந்தத் தீர்வை நிரூபித்தது மெங்களக்கிரமமான நாக்குக ளிந்தத்தீர்வை யுச்சரித்தது மெங்களக்கிருத்தியமான கைக ளெழுதினதுமென் றறிந்துகொள்ளுவோம். ஐயோ! எங்கள் பாவத்தினுடைய கொடுமையி னதிகத்தாற் பூலோ கத்திலே செய்த கொலைகள் போதாமற் பரலோகத்திலே யிருக்கிற ஆண்டவரையும் பூலோகத்திலே கொண்டுவந்து கொல்லுகிறேம்.

ஐயோ! இப்படியே நாங்கள் செய்த விந்தக் கொடுமை யான பாதகத்துக்கு விதனமென்கிற வீரரிவாளா லெங்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ளிருதய மிரு அங்கிஷமாய்ப் பிளந்துபோகவேண்டாமோ? மனஸ்தாப மென்கிற வக்கினியாற் சருவாங்கமு மெரிந்து நீறாய்ப் போகவேண்டாமோ? துக்கமென்ற நீரேரியாய்க் கண்ணீர் பெருகிச் சகல ரோமத் துவாரங்களிலுஞ் சிலீரிட் டோட வேண்டாமோ?

ஐயோ என் சீவனாகிய ஆண்டவரே! நாங்க ளுமக்குச் செய்த விந்தக் கொடிய திரோகங்களையு மெண்ணில்லாத பாவத் துரோகங்களையுந் தேவரீர் பொறுக்கிறதல்லாதே வேறொருவராலு மேலுவதில்லையே. எங்களுடைய துஷ் டாட்டத்தி னவலக்ஷணத்தைத் தேவரீருடைய விரக்கத்தின் திரையால் மூடுகிறதல்லாதே வேறே யடைமானமில்லையே. ஆனதினா லிப்படிப்பட்ட பாவத்தினுடைய பொறுதியைக் கேட்கவும், உம்முண்டைய திருப்பாதத்தை நமஸ்கரித் தாரா திக்கவும் உம்முடைய துக்கித்த திருமுகத்தை எங்களுக்குக் காண்பியுஞ் சுவாமீ.



## உத்தம மனஸ்தாப மந்திரம்

எனது பக்ஷபிரமாணமுள்ள யேசுவே! என் தேவனே! இராயனே! தேவரீருடைய மனுஷரூப மின்றெங்கள் பாவத்தால் வேற்றுரூபமா யிருக்கிறதைப்பார்த்து எங்கள் பாவ அக்கிரமத்தை நீக்கியருளுஞ் சுவாமீ! உம்முடைய சரீரம் அவலக்ஷணமாயிருக்கிறதைப் பார்த்து எங்க ளாத்துமத்துக்குத் தருமவலங்காரத்தைத் தந்தருளுஞ் சுவாமீ! நீர் மரணத்துக்குத் தீர்வையனுபவித்ததினா லெங்களுக்குப் பாவ மரணமும், நரக மரணமும் விலக்குஞ் சுவாமீ! உம்முடைய வனந்த கிருபையா லெங்களுடைய சகல பாவங்களைப் பொறுத்து இரக்ஷியுஞ் சுவாமீ! ஆமென்யேசு.



117862

# ஆறும் பிரசங்கம்

## யேசுநாதர் சிலுவை சுமந்துகொண்டுபோன குறிப்பிடங் காண்பிக்கப்படுவது

அளவற்ற தயை தர்ம சுரூபியாயிருக்கிற எங்கள் யேசு நாதரை நானாவித வாதைகள் படுத்தினதின்பின் சிலுவையி லறையத் தீர்வையெழுதிக்கொடுத்தமேரை முன்பிரசங்கத் திலே சொல்லப்பட்டதே. இப்போ தாண்டவர் தாம் மர ணிக்கப்போகிற சிலுவையைத் தமது தோளிலே சுமந்து கபாலமலைமட்டும் நடந்த வர்த்தமானத்தைச் சொல்லக்கட வோம்.

அதெப்பரிசோவென்றால் பிலாத்துவென்கிற நடுவ னெங்க ளாண்டவரைச் சிலுவையி லறையத்தக்கதாக வந் நீதமான தீர்வையெழுதி யவரை யூதர்கையி லொப்புக் கொடுத்தவுடனே இயமர்கையி லகப்பட்ட தங்கள் சத்துராதி போலவுந் துஷ்ட மிருகங்கள்வாயி லகப்பட்ட விரைபோலவும் அந்தக் கொடிய யூதர் சந்தோஷமாய்க் குதித்து உல்லாசங்க

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோடு ஆண்டவரை முடுகித்து அவரிருந்த அரண்மனைப் புறச்சாலையில் நின்று நெஷ்டூரமான வாதிப்போடு கற்படியி லிழுப்பா யிறங்கப்பண்ணி முற்றவெளியிற் கொண்டுவந்தார் கள். அவ்விடத்திலே அவருக்குப் பரிகாசமா யுடுப்பாட்டின சிவப்பாயத்தத்தையும் முள்முடியையுங் கழற்றி அவருடைய தானிக்கையென்கிற தையலில்லாத நீளிய சட்டையை அணி வித்துச் சிரசிலிருந்த முள்முடியையும் நவமாகவிருத்திப் பெலப்படுத்தினுர்கள். அப்போது மூவைந்தடி நீளமாய் மூட்டியிருந்த சிலுவைமரத்தைக் கொண்டுவந் தாண்டவர் முன்னுலே காண்பித்து இந்தச் சிலுவையில் நீ இறந் தெங்கள் வேதப்பழியு மிராச்சியப்பழியும் உத்தரிக்க வுனது தோளிலேதானே சுமந்து போவாயென்றுசொல்ல ஆண்டவ ரதைப்பார்த்து அதினுல் மனுஷருடைய ஆத்துமத்தை யீடேற்றவேணுமென்று மகா தயையோ டணைத்துக் கை யேற்றுக்கொண்டார்.

அந்நேர மந்தத் துஷ்டயூத ராண்டவர் சிலுவையோடு நொருங்கி விழவேணுமென்ற கொடுமையோடு அந்தப் பார மான சிலுவையையுயர்த்தி யொரு பெலனுய்த் தோளிலே விழத்தட்டினவுடனே யத்தோடே ஆண்டவர் முகங்குப்புற விழுந்து அவர்மேற் சிலுவைமரம்விழுந்து திரிகைக் கல்லுக்கு ளகப்பட்ட கோதும்பை யரிசிமணிபோல வென்பு, நரம்பு, தோலிதுமுதலான சருவாங்கமும் நொருங்குண்டதா யெழும்ப மாட்டாத வேதனை விதனமாச்சுது.

ஐயோ கிறீஸ்தவர்களே! உகமுடியுங்காலத்திலே நக்ஷத்திரங்கள் பூமியில் விழுமென்று சொல்லப்பட்டதே. ஆனுலிப்போ நக்ஷத்திரம் விழுமுன்னமே யதுக் கொளிவு கொடுக்கிற விந்தத் தெய்வீக சூரியமண்டலந் தரையில் விழ வாச்சுதே. சந்திரனுன முகமண்டலம் பூமண்டலத்தோ டடிபடவாச்சுதே. ஐயோ! எங்கள் பாவத்தினுடைய கொடுமை துஷ்டாட்டத்தினுடைய வதிகம் வானமுகடுமட்டா யேறுண்டு இவ்வண்ணம் பண்ணினதுபோ லாச்சுதே. ஆனுற் கிறீஸ்தவர்களே! எங்களாண்டவரை யின்று விழுத் தாட்டின சிலுவைப்பாரம் மரத்தின் பாரமென்று நினைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீர்களோ? அதில்லையே. மரத்தின்பாரம்பொறுக்க வெங்களாண்டவர் சரீரத்திற் சவியில்லாதிருக்கிலும் ஆத்துமத்திற் சவுரியமுந் தேவவல்லமையுமுண்டு. ஆனு லந்தச் சிலுவைமரத்தின்மீதே கற்பருவதங்களை யேற்றினதுபோலச் சகலலோகருடைய வாங்கார கெறுவமென்கிற பாவப்பருவதங்கள் சிலுவையோ டிசைத்திருந்ததினுற் சக்ல சவியுமற்று விழுந்தாரென் றறியவும்.

அப்போ தந்தக் கொடிய யூத ராண்டவரைச் சிலுவையிலே யறையத் தீவிரிக்கவேணுமென்றபடியா லீட்டிப் பிடங்குகளால் நெம்பியெழும்பப்பண்ணி மறுபடியுஞ் சிலுவையைத் தோளிலேற்றி வீதியூடே நடத்தின நெஷ்டூரமுங் கொடுமையுங் கண்டவர்கள் கல்நெஞ்சராயிருக்கிலு மிளகி, யுருகி, யழாதவர்களுண்டோ? ஆனதினு லந்தவாதையோடே நடந்ததெரு கசந்தவீதியென்று பேர்ப்பட்டது.

இந்த வீதிவழியே யாண்டவர் நடந்த மேரை யெப்படியென்றால், கரங்கள் கட்டினகயிறு ஒரு சேவகன்பிடிக்கக் கண்டத்திற் சங்கிலி மற்றொருவன் கையாட, அரையிற் பூட்டின பாசம் வேறே யிருவர் கைக்கொள்ள இருப்புச் சுவடணிந்த பரிசேவு சமுதாயங்க ளிருபக்க மணியணியாய்த் தம்பூரு, தாரை, காளச்சத்தமுமா யீட்டி கேடையங் கொடிதிரிசூலங்கள் கைக்கொண்டிருக்க விவர்களெல்லாருக்கு முகாரியாயிருக்கிற சேர்வைக்காரன் சற்பாதந் தலைக்கருவி யிருப்புச்சுவடணிந்து நடுவிடமாய் ஆண்டவரைப்பார்த்துப் பின்கால்நடையோடு நடக்க இந்தமேரையாய்ச் சேனையணி வகுத்துப் பிலாத்து எழுதிக்கொடுத்த தீர்வைநிருபம் வாசித்து வாசித்து நடத்திக்கொண்டுபோனார்கள். அந்தத் தீர்வை வாசகமேதென்றால், நசரேனுவான யேசுவென்கிறவன் இராசபுரளிக்காரனுய்த் தேவபழிகாரனுய்ச் சிலுவையிலே யறைந்து கொலையுண்ணத் தீர்ந்த தீர்வையாச்சுதென்று பறையிடுவார்கள்.

அந்நேரந்தானே பிதாவாகிய சருவேசுரன் வேறுவிதமாய்த் தீர்வைசொல்லி யிந்தத் தேவகுமாரன் அற்பதோஷமு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லாதவுராய் மனுஷருடைய வீடேற்றத்துக்காக மரிக்கப் போகிருரென்கிற பறையிடுசத்தங் கேட்கிறதாயிருந்தது.

இப்படியே கொலைக்களத்துக்குப்போகிற ஆண்டவரை வாதித்து, நிந்தித்து மகா ஆர்ப்பரிப்பாய்க் கோலாகலம்பண்ணிக்கொண்டு போகிறபோது அந்த நிர்ப்பாக்கியமான நகரியிலுள்ள வெண்ணில்லாதசனங்க ளெங்கே கூட்டங்கூட்டமாய்க் கூடிப் பார்க்கவந்தவிடத்திலே யாண்டவருடைய துக்கத்துக்குப் பரிதாபப்பட்டவர்கள் மிகுதிகாணவில்லையே.

ஆனுலும் சுவிசேஷக லூக்கேசு எழுதினபிரகாரம் பத்தியுள்ள சில ஸ்திரீக ளாண்டவருடைய துக்கத்தைக்கண்டு வெகு இரக்கத்தோடு பிரலாபித்தழுது ஆண்டவரைப் பின்பற்றிப்போனுர்கள். அப்போ தாண்டவ ரவர்களைத் திரும்பிப் பார்த்து வசனிப்பது :— யெருசலேம் நகரவாச ஸ்திரீகளே! நீங்க ளென்பேரி லழவேண்டியதல்ல ; உங்கள்பேரிலு முங்கள் புத்திரர், சந்தானர்பேரிலேயு மழுவீர்களாக. அதேதெனிற் காலம்வரு மப்போ மலடிகள் பாக்கியவதிகளென்றும் பிள்ளைப்பெருத வுதரமும் பாலுட்டாத பயோதரமு மதிஷ்டமுள்ளதென்று சொல்லவும், பருவதங்கள் தங்கள்மேலே மடிந்துவிழுங்கோவென்று கூப்பிடலாயுமிருக்கும். அதேதெனிற் பச்சைமரத்தி லிவ்வளவு அக்கினிபற்றுமாகில் உலர்ந்தகட்டையி லெவ்வளவு தீப்பற்ருதோவென்றருளிச்செய்தார். அதாவது, குற்றமில்லாத தமக்கு இம்மாத்திர மாக்கினையாலை மகா பாதகராயிருக்கிற வெங்களுக்கெம்மாத்திரங் கஸ்திவாதை யுண்டாயிராதோவென்று விசாரிக்கப் படிப்பித்தார்.

அதின்பின் னந்த வியாகுலப்பட்ட ஸ்திரீகளில் வெரோணிக்கவென்கிற வதிக தாற்பரியமுள்ளவொருத்தி யெங்களாண்டவர் பேரிலே வெகுவா யிரங்கி யந்தச் சேனைகளையூடறுத் தாண்டவரை முடுகித் தன்கையிலிருந்த வொரு சிறிய வஸ்திரத்தைக்கொண் டாண்டவருடைய திருமுக மண்டலத்தி லுதிரமும் வேர்வையுந் துடைத்துத் துய்யதாக்குகிறபோது ஆண்டவ ரந்தவுபகாரத்துக்குப் பிரதியுபகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணுகிறதா யந்தவஸ்திரத்திற் தம்முடைய திருமுகரூபத்தைப் பதித்துக்கொடுத்தார்.

இந்தவேளையி லாண்டவர்பேரிலே யதிகபக்ஷமுள்ள யுவா மென்கிற சீஷன் தூரத்தினின்று ஆண்டவரைக் கொல்லத் தீர்ந்த தீர்வையாய்க் கொண்டுபோகிறதைக்கண்டு இந்தவிஷயத்தை யவருடைய மாதாவுக் கறிவித்தால் நல்லதென் றதி சீக்கிரமா யவரிருந்தவிடத்திற்குப் போனார். அப்போ தவ்விடத்தில் மாதாவைக்கண் டழுது, பிரலாபித்துச் சொன்ன வசனமாவது :—

பாவவிருள் மூடியிருக்கிறவர்களுக்குப் பூரணசந்திர ஒளி போலவும், ஏழைபேதையருக்கு மகா தயிரியவாதாரமுந் துக்கித்திருக்கிற சமஸ்தருக் கேக வடைக்கலமுமாயிருக்கிற வுமக்கு நானிப்போ சொல்லவந்த வசனத்தை வசனிக்க நாவில்லையே! என் கண்ணிற் ததும்பியிருக்கிற கண்ணீர்களா லறிந்துகொள்வீராகவும். அதேதென்று வும்முடைய இருதயத்தில் வா ளூடுருவப்படுமென்று சிமியோனென்கிற தீர்க்கதரிசி செப்பினமொழி யின்று மெய்யாகப்போகுதே. அந்தமொழி யும்முடைய செவிக்கேறினவுடனே யும்முடைய பிராணன் சரீரத்திற் தங்குதலாயிருக்குமோ? ஐயோ! சோகம்நிறைந்த பரிசுத்த தேவமாதாவே! யூதாசென்கிற சீஷன் செய்தசதியா லும்முடைய திருக்குமாரன் சத்துராதிகள்கையி லகப்பட்டுக் கள்ளனைப்போலக்கட்டி நானாவித கஸ்திவாதை பங்கங்கள் படுத்தி யநேக நடுச்சபைகளேறிப் பிலாத்துவென்கிற தலைவனற் கற்றூணிலே கட்டியடிப்பித்து இப்போது சிலுவையிலேயறைந்து வதைக்கத் தீர்ந்த தீர்வையாய்ப் பறையிட் டந்தச்சிலுவையை யவர்தோளிலேற்றி வீதிவழியாய் நிந்தித்து வாதித்துக்கொண்டுபோகிறார்கள். அந்தச் சிலுவையின் பாரத்தா லநேகந்தரந் தரையிலே விழுந்து விழுந் தெழுந்திருக்கவுஞ் சவிகேடா யிந்நேரமட்டாய்ப் பிராணனுண்டோ வில்லையோ, திடன்சொல்லலாகவில்லையே. ஆனதினுற் சீவனோடே காணவேணுமாகில் விரைய விரையப் போகவேணுமென்று சொன்னார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட வசனத்தைப் பரிசுத்த தேவமாதா கேட்டவுடனே சிமியோனென்கிற தீர்க்கதரிசி செப்பின பிரகாரமந்த நெஷ்டூர வாள்முனை யவருடைய விருதயத்தி னூடுருவப்பட் டந்தத் துவாரத்தா லிரத்தத்தாரை புறப்படு கிற மேரையாய்ச் சோகவக்கினி யழலிக்கை யெழும்பிச் சகல அவயவ வுறுப்புக்க ளெரிந் தக்கினிப்பருவதமாய்ப் போச் சுது. அத்தா லுள்ளிந்திரியம் புறவிந்திரியம் உலைச்சமானமா யெரிந்து வாக்குக்கெட்டாத பிரலாபங்களா லாறுக ளோடு கிறதாய்க் கண்ணீர்கள்விட்டுச் சிகழிகைவிரித்து ஐயோ! வென்று பெருமூச்செறிந் தழுதிருந்த வியாகுலஞ் சொல்லக் கூடுமோ? அதினு லுடனேதானே குமாரனைப் பார்க்க வேணுமென்று மரியமதலேனுவோடும், இன்னமுந் தயவுள்ள சில ஸ்திரீகளோடும் புறப்பட்டுப் பதறிப் பதறிப்போகப் பயணமானர்.

அப்போதவர் போகிற தன்மையையுங் கங்கைகள் பெருகிவழிகிற சமான மிருகண்களால் விழுகிறகண்ணீரை யுங் கடலடி தொனியாய்க் கேட்கப்படுகிற பிரலாப சத்தங் களையும் வழிப்போக்கர்கண்டு இரக்கம்பொறுக்கமாட்டாமல் மிகுதி பரதவித்துச் சொல்லுவது :—

ஐயையோ! இந்தப் பெண்பேதையுடைய யாதொரு புத்திர னிறந்தானே? அல்லதின்று பறையிட்டு வதைக்கக் கொண்டுபோகிற யேசுநசரேனு வென்கிறவ னிவளுடைய மகன்தானே? அப்படியாகவேணும். ஐயோ! இப்படிப்பட்ட நெருப்பு எப்படிப் பொறுத்திருப்பாளோ! ஐயையோ! வென்று மிகுதி பரதவித்திருந்தார்கள்.

அந்நேரம் பரிசுத்த தேவமாதா தமது திருக்குமாரன் தேகத்தால் வழிநீளந் துளித்திருந்த விரத்தங்களைக்கண்டு நவமான வியாகுலத்தால் மனமெரிந்து குரவையிட் டழுது சொல்லுவது :—

ஐயோ! இந்த விரத்த மெனது குமாரனுடைய விரத்தமோ? எனது உதரத்திற்கொண்ட வுதிர மிந்த வுதிரந்தானே? என் புத்திர னெழுந்தருளின திந்த வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானோ? சீவனோடே போனுரோ வெப்படியோ.? இவ் விசேஷங் கேட்கத்தக்கதாக யாரொருவரைக் காணமாட் டேனேவென் றந்தநகரியிலுள்ளவர்களிடத்தி லிப்படியே கேட்பது :— யெருசலேம் நகரவாசிகளே! நீங்க ளென் னுடைய பக்ஷபிரமாணமுள்ள குமாரனை யிந்தவழியாய்க் கொண்டுபோனது கண்டீர்களோ? மனுக்குமாரர்களி லதி கப்பட்ட வழகுவடிவுள்ள வெனது குமாரன். அதரம் பவள நிறம்போன்ற எனது சுதன். செம்பரத்தம் பூப்போல முக முடைத்தான வெனது குமாரன். சொர்னவிழை போற் தலைமுடியுள்ள வெனது புத்திரன். ஒப்பிட்ட பொற்றூண் போலச் சோதிமயமான தேகமுள்ள வெனது மகன். சரு வாங்க அவயவலக்ஷண சம்பூரண சவுந்தரிய சுரூபியான வென் மகனைக் கண்டதுண்டானுற் சொல்லுங்கோ. இந்த வென்னுடைய குமாரனைக் காணுதேபோகி லென் கண்களுக் கொளிவில்லையே. என் பிராணனுக்குச் சீவியமில்லையே; என்னெறுத்த வயசுக்கு வேறொரு ஆதாரமுமில்லையே. என் மனதிலொரு வாறுதலுமில்லையே. ஆகையா லிப்படிப்பட்ட வெனது ஏக வாதாரமுஞ் சகல பாக்கியமு மாறுதலுமாயிருக் கிற வென் சீவனுகிய குமாரனைக் கண்டதேயுண்டானுற் சொல்லுங்கோவென் றிப்படியே பரிசுத்த தேவமாதா குரல் விட்டழுது குமாரன் நடந்தவழி பார்த்துப் பார்த்துக் கேட்டுக்கேட்டுப் போகிறபோது தெருவிலுள்ளவர்கள் சொல்லுவது :—

நெருப்புப்போல வியாகுலம்பற்றியிருக்கிற தாயான வளே! நீர் சொல்லுகிற லக்ஷணமேரையான குமாரனை நாங்கள் காணவில்லை. மனுஷலக்ஷணமற்ற வொரு மனுஷனை யிந்த வீதியால் வதைக்கக்கொண்டு போகிறதைக் கண்ட துண்டு. அப்படிப்பட்டவ ருமது சவுந்தரியமுள்ள குமாரனு யிருக்க மாட்டாது. நாங்கள் கண்ட மனுஷனுடைய முகம் வாடி விழுந்த பூச் சுருங்கினசாயலுமாய்ச் சிரசில்ரோம மிரத்தச்சவரி பரப்பினதுமாய்ச் செம்மானம்போ லிரத்தப் படலம் மறைந்த கண்களுமாய்க் கொடிய மிருகங்கள் கீறிக் கிழிவுபடுத்தின வுடலுமாய்க் கை கையான சாயலில்லை. கால் காலான சாயலில்லை. ஒரு அங்கமு மவயவமு மிருந்ததில்லையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கவில்லையே. இரத்தசாகரத்திலே குளித்தமேரையாய்ச் சீவித்திருக்கிறவுடலோ செத்தபிரேதமானவுடலோ தெரிந்து கொள்ள மாட்டாததுமா யிந்தச் சாயலான ஒரு மனுஷனை இன்னமும் வாதைப்படுத்தி யிந்தவழியே கொண்டுபோகிற தைக்கண்டோம். ஆனற் போகிற தொய்வோடு மிளைப்போடு மிந்நேரம் பிராணனுடன் காணலாயிருக்குமோ சொல்லக் கூடாதென்றூர்கள்.

இந்தவிஷயஞ் சொல்லுகிற வேளையில் வெரோணிக்க வென்கிற முன்சொல்லப்பட்ட ஸ்திரீ யாண்டவருடைய முகந் துடைத்துத் திரும்பிவருகையிலே தேவகுமாரனைத் தேடிவரு கிற மாதாவைக்கண்டு உம்முடைய குமாரனிருக்கிற தன்மை யைப் பார்க்கவேணுமாகி லிதோ பாருமென்று ஆண்டவரு டைய முகந்துடைத்து ரூபிக்கப்பட்ட வஸ்திரத்துண்டத்தைக் காண்பித்தாள். அந்த வஸ்திரத்தைத் தேவமாதா கண்ட வுடனே ஏக்கமுந் துயருமாய் விழுந் தபயசத்தமிட் டத்தைத் தம்முடைய முகத்தோ டுறவணைத்து வானமே! பூமியே! என் குமாரனே! என் பொன்னுபரணமே! என் சீவனே! ஐயோ விந்த வென தாபரணத்தை ஆருடைத்தாரோ? என் சீவனை ஆர் பறித்தாரோ? இதுவோ வென் தெய்வீக குமார னுடைய முகம்? இதுவோ மோக்ஷவாசிகள் மோக்ஷானந்தங் கொள்ளுகிற முகம்? இதுவோ நா னனுதினமுங் கண்டு களி கூர்ந்திருந்த முகம்? உம்முடைய திருமுகத்திலிருந்த அழகு வடிவுகள் மறைந்துபோன தெவ்வண்ணமோ? ஐயோ வென் சொர்னமுகமான குமாரனே! உம்மை ஆர் வதைத்தாரோ? ஆரவலக்ஷண கேடுபண்ணினரோ வென்று பொறுக்கமாட் டாத வியாகுலத்தோ டழுது அந்த ரூபத்தைச் சிரசில், முகத்தி லணைத்து முத்தமிட்டுப் பரதவித்திருக்கிறபோது, குமார னுயிர்கவருமுன்னமே போகவேணுமென் றந்த ஸ்திரீ சொன்னதினல் யுவாமுடன்கூடி யதி சீக்கிரமாய்ப் போகச் செய்தே தூரத்தினின்று, கொலைப்பறையிடுகிற சத்தத்தைக் கேட் டதிக வபயசத்தத்தோ டழுது சேனைபடைகளை யூடறுத்து முடுகித்துக் குமாரனைக் கண்டவுடனே, குமாரன் மாதாவைக் கண்டவுடனே, ஐயோ! இருவருடைய கண் பார்வை எதிரிட்டமேரை எப்படியென்று சொல்லுவோமோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரனுஞ் சூரியனு மெதிர்த்துக் கிராணம்பற்றினமேரை யென்போமோ? சந்திர ஒளியையுஞ் சூரிய ஒளியையு மிரு கருமேகங்கள்வந்து மறைத்ததென்போமோ? அல்ல திருவ ருடைய கண்ணீரும் பிரலாபமு மிருசாகரங்க ளெதிர்த்தடி படுகிற விரைச்சலோ? இரு கங்கைகள் கூடிப் பிரளயமான சலமோ? எப்பரிசென்று சொல்லுவோமோ?

ஐயோ! இப்படியே யிருவருடைய விருதயம் வியாகுலம் நிரம்பிக் கண்களிற் கண்ணீர் நிறைந்து வாக்குகள் பிரலாப மிகுந்து குமாரனுடைய துக்கத்தைப்பார்த்து மாதாவழுது, மாதாவின் துக்கத்தைப்பார்த்துக் குமாரனழுது, ஆகாச மிருண்டு மழைபொழிந்து வழிந்தோடினதுபோல் நிலத்திற் கண்ணீர்கள்பெருகி யெம்மாத்திரந் துயரமோ? எவ்வளவு வியாகுலத்தின் தாழ்வோ? ஐயோ! அண்டபிண்டத்திலுள்ள சமஸ்தருங்கூடி யளவிட்டாலு மிவ்வளவென்று நிச்சயிக்கலா யிருக்கமாட்டாது. அந்நேரம் மாதாவுடைய திருவாத்தும முடலைவிட்டுப் பிரிந்ததோவென்று ஞானபாரகர்கருதுவார் கள். இப்படிப்பட்ட சோகத்தோடு தேவமாதா குமார னுடைய மேலி னிரத்தங்களைத் துடைத்து, மாதாவின் கண்ணுலோடுகிற கண்ணீர்களை யந்தப் பத்தியுள்ள ஸ்திரீகள் துடைத்திருக்கிறவேளையிலே அந்தத் துஷ்டகொலைகாரர் தாமதிக்கப்போகாதென் றுண்டவரை மாதாவண்டையி னின்று பறித்துச் சீக்கிரமா யிழுபறியா யந்த நகரிவாசலாற் புறப்படுத்திக்கொண்டு போகிறபோது சருவவல்லப தேவ குமாரன் சருவாங்கமுஞ் சவிகெட் டிரண்டாவதுங் கற்தரை யின்மேல் விழுந்து அஷ்டாங்கமும் நிலத்திற் பதிந்தார். அந்தத் துயரத்தைக்கண்டு மாதாவு மேக்கமாய் விழுந்தார்.

ஐயோ! சருவசங்க்ாரகாலத்தி னடையாளங் காணப்பட் டதோ? அன்று சூரியன் கருகுண்டு சந்திரன் செவ்வுண்டு தங்க ளொளிவுகள் மறைத்திருக்குமானு லிப்போ திவ்விய சூரியனுகிய வெங்கள் நாதனும் பூரணசந்திரனுகிய தேவ மாதாவு மிந்த விரண்டு வானமண்டலங்களு மிருளடைந்தது போதாமற் பூமியில் விழுந்ததே. இப்படியே யெங்களாண்ட வர் விழுந்து மூச்சடங்கினதா யிருக்கிறவிடத்திலே கபால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைக்குச் செல்லுமுன்னே யுயிரடங்கினாற் சிலுவையிலறைய வுந் தாங்கள் நினைத்த நிந்தனைகள் நிறைவேற்றவு மிடமில்லா மற்போமென் றந்தத் துஷ்டயூதர் நினைத் தந்தச் சிலுவையை வேறொருவன் கைத்தாபரமாய்க் கொண்டுபோம்படிபண்ணச் சீமோன் சிரனேவு என்கிற வொரு மனுஷனுக்குக் கூலி கொடுத் தழைத்துக்கொண்டார்கள்.

அப்படியே சீமோன் சிரனேவு ஒருபுறமு மெங்களாண்டவ ரொருபுறமுந் தோளிலேவைத்து நிலத்திற் காலூன்ற மாட்டாம லப்பிரமாண சவிகேடா யிருக்கிறபோது போம் போம் விரையநடவுங் கபாலமலை கிட்டினதென்றுஞ் சிலுவையி லறைந்து கொல்லுகிறதல்லாதே யிவ்விடத்திலே யுயிர் பிரிய வொட்டோமென் றீட்டிப்பிடங்குகளாற்தள்ளி யந்த வுன்னதமான மலையின்மீதே வன்போ டிழுப்பாய்க் கொண்டு போகிறபோது அளவில்லாத வல்லமையா லாகாசத்தின் பதி னொரு மண்டலந் தாங்கியிருக்கிற ஆண்டவ ரெங்களுடைய பாவத்தின்பார மதிகத்தா லந்தக் குன்றின்மீதே மூன்றுவதும் விழுந்தார்.

வானங்கள் தாங்கியிருக்கிறவர் விழுந்தபோதே வானங் கள் விழாதிருக்குமோ? ஐயோ! ஈருந்தநாளிலே ஆகாசத் தட்டுக்கள் திரண் டுருளுமென்று சொன்ன வடையாளங்க ளெல்லாங் கண்டுவருகுதே.

ஐயோவென் னிரக்கமுள்ள ஆண்டவரே! இத்தனைநா ளெங்களுக்காகத் தெண்டித்திருந்த சரீர சவுரியமெல்லா மின் றற்றுப்போச்சுதே. எங்க ளாத்துமங்களுக்குத் தேற்றரவு கொடுத்திருந்த சீவ னின்றிந்த மலையின்மீதே யடங்கப்போ குதே! ஐயோ விரக்கமுள்ள மாதாவே! உம்முடைய திருக் குமார னுயி ரடங்கப்போகிறதைக் கண் டும்முடைய பிராண னிருக்குமோ? உம்முடைய திருக்குமாரன் விழுந்திருக்கிற துயரத்தைக்கண் டந்தத் துயரத்தின்மீதே நீர் விழாதிருப் பீரோ! தாயும் மகனு மின்றொரு துக்கசமுத்திரத்தி லமிழ்ந்தி யிருக்கிறார்களே!

ஐயோ விரக்கமுள்ள கிறீஸ்தவர்களே! இன்று தேவ குமாரனுடைய துக்கத்தைப்பார்த் தழுவோமோ? அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாவின் துக்கத்தைப்பார்த் தழுவோமோ? குமாரனுடைய துக்கம் மிகுதியென்போமோ? மாதாவினுடைய வியாகுலமதிகமென்போமோ? எவர் வியாகுலத்துக் காறுதல் சொல்லுவோமோ? குமாரன் பாரதூரச்சிலுவை தோளிற் சுமக்கிறதென்ற லதிலுங் கனமான வியாகுலத்தின் சிலுவை மாதா தமது மனதிற் சுமக்கிறதே. குமாரன் சிரசிற் கடூரமான முள்முடி யழுத்தியிருக்கிறதென்ற லந்தமுள்ளுகளிலு மதிக கூர்மையுள்ள வேதனை விதனங்கள் மாதாவின் இருதயத்திலு மூடுருவப்படுகுதே. குமாரன் கட்டுப்பட்டிருக்கிறதென்றால் மாதாவின் மனதிலுள்ள தயவின் பந்தனங்களதிகமா யழற்றுகுதே. குமாரனுடைய விடாயிளைப்புகள் கடினமானால் மாதாவின் சோபசந்தாபங்களு மழுகைப்பிரலாபங்களும் மட்டில்லையே. குமாரன் மிகுந்த சவிப்பிழையாயிருக்கிறதானு லதிலும் மிகுதி துயரோடு மாதா நிலத்திற் பதிந்திருக்கிறதே. குமாரன் பொறுக்கிற சகல நிந்தை யவமானங்கள் மாதா முன்னேற்கவே யனுபவித்துக் குமாரனையடிக்கிற வடிகளெல்லாம் மாதாவின் மனதிலே படுகுதே.

ஐயோ கிறீஸ்தவர்களே! இந்தப்பிரகாரமாய்க் குமாரனுடைய துக்கத்துக்கு மாதாவினுடைய வியாகுலஞ் சிற்பமல்ல. ஆனதினு லின் றிருவருக்கு மாறுதல்பண்ணவேண்டியிருக்குது. குமாரனுடைய துக்க மருகினுல் மாதாவினுடைய துயரமுமருகும். குமாரனுடைய துக்கம் பெருகினுல் மாதாவினுடைய விதனமும் பெருகும். ஆனதினுற் கிறீஸ்தவர்களே! இன்று நாங்கள் சகலமானபேர்களு மாண்டவருடைய துக்கத்தை யாறுதல்பண்ணப் பிரயாசிப்போம்.

அதெப்படியென்றல், அவருண்டைய திருத்தோளிலிருக்கிற சிலுவை யெங்கள் பாவத்தினுடைய கனமென்றதினுலெங்கள் பாவத்தின் கனத்தை நாங்கள் குறைத்தா லவருடைய தோளின்சிலுவை யிறக்கினதாயிருக்கும். அதினுலெங்களாண்டவருக்கிந்த வாறுதல்பண்ணத் தாற்பரியமுள்ள நாங்க ளின்றெங்கள் பாவங்களை மனஸ்தாபத்தினு லெரித்துப் பரிசுத்த தேவமாதாவுடனேயும் மரியமதலேனவுடனேயு மழுது பின்தொடர்ந்து சீமோன் சிரனேவு என்கிறவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிக்குத் தன் தோளிற் சுமந்த சிலுவையின் தொங்கலை நாங்களெங்கள் தயவினா லெங்கள் தோளிலே சுமந்து எங்களாண்டவருக்குத் துணைச்செய்வோம்.

ஐயோ! அளவற்ற விரக்கமுள்ள வென்னாண்டவரே! சகல லோகத்தின் பாரங்கள் தாங்கியிருக்கிற வுமக் கின்றெங்கள் பாவத்தினுடைய பார மதிகமாய்க் கனக்க விப்படிப்பட்ட பாரமுள்ள சிலுவையை நாங்க ளும்முடைய தோளிற் சுமத்தினோமே! எங்களுடைய வக்கிருத்தியமான ஆசைகளுடைய விழுப்பா லும்மை யிழுபறியாய்நடத்தி யெங்கள் துஷ்டாட்டத்தி னதிகத்தா லும்மை யிந்தக்குன்றின்மீதே விழுத்தாட்டினோமே! ஐயோ! உமக்கு மும்முடைய மாதாவுக்கும்வந்த இந்தத் துக்கதுயரங்களெல்லாம் வருவித்தது நாங்களே. ஆனாற் பாவிகளாயிருக்கிற நாங்க ளெங்கள் பாவங்களுடைய பொறுதியைக் கேட்கவு மும்முடைய திருமுகத்தி னிரத்தத்தை யெங்கள் தயவின் துகிலாற் துய்யதாக்கவும் உம்முடைய சிலுவையின் கனத்தை நாங்கள் தாங்கிச் சுமக்கவும் உம்முடைய திருமுகத்தை எங்களுக்குக் காண்பியுஞ் சுவாமீ!



## உத்தம மனஸ்தாப மந்திரம்

என்னமிர்தமான யேசுவே! தேவரீ ரின்று சுமந்திருக்கிற இந்தப் பாரமான சிலுவையைப்பார்த்து நாங்கள் உம்முடைய கற்பனைகளின் பாரத்தைச் சுமக்கத்தக்கதாக வெங்களுக்குப் பிரசாதத்தைத் தந்தருளும். தேவரீர் கபாலமலையின்மீதே விழுந்ததைப்பார்த்து நாங்களெங்கள் பாவத்தைவிட்டெழுந்திருக்கப்பண்ணியருளும். உம்முடைய வாதைப்பட்ட திருமுகத்தின் ரூப மெங்கள் மனதுகளிலே பதித்து உம்முடைய கிருபையா லெங்கள் சகலமான பாவங்களையும் பொறுத்து இரட்சியுஞ் சுவாமீ! ஆமென்யேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏழாம் பிரசங்கம்

## யேசுநாதர் சிலுவையிலே அறையுண்ட குறிப்பிடங் காண்பிக்கப்படுவது

அண்டபிண்டம் படைப்புண்ட சகலத்துக்கு மாதி கர்த்தனாகிய எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து பாவிகளான மனுஷருக்காகத் தாம் மரணிக்கவேணுமென்று யூதர்கையி லகப்பட்டவேளை துவக்கிப் பாடுபட்ட சகல கஸ்திவாதைகளையும் நிந்தை நிர்ப்பந்தங்களையும்பற்றி முன் பிரசங்கங்களிலே சொல்லப்பட்டதே. இப்போது மீற்றிலே யவரைச் சிலுவையிலே அறைந்து வாதித்த காரணிக்கத்தைச் சொல்லிக் காட்டக்கடவோம்.

அதெப்பரிசோவென்றாற் கபாலமலையென்கிற சவங்களழிந்த நீசஸ்தல மெங்க ளீடேற்றம் நிறைவேற நியமித்திருந்தது. இந்த மலையி னுச்சியிலே லோகமீடேற்றுகிறவரான வெங்களாண்டவர் சிலுவைசுமந்துகொண்டு சென்றவுடனே அவருடலி லிருந்த தொய்வு மிளைப்பும் வேதனை விதனமு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேக்கமுந் துயரமு மதிகரித்துப் பிராணன் நீளிக்கிறதா யிருக்கவில்லையென் றந்தத் துஷ்ட யூதர் கண்டு உயிரடங்கு முன்னே தீவிரமாய்ச் சிலுவையி லறையவேணுமென் ருயத் தப்பட்டார்கள்.

அப்போதவரை யதிக அவமானத்தோடு சிலுவையில் வதைக்கத்தக்கதாக அவருடைய மானிபமான சரீரத்தை மூடியிருந்த தானிக்கையென்கிற தையலில்லாத துகிலைக் கழற்ற வொருமித்தார்கள். அதினுல் முதற் சிரசில் முள்முடியைக் கழற்றவேண்டியிருந்ததினுல் வெகு தாழ்வி லூன்றப் பட்டிருந்த வந்த முடியை யலைத்தலைத்துக் குறடுகளா லிடுக்கிக் கிளப்புகிறபோ தத்தா லெங்க ளாண்டவருக் குண்டான வேதனைவிதனங்களு மந்தத் துவாரங்களால் நவமாய்ப் புறப் பட்ட விரத்தத்தாரைகளு மிவ்வளவென் றெப்பரிசாய்ச் சொல்லுவோமோ! இதல்லாமலந்த விரத்தத்தாரைகளாற் துகிலெல்லாந் துவைந்து முன்பட்ட காயங்களாலு மந்தத் துகில் சரீரத்தி லிறுகவொட்டி மாங்கிஷந் தோல்போ லோரேகமாயிருந்ததினு லத்தை யந்த நெஷ்டூரக் கொலைக் கார ரொருபெலனுயிழுத் துரிகிறபோது சட்டையோடே சதையுந் தோலு மிரத்தமு மொன்ருய்க் கழன்று அந்தத் திருமேனி இரத்தக்கட்டியல்லாதே சரீரமேனியாய்க் காண வில்லை.

ஐயோ! என் சீவனுன ஆண்டவருக் கித்தாற் பற்றின வாதையகோரமும் விதனத்தின் கடூரமு மிவ்வளவென் றுரைக்க நாவுண்டோ? அளவறுக்க மதிப்புண்டோ? ஆகிலு மிந்த வேதனையின் கடினம் பெரிதல்ல. சருவலோ கத்தையுண்டாக்கின தேவாதி தேவராயன் வஸ்திராபரண மின்றி இத்தனை சபை முன்பாகவிருக்கிற விந்தத் துக்கமும் நாணிக்கையும் நிந்தனையு மெவ்வளவென்று கருதுவோமோ? ஞானபாரகர் விபரித்துச் சொல்லுவது:—எங்கள் யேசுநாத ரனுபவித்த சகல வாதை நிந்தனை யவமானங்களிலு மிந்த அவமானத்துக்குச் சமான மில்லையென்று சொல்லுகிருர் கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐயோ பாதக யூதர்களே! உங்கள் மனதிற் துஷ்டாட்டந் தீரவேணுமாகி லிற்றைவரையுஞ் செய்தவாதைகள் போதாதோ? அல்லது வேறுவித வாதைகளில்லையோ? உங்கள் தேவனு மிராசாவும் வஸ்திரமின்றி யிருக்கிறதையும் பிதாவுங் குருவும் நாணித்திருக்கிறதையுங் காண வுங்கள் மனதுகள் பொறுத்துதோ?

ஐயோ! மட்டில்லாத வியாகுலநாணிப்போ டிருக்கிற வென்னுண்டவரே! என் னுத்துமத்தின் பக்ஷபிரமாணமே! இத்தனை லோக சனசமூக சபையிலே யுமது சத்துராதிகளுடைய கண்முன்னே வெகுமான வஸ்திரங்களின்றியே நாணித்திருக்கப் பொருத்தமானீரோ? சருவலோகத்துக் கலங்காரங்கொடுத்துச் சகல மனுஷருக்கும் வெவ்வேறுவித வாயத்தங்கொடுத்த நீ ரிப்போ தொரு ஆயத்தமு மில்லாம லிருக்கிறீரோ? ஆதாமென்கிற வெங்கள் ளாதித் தகப்பனுருக்குத்தன் மானிபவீனம் மறைக்கத் தோல் வஸ்திரங்களுண்டுபண்ணிக் கொடுத்தீரானு லுமக்கிப்போதந்த வஸ்திரமு மில்லையே. தேவாலயத்திற் தெய்வீக மகிமையடையாளங்கள் மறைக்கத் திரைகளுண்டாக்கக் கற்பித்தீரானு லிப்போதும்முடைய அவமான மொழிபடவந்தத் திரைகளுமில்லையே. ஆகாசத்திலிருக்கிற மேகங்களி லொருமேகமும் மறை திரையா யிறங்கவில்லையே. தபோரென்கிற மலையின்மீதேயும்முடைய தெய்வீக வேஷம் மறைத்த கருமேகமாகிலுந் தயிலத்தோப்புக் குன்றி லும்முடைய வெழுந்தேற்றம் மறைத்த சோதிமய மேகமாகிலு மிப்போ தும்முடைய சரீரத்தை மறைக்கக் காணவில்லையே.

தயாபர கருணைநிறைந்த மாதாவே! நீர் பக்ஷத்தோடு செய்து போர்த்தின தையலில்லாத தானிக்கை யென்கிற சட்டையை யூதர் கழற்றிக்கொண்டபோதே நீர் போர்த்தியிருக்கிற துகிலாலாகிலு மும்முடைய குமாரனை மறைக்க மாட்டீரோ?

பத்தியுள்ள கிறீஸ்தவர்களே! எங்கள் தயவுள்ள மனதுகளா லெங்க ளாண்டவருடைய நாணித்த சரீரத்தை மறைப்போம். இப்படியே எங்களாண்டவரை மானிபவீனமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணுவித்துத் தானிக்கையென்கிற சட்டையை யெடுத்த பின்பு அதின்மேலே கரைபோட்டுப் பகிர்ந்தெடுத்துக் கொண்டார்கள். இதன்பின் இன்னமுஞ் சிலுவையி லறையமுன்னே யொரு கொடுமையைச் செய்தார்கள். அதேதென்றால் கொலைக்களத்தில் வதைக்கப்படுகிறவர் களுக்குக் கொலைவாதை தோற்றாதபடிக்கு முந்திரிகைப் பானங் கொடுப்பார்கள். அதினிமித்தமா யெங்க ளாண்டவ ருடைய வாதை யதிகப்படத் தக்கதாகக் கைப்பும் புளிப் புங்கலந்த கடூரமான பானத்தைப் பருக்கினார்கள். இப் படிப்பட்ட வாதை விதனங்களை முதலாரம்பமாய்ச் செய்த பின்பு சிலுவையிலறையத் துவக்கம்பண்ணத்தக்கதாக வாண்டவர் தோளிலே சுமந்துகொண்டுபோன சிலுவை யைத் தரையிலேவிழுத்தி யதன்மே லாண்டவரைக் கிடத் தினார்கள்.

ஐயோ வென்னாண்டவரே! என்னிராயனே! எனது பக்ஷிவனே! எங்களாத்துமங்களுக்காக வேண்டிப் பண் ணின வித்தனை பிரயாசங்களுக் கிளைப்பாறத்தக்கதாக விப்போ வுமக்குக் கிடைத்த வாசன மிதுதானோ? ஆனு லிந்தப் பாவிகளைத் தேடி நடந்த திருப்பாத மிரண்டையு மிந்த ஆசனத்தில் நீட்ட வேண்டியதே. மனுஷருக்கு நன் மைக்கொடைகளை வாரிக்கொடுத் திளைத்துப்போன திருக் கர மிரண்டையும் நீட்டக் கடவீராக. இத்தனை பிரயாச விடாய்களாற் பீடித்திருந்த சரீரத்தை யிந்த மரத்தின் மீதே சயனமாக்குஞ் சுவாமீ! பாவிகளுமக்கிந்தக் கஸ்தி யான விருப்பிடமல்லாதே ஆறுதலான விருப்பிடங் கொடுக்கமாட்டார்கள்.

இப்படியே யெங்க ளாண்டவரைச் சிலுவைமரத்திலே கிடத்தினதின்பின் னந்தத் துஷ்ட கொலைக்கார ராண்டவ ருடைய வொருகையைப் பிடித் தந்த மரத்தின் குறுக்காலிற் தமரிட்டிருந்த தவ்வுக்குநேராக்கிச் சாண்ணீளமும் அங்கு லப் பருமையுமான வோராணியை யெடுத் தந்தத் திருக்கரத் தின் மீதேவைத் திறங்கப்பண்ணத்தக்கதாகச் சுத்தியலா லடிக்கத் தொடங்கினார்கள். ஐயோ! அப்போ தவர்களுடைய

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

துஷ்டாட்டத்தா லோரடி ஆணியிலு மோரடி கையிலு மோரடி விரலிலுமடித்து அங்குலிகள் நசுங்கவும் நக்கண் களா லுதிரஞ் சிலீரிடவு மிப்படியே பட்டவடிகளாற் திருக் கரம் நொருங்கப்பட் டந்தக் கனமான வாணி யிறங்குகிற போது சதைக்குள்ளே யூடுருவி நரம்புகளும் விரற் பொருத்து களும் பிசகினதும்மாய்ப் போச்சுது.

ஐயோ! இப்படிப்பட்ட நெஷ்டுரங்களைப் பார்த்திருந்த மாதாவி னிருதயத்திலே யந்த வடிகளெல்லாம் பட்டதா யந்த விதனத்தா லவளிருதயமுங்கூட வறையப்பட்டதா யதிர்ந்து போச்சுது.

இந்தப்படியே ஆண்டவருடைய விடதுகர மறைந்ததின் பின் வலதுகையையும் பர்தங்களையு மறையத்தக்கதாகத் துவக்குகிறவிடத்திலே ஆண்டவருடைய சரீரம்பட்ட வாதை களால் நரம்புகள் சுருங்கிப்போய் மரத்திற் தமரிட்டிருந்த தவ்வுகளுக்குக் கிட்டமாட்டாதபடியாற் திருக்கரத்திற் கயி றிட் டநேகம்பேர்கள்கூடி யிழுக்கிறபோது, ஐயோ! அந் நேரமுண்டாயிருந்த விதனங்களுடைய கடினமு முளைவுக ளுடைய வதிகமுஞ் சகல சரீரத்திற் கடுப்புவேதனைகளு மெவ்வளவோ?

ஐயோ! கன்னியாஸ்திரிவயிற்றி லெடுத்த விந்தச் சரீர மெங்கள் பாவத்தினுடைய வதிக முத்தரிக்கப் போதாததினு லிப்போ கயிறுகளினு லிழுத்துப் பெரிதாக்குகிறார்களோ! ஐயோ! இத்தனை வாதை யடிகளால் நீடித்த விந்தச் சரீர மென்கிற தெய்வீக பொன்னுபரணமு மித்தனை பெறுபேறு களினுற் கோர்த்தவிந்த மகிமையுடைத்தான விரத்தின மாலையு மெங்கள் பாவச்சரீரத்தினுடைய பெருமைக்குங் கைகளுடைய துஷ்டாட்டத்தின் நீளத்துக்குஞ் சரியாய் நீட்டுகிறார்களோ?

ஐயோ கிறீஸ்தவர்களே! இப்படிப்பட்ட நெஷ்டுரத் தால் வலதுகையும் பொத்த தவ்வுக்குச் சரியொப்பாக்கி யாணியடித்ததின்பின் னிருகாலையு மந்த நெஷ்டுரத்தா லிழுத் தொன்றின்மே லொன்றிணக்கித் தவ்வுக்குச் சரியாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருசாண் ணீளமான ஆணியைவைத்துச் சுத்தியலாலடிக்கத் தொடக்கினுர்கள்.

ஐயோ மாங்கிஷங்களுண்டோ! நரம்புகளுண்டோ! எலும்புகளுண்டோ! எல்லாந் தெறிபட்டுச் சருவாங்க சரீர அவயவங்கள் பிசகியகலித் தொவ்வொன்று யெண்ணிக் கொள்ளலாச்சுதே. ஐயோ! எங்கள் பாவத்தினுடைய கொடுமை யித்தால் முடியாம லின்னமுஞ்செய்த நெஷ்டூரத்தைக் கேளுங்கோ:—

ஆணிகளறைந்தது போதாதென் றவைகள் மரத்தாற் கழன்றுபோகாதபடிக் காணிமுனைகளை மடக்கவேணுமென்று மரத்தோ டாண்டவரை மறுபுறமாய்ப் புரட்டி முனைகளை மடக்கும்படியாகத் துவக்கினுர்கள்.

அந்தவடிகளால் நிலத்தில் பதிந்த திருமுகமும் நாசியுங் கண்ணு மதரமுங் கன்னமும் நெற்றியுங்கூடத் தரையிலடிபட்டு நொருங்கிப் பொடிப் பொடியாய்ப் போச்சுது.

ஐயோ கிறீஸ்தவர்களே! எங்களாத்துமஞ் சீவிக்கிற கோதும்பை யப்பமுண்டாக்க விந்தத் தெய்வீக சரீரமின்று மாவாக்கப்படுகிறதே.

ஐயோ கிறீஸ்தவர்களே! இந்தவிதமா யெங்களாண்டவருடைய கை கால் நன்ரு யறையப்பட்டதே. இனி அவருடைய தயவி னுணிகளெங்க ளாத்துமத்திலே நின்று கழற்றலாயிருக்கமாட்டாது. இத்தா லெங்க ளாத்துமமு மவருடைய சரீரமு மோரணையா யெங்களுடைய பாவத்துக்கு அவருடைய பெறுபேறுகள் சரிநிறையாச்சுதே. அவருடைய கண்ணீரா லெங்க ளாத்துமங் கழுவுண் டிரத்தத்தாற் செவ்வுண்டு ஒருநிறமாச்சுதே. எங்கள் மனுச்சென்மவீன மவருடைய சரீரத்துக்கேற்ற ஆயத்த வாபரணமாச்சுதே. அதினலவர் போகிற விராச்சியத்துக் கெங்களை விட்டுப்போகமாட்டாததா யவரனுபவிக்கிற மோக்ஷத்துக்கு நாங்களுங்கூடப்போக அவசியமாச்சுதே.

இந்தப்பிரகாரமா யாண்டவரைச் சிலுவையிலே யறைந்ததின்பின் யேசுநசரேனு யூதர்களுடைய இராசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வென்ற பட்டயம் பிலாத்துவின் கட்டளையா யந்தச் சிலு வையி னுச்சியிலே அறையப்பட்டது. இதல்லாம லன்று கொலையுண்ண நியமித்திருந்த எஸ்தசுந் தீமாசுமென்கிற விரண்டு கள்வரை ஆண்டவருடைய நிந்தை அதிகப்படத் தக்கதாக அவருடைய விரண்டு புறத்திலு மிரண்டுமரத்தி லேற்றிக் கட்டிவைத்தார்கள்.

இனி யாண்டவருடைய சிலுவையை நாட்டத்தக்கதாக வாரம்பமா யந்தக் கபாலமலையில் வெகுதாழ்வாகக் கிடங்கு பறித்து அநேக சனக்கூட்டங்கள் குரல்விட்டசத்தமா யெங்க ளாண்டவரை யறைந்திருந்த சிலுவையை யுயர்த்தி யொரு பெலனுக வந்தக்கிடங்கிலே விழுத்தாட்டினுர்கள்.

அத்தா லாண்டவருடைய சகல சரீர மெம்மருவாதி வேதனைப்பட்டதோ! அஸ்தபாதஞ் சந்துப்பொருத்துக்க ளென்பு நரம்பு அவயவமெல்லா மெவ்வண்ணம் நெகிழ்ந்து தொய்ந்துபோனதோ! ஐயோ! முன்பட்ட சகல வாதை கள் நவமாய் விதனமாகிக் காயங்களெல்லாம் விரிந்து அத்தாற் புறப்பட்ட விரத்தத்தாரைக ளிரத்தத்தாரை தானே? அல்லது மேகம்பிரிந் தாகாசம் வருஷிக்கிற வரு ஷிப்போ! ஊற்றுக்கண்கள் திறந்து பருவதங்களா லோடி வருகிற சலங்களென்று சொல்லுவோமோ! அம்மருவாதி யாய்ச் சிலுவையுந் தரையு மிரத்தப்பிரளயமாச்சுது.

ஐயோ மனுஷாத்துமாக்களே! ஆதாமென்கிற வெங்க ளாதித் தகப்பனுருடைய வேஷத்தைக்கொண் டெங்களை யிரக்ஷிக்கிற பிதாவிருக்கிற தனிமையைப் பாருங்கோ! அவன் சாவின் கனியை யனுபவிக்க விலக்கின மரத்தி லேறினதா லெங்களாண்டவர் சீவியத்தின் பழங்கொடுக்க ஆக்கினைமரத்தி லேறியிருக்கிறுரே! அவன் கனிபறிக்கக் கைநீட்டினதினு லெங்க ளாண்டவருடைய விரு கை கால் சிலுவைமரத்திலே யறைபட்டிருக்குதே. ஆதன் தன் பாவத்தால் மனுஷ மானிபவீனங் காண்பித்துக் கொடுத்த தினு லின் றெங்க ளாண்டவ ரித்தனை சனசமுகத்தி லிந்த மானிபவீன மனுபவிக்கிறுரே! ஐயோ! பிதாவோடு மிஸ் பிரீத்துசாந்துவோடு மொரு சிங்காசனத்திலிருக்கிற தேவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார னின் றிரண்டு கள்வர் நடுவே யொருசமானமா யிருக்கிறரே! மூன்றங்குலியா லுலோகத்தைத் தாங்குகிறவ ரிப்போ மூன்ருணிகளிற் றொங்கியிருக்கிறரே! நித்திய மோக்ஷானந்தம் நிறைந்திருக்கிறவ ரிப்போது வியாகுலம் நிறைந் தெங்கள் பாவங்களுக்காக வழவூரச்சுதே.

ஐயோ விரக்கமுள்ள ஆத்துமாக்களே! இன்று நமது ஆண்டவ ரெங்களுக்காகப்படுகிற வித்தனை தாழ்ச்சி, ஈங்கிசை, வாதை, வேதனையி னதிகத்தை நன்ருய் விசாரித்துத் தயவின் கண்களைத் திறந்து பாருங்கோ. ஓரங்கமு மவயவமும் வாதையில்லாம லிருக்குதோ? நன்ருய்ப் பாருங்கோ. பாதங்களிலுள்ள வேதனை கைகளிற் பொறுக்கவேணு மாகிற் கைகளின் காயங்க ளதிகமாய் விரிந்துபோகுதே. கைகளின்வேதனை கால்களிற் பொறுக்கவேணுமானுற் கால்களிலிருக்கிற புண்களதிகப்படுகுதே. திருச்சிரசைச் சாய்க்கவேணுமானுலும் முள்முடியின் முள்ளுக்க ளதிகமா யூடுருவி வாதிக்குதே. திருமுதுகிற்பட்ட கசைகளால் மரத்திற்சாய வதிகமாய் விதனமுண்டாகுதே. ஐயோ! எந்த விதத்திலு மெங்களாண்டவருடைய வேதனையி னதிகந் தணிகிறதற்கோ ரடைமானமுமில்லையே. சருவாங்கமு மொரே யிரத்தசாகரமாயிருக்குதே.

ஐயோ பாவிகளான கிறீஸ்தவர்களே! இந்தத் திவ்விய இரத்தம் பெருகின வாற்றிலே உங்களுடைய பாவஞ் சுத்தி பண்ணுதிருக்கி லெப்போ சுத்தமாக்க விருக்கிறீர்களோ? இந்த மழைபோல் வருஷிக்கிற கண்ணீர்களா லுங்கள் கன்மன திளகாதிருக்கி லெப்போது மெதுவான மனதாயிருப்பீர்களோ?. இன்றெப்படிப்பட்ட பாவவாள னுக்கு மாக்கினை யிடாம லிருகரங்க ளறைபட்டிருக்குதே. யாதொருவன் கேட்ட நன்மைகள் கொடாமற் போகாதபடிக் கிருபாதங்கள் தடைபட்டிருக்குதே. எங்களுக்கு வேண்டிய சம்பத்துப் பெறத்தக்கதாகச் சருவாங்க துவாரங்கள் திறபட்டிருக்குதே.

ஆனதினுற் பாவிகளான பேர்களே! உங்களுக்கு மிடிமை மிகுதியானு லிந்தத் தருமபுதையலிலே திரவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைய வாருங்கோ. கோபவிரதாப வக்கினி காந்தலாயிருக்கிறதனா லிந்தக் கண்ணீ ரூறணிகளிலே குளிர்ச்சியடைய வாருங்கோ. வியாதிக்கார ரிந்தப் புண்களி லவுஷதம்பெற வாருங்கோ. ஞானமற்றிருக்கிறவர்க ளிந்தச் சிலுவையிற் காணப்பட்ட போதகங்களால் தெளிய வாருங்கோ. அப்படிப்பட்ட சிலுவையிலிருக்கிற எங்களாண்டவருடைய தனிமையைப் பார்த்து உலோகவாதார மகிமையைத் தேடக்கடவீர்களல்ல. அவருடைய வெளிமையைப்பார்த்துச் சம்பத்துகள் பாராட்டக் கடவீர்களல்ல. அவருடைய அணிமையீனத்தைப் பார்த்து வஸ்திர வலங்காரத்தைத் தேடுவதல்ல. அவருடைய முள்முடியைப் பார்த்து இரத்தினமுடிக்காசைப்படுவதல்ல. அவருடைய வியாகுலம் நிறைந்த முகத்தைப்பார்த்து வீண் சிரிப்பாய்ச் சந்தோஷிக்கிறதல்ல. அவருடைய சருவாங்கத்தின் வேதனையைப் பார்த்துச் சரீரத்தை விரும்பக்கடவதல்ல.

ஐயோ வென் சற்குருவான யேசுவே! நீரிந்தச் சிலுவையாசனத்தின் மீதிலிருந்து போதிக்கிற வித்தனை போதகங்களை நாங்கள் கேட்கவு மத்தைச்செலுத்த வரப்பிரசாதங்களையடையவு மும்முடைய சிலுவையடியை நமஸ்கரித் தாராதிக்கவு மும்முடைய திருமுகத்தை எங்களுக்குக் காண்பியுஞ் சுவாமீ.



## உத்தம மனஸ்தாப மந்திரம்

அனந்த தயாபரமான யேசுவே! தேவரீருடைய அஸ்தபாதங்கள் சிலுவையிலே யறையுண்டிருக்கிறதைப் பார்த்து எங்கள் கை கால் பாவத்திலே யண்டாதபடிக்கு உம்முடைய தயவி னாணிகளா லறையப் பண்ணும். இந்த மூன்றாணிகளைப்பார்த்து எங்கள் மனதிலே விசுவாசம், நம்பிக்கை, பத்தியென்கிற மூன்று தருமங்களை யுறுதியாகப்பண்ணியருளும். உம்முடைய விரத்தத்தா லெங்க ளாத்துமங்களைக் கழுவிக் கிருபையாற் சகல பாவங்களைப் பொறுத்திரஷியுஞ் சுவாமீ! ஆமென்யேசு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# எட்டாம் பிரசங்கம்

## யேசுநாதர் சிலுவையிலே மாணித்த குறிப்பிடங் காண்பிக்கப்படுவது

எங்கள் தயாவதிக யேசுநாதர் சிலுவையி லறையுண் டவருடைய விருபுறத்திலு மிரண்டு கள்ளரையு மிரண்டு சிலுவையிலேற்றி வைத்ததின்பின் னந்தத் துஷ்ட யூதர் தாங்கள் நினைத்தபடி மனதின்பிரியம் நிறைவேற்றினோமென்று வெகு அகமகிழ்ச்சியாய்க் குதித்து ஆண்டவரைநோக்கி நானாவித நயிராக்கிய விருடக மசங்கதம்பண்ணத் துவக்கினார்கள்.

இவனல்லவோ எங்க ளிராசாவென்றுந் தேவனென்று மிரக்ஷிக்கிறவ னென்றுஞ் சொல்லித் திரிந்தான். இப்போ விரண்டு கள்ளருக்கு நடுவூடே சிலுவையி லறையப்பட்டுக் கள்ளரி லதிக கள்ளனாய்க் காண்குதே. தன் சீவனை யிரட்சிக்க மாட்டாம லிருந்துகொண்டு மற்றவர்களை யிரக்ஷிக்கிற மேரை காண்குதே. இராசாவென்றா லிப்போ பூமியிலிறங்கி யாளுமேன். தேவனென்றா லுமது தேவராச்சியத்துக் கெழுந்தருளுமேன். தேவாலயத்தை யிடித்து மூன்றுநாளையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுயர்த்துவேனென்ற நீரிப்போ திந்த மூன்றாணியைக் கழற்றுமேன். முந்தித் தம்மை யிரக்ஷியும் பின்பு மற்றவர்களை யிரக்ஷிக்கிறதைக் காண்போமென்று இப்படிப்பட்ட கோறணிகொள்ளுகிறபோது ஆண்டவர் பாடுபட்ட வித்தனை வாதைகளும் வாதையாகக் காணுதபடிக் கிந்த நிந்தனையை யதிகவிதனமா யனுபவித்திருந்தார். இப்படியே விருதயத்திலேகொண்ட விந்தத் துக்கமுஞ் சிலுவையிலே படுகிற கஸ்திவாதையு மொன்ருகக்கூடிச் சமுத்திரத்திலே ஆறுகளுடைய தண்ணீர்கள் கூடிப் பெருகினதுபோ லெங்களாண்டவருடைய துக்கசமுத்திரம் மட்டில்லாததாய்ப் போயிற்று.

அப்படியே எங்களாண்டவர் அந்தத் துக்கத்திலமிழ்ந்தியிருக்கையில் தாம் மரணிக்குமுன் மனுஷருக் குபகாரமுள்ள ஏழு தருமவாக்கியங்களைத் திருவுளம்பற்றினுர்.

ஆனதினு லாண்டவர் பூலோகத்திலே போதித்த அத்தனை போதகங்களையுஞ் சீனுவென்கிறமலையி லருளிச்செய்த வுத்தம பிரசங்கத்தையும் கேளாதவர்க ளிப்போ திந்தக் கபாலமலையில் மரண அவஸ்தையிலருளுகிற வசனங்களைக் கேட்கக்கடவது.

அதேதென்ருல் முதல் தம்மை வாதை நிந்தைப்படுத்திக் குருசில் வதைக்கிறவர்களுடைய பாவம் பெரிதென் றறிந்து அத்தால் தமது பாடுகளுடைய பெறுபேறுக ளவர்களடையாமல் நரகத்திலே விழுவார்களென்று வெகுவாய் மனநொந்து அவர்களுக்காகப் பிதாவை மன்ருடிக்கொண்ட முதலாம் வசனமாம் :—அதெப்படியென்ருல், என் பிதாவே ! என்னை வாதிக்கிறவர்கள் செய்கிற பிழையை அறியாமற் செய்கிறதினு லந்தப் பிழையைப் பொறுத்துக்கொள்ளுமென்று மன்ருடினுர்.

ஐயோ கிறீஸ்தவர்களே ! எங்க ளாண்டவருடைய கிருபையையு மெங்களுடைய துஷ்டாட்டத்தி னதிகத்தையும் பாருங்கோ. எங்களுடைய குரோதங்களையு மவருடைய பொறுதியையும் பாருங்கோ. நாங்க ளெங்களை நிந்திக்கிறவர்களை வாதிக்கவும், வாதிக்கிறவர்களை வதைக்கவும் நினைக்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருரே. அவர் தம்மை வாதிக்கிறவர்களுக்கு மோக்ஷங் கொடுக்கவும் சீவ வினையம்பண்ணுகிறவர்களுக்கு நித்திய சீவியங் கொடுக்கவும் மன்ருடுகிருரே. சத்துராதி யூதர்க ளத்தனை துஷ்டமனதோடு பண்ணுகிற வித்தனை வாதைகளு மறியாமற் பண்ணுகிருர்களென்றும் அந்தப் பாவத்துக் கநேக நரகங்களுடைய வாக்கினை போதாமலிருக்க வவர் களுக் கத்தைப் பொறுக்கவேணுமென்றும் மன்ருடுகிருரே. ஐயோ என்னுதனே! தேவ்குருவே! இப்படிப்பட்ட தயா பரமான சித்த மெங்களுக்கு முண்டா யெங்கள் சத்துராதி களுக்கு நாங்களும் நன்மை செய்யத்தக்கதாகக் கிருபை பண்ணியருளும்.

அதின்பின் னெங்களாண்டவருடைய விருபுறத்தி லிருக்கிற கள்வர்களி லிடதுபுறக் கள்ளன் ஆண்டவரை நிந் தித்துச் சொல்லுவது :—நீர் தேவனுனல் தம்மையு மிரக்ஷித் தெங்களையு மிரக்ஷியும். இல்லாதிருக்கில் தம்மைத் தேவ னென்பதேதென்று பரிகாசம் பண்ணுகிறபோது, வலது புறக்கள்வ னவனையதட்டி, நாங்கள் செய்த பாவத்துக் கிந்த வாக்கினை யனுபவிக்கிருேம், இவரொரு தோஷமுமில்லாத சருவேசுரனு மிராசாவுமென்கிறதை யறிவேனென்று ஆண்டவரைப்பார்த்துத் தேவரீ ரும்முடைய விராச்சியத்துக் கெழுந்தருளுகிறபோது அடியேனையும் நினைத்துக்கொள்ளு மென்று மன்ருடினுன். இந்தப் பிரார்த்தனையை ஆண்டவர் கேட் டவன்மேல் மகா கருணையா யவனுடைய சகல பாவங் களைப்பொறுத்து இன்று நீ என்னுடனே மோக்ஷவிராச் சியத்திலிருப்பாயென் றிரண்டாம் வசனம் திருவுளம்பற்றி னுர்.

ஐயோ கிறீஸ்தவர்களே!. இன்றெங்க ளாண்டவ ரிருக் கிற தயாபர சித்தத்தைப் பாருங்கோ! கள்ளனென்றுஞ் சத்துராதியென்றும் பாராம லெப்படிப்பட்ட பாவவாளிக் குஞ் சமஸ்தருக்கும் மோக்ஷகருவூலத்தின் கபாடந்திறந்து பகிர்ந்து கொடுக்க வாயத்தமாயிருக்கிருரே. இன்று தம் முடைய பெறுபேறுகளின் சமுத்திரம் வெகுவாய்ப் பெரு கித் தன்னிலே அடங்காதபடியாற் கற்றரை நற்றரை சகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கிலு மிரக்கத்தினுடைய ஆற்றுக்கண்கள் திறந்து வழிந்து போய் மனுச்சென்ம பூமியெல்லாம் புண்ணியபழங் காய்க்கச் சித்தமாகிருரே. இந்தப்பிரகாரமாக ஆண்டவ ரிரண்டுவசனந் திருவுளம்பற்றினபோதே பரிசுத்த தேவமாதா குமாரனைப் பார்த்து வியாகுலம் பெருகின மனதோடு சொல்லுவது :— என் மகனே! கள்ளனுக்கு நல்லவசனத்தைச் சொன்னீர். உம்மை வதைக்கிற சத்துராதிகளுக் குபகார வார்த்தை திருவுளம்பற்றினீர். ஆனு லும்முடைய தாயாராயிருக்கிற வெனக் கொருவசனமுஞ் சொல்லாதிருப்பதென்ன? இந்த வும்முடைய மரண அவஸ்தையி லென் வயிற்றிற் பற்றுகிற சோகவக்கினி நூரத்தக்கதாக வும்முடைய வாக்கா லென்னையழைத் தொருவசனத்தையுங் கேட்கப் பேறுபெற்றேனில்லையேயென்று மனஸ்தாப சந்தாபத்துடனே யிருக்கிறபோது ஆண்டவர் மாதாவைப் பார்த்து ஸ்திரியேயென்று கூப்பிட்டு யுவானியென்கிற சீஷனைக் காண்பித்து, இதோ! உம்முடைய புத்திரனென்றும், மறுபடி யுவானியைப் பார்த்து மாதாவைக் காண்பித்து, இதோ! உம்முடைய தாயாரென்றும் மூன்ரும்வசனந் திருவுளம்பற்றினர்.

இப்படிப்பட்ட வசனத்தைப் பரிசுத்த தேவமாதா கேட்டவுடனே சுடுசாம்பலில் நுழுந்தியிருந்த வக்கினிப் பொறி யூதியெரிந்ததுபோல வியாகுல மதிகமா யழற்றிச் சொல்லுவது :— என் மகனே! இன்றும்மா லெனக்குக் கிடைத்த வாறுதலிதுதானே? எனது தேவசுதனை வும்மை யிழந்து யுவானியென்கிற சீஷனை மகனுகவடைந்தேனே? இத்தா லெனக்கும்முடைய பேரிலுள்ள சோகவக்கினி நூருமோ? என்னுடைய தேவராசாவுஞ் சீவ ஆனந்தமுமாயிருக்கிற வும்மைப் பார்த் தென் மனதடைகிற சந்தோஷம் யுவானியைப் பார்த்தடையுமோ? உம்முடைய நாமத்தா லென்பேர் புகழப்படுகிறதுபோல யுவானியாற் புகழப்படுமோ? உம்முடைய சொர்னமுகத்தா லென் முகத்துக்குங் கண்களுக்கும் வருகிற ஒளிவு யுவானியைக் கண்டு வருமோ? அதில்லையே. இது தவிர என் மகனே! நீர் மரணிக்கிற விந்தவேளையிலே உம்முடைய வாக்கா லொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயவின் வார்த்தை கேட்பேனென் றிருந்தவிடத்திலே தாயேயென் றொருவசனமாகிலுஞ் சொல்லாமல் ஸ்திரியே யென் றென்னைக் கூப்பிடுகிறீரோ? உம்முடைய தயவின் காந்தலாலெரிந்திருக்கிற தாயார் நானல்லவோ? உம்மைப் பெற்ற வயிறும் பாலூட்டின பயோதரங்களு மிதல்லவோ? உம்மோடே கூடத்திரிந்து கூடப் பாடுபட் டும்முடைய சகல வியாகுலங்களையு மநுபவித் தழுதிருக்கிற தாயல்லவோ? இந்த நேசத்தைக் காண்பித் துமது மரணவேளையி லாகிலு மென்னைத் தாயேயென் றழைக்க மனதானீரில்லையே யென் றிப்படியே பரிசுத்த தேவமாதா வெகு வியாகுலப்பட் டழு திருந்தார்.

ஆனால் கிறீஸ்தவர்களே! எங்களாண்டவ ரந்நேரத் திலே தமது மாதாவைத் தாயேயென் றழையாத காரண மேதென்றால், தம்முடைய மரணவேளையிலே தாயேயென் றழைத்த வசனத்தைக் கேட்டா லந்த நேசத்தி னக்கினி இருதயத்திலே வெகுவாய்ப்பற்றி வியாகுலத்தாற் பிராண னைத் தாங்கிக்கொள்ளமாட்டாமற் கூடச் சாகிறதாய்ச் சோக முண்டாகுமென் றப்படியே யழையாதிருந்தாரென் றறியவும்.

இந்தவசனம் வசனித்ததின்பின் ஞண்டவர் சிலுவை யில் வாதிக்கப்பட்ட வாதைகளா லிளைப்புந் தொய்வும் விடாயு மதிகரித்துச் சரீரமுழுவதுங் காந்தலாய் மிடறும் நாவும் வெகுவாய் வரண்டு தாகமாயிருக்கிறேனென்று நாலாம்வசனமுரைத்தார்.

ஐயோ என்னாண்டவரே! என் சீவனே! இன்றுமக் குத் தவனமாச்சுதோ? சீவியத்தி னூறணி நீரல்லவோ? ஒரு காலமுந் தவியாத தண்ணீ ரென்கையி லுண்டென்று திரு வுளம்பற்றினது நீரல்லவோ? ஆனா லிப்போது தாகமா யிருக்கிறேனென்று கூப்பிடுவதேது? ஐயோ கிறீஸ்தவர் களே! இந்த வசனத்தைப் பரிசுத்த தேவமாதா கேட்ட வுடனே தம்முடைய வியாகுலத்தின் கேணி யூற்றிறைத்தது போலச் சோகம் பெருகி, ஐயோ! என் குமாரனுடைய தாகத்தை எப்படி யாற்றுவேனோ! இந்த மலையில் யாதொரு தண்ணீர்க் கரைக ளுண்டாயிருக்குமோ! யாதொரு மனைக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ளில்லங்கள் முடுகவுண்டோ! எட்டப்போய்த் தண்ணீர் கொண்டுவருமுதலே என் மகனை ஏது வினையஞ் செய்வார்களோ! ஐயோ என் மகனே! நீ ராகாசத்திலேவைத்த தண்ணீர்களிலும், பூமியிலுண்டாக்கின சாகரங்களிலு மோர் துள்ளியாகிலு முமது தாகத்துக் குதவமாட்டாதோ? இந்த வும்முடைய மரண அவஸ்தையி லெழும்பின தாக மாற்றத் தக்கதாக வோரடைமானமு மில்லையேயென் றிப்படியே பரிசுத்த தேவமாதா வழுது பரதவித்திருந்தார்.

ஆனாற் கிறீஸ்தவர்களே! எங்களாண்டவருக் கிந் நேரத்தி லுண்டாயிருந்த தாகந் தண்ணீர்த்தாகமல்லவே. எங்களாத்துமங்களுக்காகப் பாடுபட்டது போதாததா யின்னமும் பாடுபடவேணுமென்கிற தாகமுந் தம்முடைய மரணத்தின் பெறுபேறுக ளநேகம்பேர்க ளடையவேணுமென்கிற வாசையும் நரகத்திலே விழுகிற பிராணன்கள் கரையேற வேணுமென்று தவித்த விந்த ஆசையுமல்லாதே வேறே தாகமல்ல. இப்படியே நாலுவசனம் வசனித்த பின்பு அஞ்சாம் வசனமாவது :— என் தேவனே! என் சருவேசுரனே! என்னைக் கைநெகிழ்ந் திருக்கிற தேதென்று கூப்பிட்டுச் சொன்னார். அதேதெனில் தேவநேசத்துக்காகப் பாடுபடுகிறவர்களுக்குத் தேவ வருட் பிரசாதத்தால் மனதில் வெகு தேற்றரவு கிடைக்கிறவிடத்திலே அந்தத் தேற்றரவு பிதாவால் தமக்குக் கிடையாததினால் தம்முடைய துக்கஞ் சகல மனுஷருடைய துக்கத்துக் கதிகப்பட்டதென்று காண்பிக்கச் செய்தார்.

ஐயோ கிறீஸ்தவர்களே! இன்றெங்க ளாண்டவருக் கொருவராலு மோருதவி யில்லாததுந்தவிரத் தமது அநாதி பிதாவினாலுஞ் சகாயமில்லாதிருக்குதே. எங்களுடைய துக்கம் நீக்குகிறதற்காகக் குமாரனுடைய துக்கம் பார்க்கவில்லையே. எங்களுக் கனுக்கிரக முண்டாயிருக்கிறதற்காகக் குமாரனுக்குத் தேற்றரவனுப்பவில்லையே. இந்த வசனமைந்து முரைத்ததின்பின் முடிந்தது முற்றுமென்று ஆறும் வசனந் திருவுளம்பற்றினார். அதேதென்றா லெங்க ளீடேற்றத்தின் கருமம் முடிந்தது. எங்கள் பாவ உத்தரிப்புக்குச்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செய்யத்தக்க பெறுபேறுகள் முடிந்தது. அநாதிபிதாவால் நிருபித்ததெல்லாம் நிறைவேறிற்று. தீர்க்கதரிசிகளா லெழுதப்பட்ட சருவமுஞ் சம்பன்னமாயிற்று. ஆனதினால் முடிந்தது முற்றுமென்று திருவுளம்பற்றின விபரமாம். அதின்பின் னெங்களுக்காகத் தாம் பூலோகத்திலே யிருக்க வந்த காலம் நிறைந்ததினுல் தம்முடைய வாத்துமத்தைப் பிதாவின் கையி லொப்புக்கொடுக்க வேணுமென்று மகா வபய சத்தத்தோடு கூப்பிட்டு ஈருந்தத்தில் வசனித்த ஏழாம் வசனமாவது :— என் பிதாவே! உம்முடைய கரங்களி லென் னுத்துமத்தைக் கையளிக்கிறே னென்றார். அக்ஷணத்திலே தானே எங்களாண்டவருடைய விரு நேத்திரங்களேறச்சொருகித் திருச் சிரசு கவிழ்தலையாய் விழுந்து சிக்ஷிகை புழுகித்துத் திருமுகமண்டலம் வெளிறப்பட்டுச் சகல சவுந்தரியமுமொழித்துச் சருவாங்கத்தி னுதிரஞ் சுண்டிச் சமஸ்தருக்குஞ் சீவனுகிய வெங்களாண்டவருடைய பிராண னடங்கிச் செத்தவர்களைச் சீவிக்கப்பண்ணுகிற ஆண்டவர் மரித்தார்.

ஐயோ கிறீஸ்தவர்களே! பூலோக பரலோகத்தின் நாயகனுன வெங்களாண்டவர் மரித்தபோதே இன் றிரு லோகத்திலு மெம்மாத்திரந் துக்கமுண்டாயிராதோ? சகல படைப்புக ளின் றழுகிறகண்ணீர்களா லிந்தச் சமுத்திரந் தவிர இன்னமு மம்புராசிக ளுண்டானுலும் பெருகி வழிந்தோடலா யிருக்குமே. பிரகாசமண்டல சூரியனுனது தன்னைப் படைத்த வாண்டவருடைய கண்விழி மறைந்ததைக் கண்டு தான் பிரகாசித்திருப்பேனுவென்றதாய் மத்தியான வேளையில் தனது வெளிச்சத்தை மறைத்து இருளாயிற்று. ஆகாசமண்டலங்கள் கருமேகங்களைப் பரப்பிக் கண்ணீர் நிறைந்தழுகிறமுகமாய்க் காண்பித்தது. பூமியானது தன்னை யுண்டுபண்ணின வாண்டவருடைய பிராணனடங்கினதைக் கண்டு தியங்கினதுமாய்ச் சகலதிக்கிலு மதிர்ந்து நடுநடுங்கப் பட்டது. கற்பருவதங்கள் ஒன்றோடொன்று மோதிவெடித்துப் பிணக்கிடங்குகள் திறபட்டுச் சவங்க ளுயி ரடைந்து கரையேறப்பட்டது. தேவாலயத்தின்திரை யிரண்டாய்க் கிழிபட்டது. இப்படியே சகல படைப்புகளு மாண்டவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருடைய துக்கத்தினு லதிர்ந்து சகல லோகமுங் 'கறுப்பணிந் ததுபோ லந்தகாரம் வியாபித்திருக்கப்பட்டது. அந்நேரமே பரலோகத்தில் தேவதூத ·ராண்டவர் பிறந்தநாளிலே சுப மங்களங்கொண்டாட வந்தவர்கள் அவ ரிறந்தநாளிலே யின் றவமங்களங் கொண்டாடினுர்கள்.

இந்தப் பிரகாரமாக ஆண்டவர் படைத்த பொருட்க ளவர்பேரி லிம்மாத்திரந் துக்கங்காண்பித்தபோதே அவ ரைப் பெற்ற மாதாவினுடைய வியாகுல மெவ்வளவென்று சொல்லலாமோ? மகா சமுத்திரத்தில் விழுதுவிட் டளவுகாண் கிலு மின்று பரிசுத்த தேவமாதாவினுடைய வியாகுலத்தின் தீழ்வு கரைகாணலா யிருக்கமாட்டாது. அதேதெனில் நாற்றிசையிற் பார்க்கிலும் வியாகுல மதிகரிக்கிறதல்லாதே முசிப்பா றுகிற வொருகாரணமுமில்லையே. ஆகாசத்தை நோக்கினு லந்தகாரம் வியாபித்த வேஷத்தைக்கண்டு கரு மேகத்தால் மனதை மறைத்ததுபோல வியாகுலமுண்டா குதே. பூமியைப் பார்த்தாற் குமாரனுடைய விரத்தத்தாற் துவைந்திருக்கிறதைக் கண்டு சருவாங்கரோமம் புளகமெய்தி இரத்தவேர்வை' வேர்க்கிறதாய் வியாகுலப்படுகிறதே. சூழ வரப்பார்த்தாலும் வளைந்திருக்கிற சத்துராதிகள் தூஷ ணித்துச் சொல்லுகிற வசவு நிந்தை பரிகாசங்க ளெய்கிற வம்புபோ லிருதயத்தில் தைக்கிறதே. குமாரனை நோக்கித் தேகத்தைப் பார்த்தாலுஞ் சருவாங்கத்தில் திறந்திருக்கிற காயங்களைக்கண்டு மனதொரு புண்ணுய் விதனிக்கிறதே. திருமுகத்தைப் பார்த்தால் கண் மறைந்து தலைகுனிந்திருக் கிறதைக்கண் டந்த வுயிரோடு தம்முடையவுயிரு மடங்க வேணுமென்ற வியாகுலமுண்டாகிறதே. அதினுற் பரிசுத்த மாதாவினுடைய துக்கமானது பெருகின சமுத்திரத்தின் தண்ணீ ரந்தச் சமுத்திரத்திற் கொள்ளுகிலும் மா தா வி னுடைய வியாகுலத்தின் சாகர மவளிருதயத்திலே கொள்ள லாயிருக்கவில்லை. அத்தோடே கண்களாலோடுகிற கண்ணீர் களும் பெருகி இந்தப் பெருகின வியாகுலசாகரத்தில் மாதா வமிழ்ந்தியிருந்தார்.

ஆனுற் கிறீஸ்தவர்களே! இருலோகத்திற் சகல வுயி ருள்ள படைப்புகளு முயிரில்லாத பொருட்களுந் தங்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


படைத்த வாண்டவருக்காக வின் றழுகையாயிருக்கிறபோதே எங்களுக்காகப் பாடுபட்டு மரணித்தவர்பேரிலே நாங்க ளழ வேண்டாமோ? செய்த பாவங்களுடைய மனஸ்தாபத்தினு லாத்தும சரீரத்தி னுள்ளிந்திரியம் புறவிந்திரியஞ் சகலமு மதிர்ந்து ஊற்றுக்கண்களாய்த் திறபட்டு எங்கள் கண்ணீர் களால் நமது ஆத்துமங்களைக் கழுவவேண்டாமோ? ஐயோ என் யேசுவே! உம்முடைய மரணத்தைக்கண் டெங்களாத்து மத்தின் பாவ மரணத்துக்காக நாங்க ளழவு மும்முடைய வுயி ரடங்கினதைக்கண் டெங்க ளாத்துமத்துக்குப் பிரசாத வுயி ரடையக் கேட்கவு மும்முடைய திருமுகத்தைக் எங்களுக்குக் காண்பியுஞ் சுவாமீ.



## உத்தம மனஸ்தாப. மந்திரம்

*அளவில்லாத தயாபரமுள்ள என்னுண்டவரே! உம்முடைய பிராணனைப் பிதாவின்கையிலே ஒப்புக்கொடுத்ததைப்பார்த்து எங்களுடைய ஆத்துமத்தை உமது கைவசமாக்கிக்கொள்ளும். உம்முடைய பீடைமரணத்தின் பெறு பேறுகளை எங்கள் ஆத்துமத்துக் காடையாபரணமாக அணிவித்து, உம் முடைய விரத்தத்தா லெங்களை வர்ணித்து உம்மோடே மோக்ஷதரிசனத்துக் குப் பாத்திரமாக்கிக்கொள்ளுஞ் சுவாமீ! உம்முடைய கிருபையால் எங்கள் பாவத்தைப்பொறுத்து இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமீ! ஆமென் யேசு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒன்பதாம் பிரசங்கம்

## யேசுநாதருடைய திருச்சரீரத்தைச் சிலுவையிலேநின் றிறக்கின குறிப்பிடங் காண்பிக்கப்படுவது

எங்கள் சீவனுகிய யேசுநாதர் மரித்தவேளை மத்தியானந்திரும்பி அபராணகாலமாச்சுது. அப்போது யூதர் தங்கள் வேதமுறைமையின்படியே வாதிக்கப்பட்ட குற்றவாளரைச் சனிவாரஞ் சிலுவையிலே வைக்கப்போகாததினு லவர்களுடைய கெண்டைக்கால்களை முரித்து வதைக்கத்தக்கதாகப் பிலாத்துவினண்டையே உத்தாரங்கேட்கப் போனுர்கள். அதற்கவனொரு சேர்வைக்காரனையுஞ் சேவகர்களையும் போகவுத்தாரங்கொடுத்தவுடனே அவர்கள் கபாலமலையிலேவந் திருகள்வருடைய கெண்டைக்கால்களை முரித்து வதைக்கிறபோது பரிசுத்த தேவமாதா வத்தைக்கண்டு தமது குமாரனுடைய சரீரத்திலு மந்தவாதை செய்வார்களோவென்று நினைத்து வியாகுலசமுத்திரத்தில் துயரமாய் விழுந்திருந்தவளெழுந்திருந்து கொலைக்காரரைப் பஞ்சரித்து மன்ருடிச் சொல்லுவது :—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பிறப்பானவர்களே! என்மகனுடைய வுயிரடங்கிப் போனதே! இனி வாதிக்கக் காரியமில்லையே! நீங்க ளடிக் கிறவடிக ளவருடைய மரித்த சரீரத்தில் நோவுகாணுததினு லென்னுடைய விருதயத்திலே யந்தவடிகளெல்லாம் படுகிற தாயிருக்கும். ஆனதினு லுங்கள்மனதி லியாதொரு வாதை பண்ணக் கருத்துண்டாயிருப்பீர்களானு லந்தவாதைக ளெல்லா மென்னைப்படுத்துங்கோ. அந்த அடிகளெல்லா மென்மே லடியுங்கோ வென் றிப்படியே பரிசுத்த தேவமாதா வவர்களை மன்ருடி நிற்கிறபோது அந்தத் துஷ்டசேவக ரெங்க ளாண்டவர் மெய்யாகவே மரித்தாரோ இல்லையோ சோதித்துப்பார்க்க வேணுமென் றவர்களி லொருகண் ணுானனுயிருந்த வொருசேவகன் தன்கையிலிருந்த வீட்டியா லாண்டவருடைய திருவிலாவிற் குத்தத்தக்கதாகக் கை யோங்குகிறபோது வியாகுலம்நிறைந்தமாதா வத்தைக்கண் டது குமாரன்மேலிற் படாதபடிக் கிதோ வென்விலா, இதோ வென்னிருதய மூடுருவப் பாயவேணுமென்று பரதவித் திருக்கையிலே அந்தத் துஷ்ட சேவக னேங்கினகையைத் தாழ்த்தாமல் மகா கொடுமையோ டாண்டவருடைய திரு விலாவிற் குத்தினுன். அந்த நெஷ்டூரக் குத்துத் திருவிலா வைத்திறந் திருதயத்தை யூடுருவி அத்தோடே மாதாவுடைய விருதயமுங்கூட வூடுருவப்பட்டதாய்ப் போனது. அந்நேரத்தி லந்தத் துவாரவழியா லுதிரமுந் தண்ணீருமாகப் பீரிட் டதிலொரு துள்ளி குத்தினவனுடைய குருட்டுக்கண்ணில் தெறித்துக் கண் வெளிச்சமாயிற்று. அத்தைக்கண் டவன் மனது ஆண்டவர்பேரிலே தெளிந்து மெய்யானதேவனும் மனுஷனு மிவர்தாமேயென்று விசுவசித் தடி வணங்கினுன்.

ஐயோ கிறீஸ்தவர்களே! இன்றெங்க ளாண்டவருடைய கிருபையின் சமுத்திர மெம்மாத்திரம் விஸ்தாரமென்று பாருங்கோ. தம்முடைய பிராணனை வதைத்தது போதா மல் செத்த சரீரத்தையும் வாதிக்கிற கொடிய மனதுள்ள வர்கள் பேரிலேயுந் தம்முடைய கிருபைச்சாகரத்தின் தண் ணீர் பாய்ச்சச் சித்தமாகிருரே. தாம் பிராணனேடிருக்கும் போதே லோகவாசிகளுக்குச்செய்த அளவற்ற நன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் போதாமல் மரித்ததின்பின்பு மூபகாரங்களுடைய வூற்றுக்கண்கள் திறந்து சரீரங்களையு மாத்துமங்களையுங் கூட விரக்ஷிக்கிறூரே.

இப்படியே கிறீஸ்தவர்களே! அந்தக் கொலைக்காரச் சேவக ரவர்களுடைய கெண்டைக்கால்களை முரித்துச் சகலமான கொடுமைகள் செய்துபோனதின்பின் பரிசுத்த தேவ மாதாவும் யுவானியென்கிற சீஷனும் மரியமதலேன முதலான சிலபத்தியுள்ள ஸ்திரீகளுஞ் சிலுவையடியிலே பரதவித்திருந்தார்கள். அப்போது அஸ்தமிக்கிறவேளை முடுகித்து வருகிறதைக்கண்டு தேவமாதா தமது குமாரனுடைய தேகத்தைச் சிலுவையாலிறக்கி அடக்கம்பண்ணத்தக்கதாக வோரடைமானமு மில்லையென் றடிக்கடி யேக்கமுஞ் சோபசந்தாபமு மதிகரித்துத் தமது தனிமைக் குதவ வொருவரு மில்லாததினல் வானத்தைநோக்கிச் சொல்லுவது :—

ஐயோ வென் னனந்த கிருபையுள்ள பிதாவாகிய சருவேசுரனே! உம்முடைய கிருபைக்கண்களைத் திருப்பிக் குமாரனைப்பாரும். அவர் தாயாராயிருக்கிற வென்னுடைய தனிமையையுஞ் சோகத்தையும் பாரும். இந்தத் திவ்விய சரீரத்தை யடக்கம்பண்ண ஓராதாரமுமற்றிருக்கிற விந்த வத்துவானத்தி லிவ்வேளைக்கிரங்கி அனுக்கிரகம்பண்ண வேணுமென்று பிரார்த்தித்ததின்பின்பு சிலுவையை நோக்கிச் சொல்லுவது :—

சுத்தமான சிலுவையே! எனது திவ்வியசம்பத்துப் புதையலு மாத்துமத்தி னொளிவு மெனது சகல சவுரியமுமுமது வசமானதே. ஆசீர்வதிக்கப்பட்ட விருட்சமே! உமது கொப்புக்களில் தொங்கியிருக்கிற சுகிர்த பலன்களின் குலையையுஞ் சீவியத்தின் பழத்தையு மென்னை ஆயவிடும். எனதுதரத்திற்கொண்ட வமிர்த தேன்வதையாகிய வென் மகனை யென்கையில் வரப்பண்ணும். மோக்ஷதிரவியம் நிறைந்த பேழையின்பூட்டுக்களை நான் திறக்க வென்சார்பாய்ப். பணிந்தென் சீவனுன குமாரனை நானிறக்கி யெடுத்துக்கொள்ளத் தாருமென் றிந்த வியாகுலஞ்சொல்லி மறுபடியுங் குமாரனைநோக்கிச் சொல்லுவது :—

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐயோ வென்னது குமாரனே! என் தேவாதி தேவனே! என்னிராயனே! இந்த வெகுமான சிங்காசனத்தினின்று நீர் பூமியிலிறங்கவு மும்மை யறைந்திருக்கிற விந்த வாணிகளைக் கழற்றவு மொருவருமில்லையே. ஐயோ வென் தேவசுதனே! நீர் பிறந்தவேளையி லுண்டாயிருந்த தனிமை பெரிதென்று நினைத்திருந்தேனே! ஆனலிப்போது நீர் மரித்தவேளையி லதிலுமதிக வறுமைப்பாடானதே. அந்த நாளிலே குளிரால் நடுங்கியிருந்த வுமது மிருதுவான சரீரத்திற் போர்க்கச் சிறிது துணிக ளுண்டாயிருந்ததே. இப்போதும்முடைய பிரேதத்தைமூட வொருதுணியு மில்லையே. அந்தவேளையிலும்மை வைக்கோலின்மீதே சயனிப்பிக்கவு முக்கலையிலிடுக்கி யமிர்த மூட்டவு மியல்வதாயிருந்ததே. இப்போ தும்மைச் சிலுவையா' விறக்கவும் பூமிக்குள்ளே மறைக்கவுஞ் சகல அடைமானமு மற்றேனே.

ஐயோவென் ஆறுதலான மகனே! என் தனிமைப் பட்ட குமாரனே! வானமே! பூமியே! பரமண்டலவாசிகளே! ஒருவருமென் வியாகுலமாற்ற வருபவரில்லையோ? யக்கோவென்கிறவனுடைய வியாகுலத்துக்காகப் பூமியினின்ருகாசந்தட்ட வோரேணி காணப்பட்டதே. இப்போதென் வியாகுலத்துக்குச் சிலுவைமட்டாகவேறி என் குமாரனை யிறக்க வோரியற்றினமுங் காணமாட்டேனே! ஐயையோ! என்றிப்படிப் பரிதாபமாய்ப் பரிசுத்த தேவமாதா வழுது பிரலாபித்திருக்கிற வேளையிலே தூரத்திலொரு மனுக்கூட்டமந்தமலைக்கு வருகிறதாகக் காணப்பட்டது. அதைக்கண்டு தேவமாதாவினுடைய பிரலாப வியாகுலமதிகரித்து, ஐயோ! என்செய்வேனே! செத்த பிரேதமாயிருக்கிற வென்குமாரனுக்குச் செய்தவாதைகள் போதாம லின்னமும் வேறுவித வாதைகள்செய்ய வருகிறார்களோ! ஐயோ! என் குமாரனை யெந்தவாறு யெடுத்தொளிப்பேனே! செத்திறந்துபோன இந்தத் தோலுமெலும்புங் காணுந்தனையு மவர்களுடைய கொடுமைக ளாறுகிறதுமில்லை, வாதைகளோய்கிறதுமில்லை யென்று பெருமூச்செறிந்து பிரலாபிக்கிறபோது, யுவாமென்கிற சீஷன் வருகிறசனங்களை யறிந்து மாதாவைப் பார்த்துச் சொல்லுவது :—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறவர்க ளெங்கள் பக்ஷமுள்ள சிநேகிதரல்லாதே சத்துராதிகளல்ல. ஆண்டவருடைய சரீரத்தையிறக்கி அடக்கம்பண்ண வியற்றுகள் கொண்டுவருகிறதாய்க் காண்குதென்று சொன்னர். அதேதெனில், யோசே, நீக்குதேமுசென்கிற விருவரு மாண்டவரை யிரகசியமாய் விசுவசித்திருந்ததினு லிந்தவேளையிற் பிலாத்தண்டையேபோய் ஆண்டவருடைய சரீரத்தையிறக்கி அடக்கம்பண்ண வுத்தாரம் பெற்று அதற்குச் சிலுவையிலேற வேணிகளு மாணிகள் கழற்றக் குறடு சுத்தியல்களுஞ் சரீரத்தைப்பூசுதல் பண்ணச் சுகந்த தயிலங்களும் பிரேதத்தைமூடக் கோடிப்பரிவட்டங்களும் பிரேதங்கொண்டுபோக வாசந்தியு மிவையெல்லாமெடுத்துக்கொண் டிவர்கள் கபாலமலையில் முடுகினவுடனே மாதாவைக்கண் டாசரித்துச் சொல்லுவது :—

பரிசுத்த கன்னியாஸ்திரீயான தேவமாதாவே! உமது திருக்குமாரனுடைய சீஷர்களான நாங்க ளிற்றைவரைக்கும் யூதருக்குப்பயந்து இரகசியமாயிருந்தாலு மிப்போ தேவவருளா லந்தப் பயங்கரங்களை நீக்கிப் பிலாத்தண்டையே போ யெங்க ளாண்டவருடைய சரீரத்தையிறக்க வுத்தாரம் பெற்று வந்ததினு லதுக் கும்முடைய வனுபாதத்தைக் கேட்கிறோமென்று விண்ணப்பஞ்செய்தார்கள். இந்த வசனத்தைப் பரிசுத்த தேவமாதா கேட்டு மனவாறுதலாய்ச் சருவேசுர னென்னுடைய துக்கத்தைப் பார்த்தாரென்று ஸ்தோத்திரம் பண்ணினுள்.

அப்போதந்த இரண்டுசீஷருஞ் சிலுவையைமுடுகி ஆண்டவருடைய ரூப மரூபமாயிருக்கிறதைக்கண்டு வெகுவாய்ப் பரதவித்துச் சிலுவையி லேணிகளைச்சாத்தி ஆசாரத்துடனே யேறி முந்தமுந்தச் சிரசிற் பதித்திருந்த முள்முடியைக் கழற்றிச் சீலைத்துண்டத்தா லதினிரத்தத்தைத் துடைத்தார்கள். அதின்பின் திருவஸ்தபாதங்களி லாணிகளைக்கழற்றி மகாவாசாரத்துடனே சரீரத்தையிறக்கிப் பரிசுத்த தேவமாதாவினுடைய மடியில் வளர்த்தினர்கள். ஐயோ! இந்தத் திவ்விய பிரேதத்தை மாதா தம்முடைய மடியிற் கண்டவுடனே ஆகாயத்திலேநின்று வியாகுலம் நிறைந்த மேகமிறங்கிவந்

117802

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தவ ளிருதயத்திற் குடிகொண்டதுபோ லந்தத் துக்கத்தின் தண்ணீருந் தயவி னக்கினியுங்கூடி இருதயமெரிந் தத்தா லெழும்பின வழுகைச்சத்த மாகாசமிளகி யுருகுகிறதுமா யழுகிற பிரலாபத்தால் மனுஷ ரிருதயங்களெல்லா மதிருகிறதுமா யிரக்கத்துக்குக் காரணமாயிருந்தது. • அப்படியே தமது நேசத்தின் பாரத்தால் தலைகுனிந்து துயரமாய்க் குமாரனுடைய மேலிற்சாய்ந் தவருடைய தெய்வீக முகத்தைத் தம்முடைய முகத்தோ டுறவணைத்து அஸ்தபாத முதலான அவயவங்களையு முறவணைத்து முத்தமிட் டொவ்வொன்றாய் வர்ணித் தழுதிருந்த புலம்பலைக் கண்ணீர் நிறையக் கேளுங்கோ :—

ஐயோ வென் னன்பு தயைநிறைந்த குமாரனே ! எனது சீவியத்தின் நாதனே ! ஐயோ வென் கண் வெளிச்சமே ! திவ்விய சுகந்தம் பரிமளிக்கிற புஷ்பமே ! என் சொர்ணமே ! என் மாணிக்கமே ! உம்மை யிவ்வண்ணஞ் செய்தவராரோ ? சகலரையுஞ் சீவிப்பிக்கிற வும்முடைய பிராணனைப் பறித்தவராரோ ? மாணிக்கங்களுக் கொளிவுகொடுக்கிற சூரியனைப் பார்க்கிலு மாத்துமங்களுக் கதிக வொளிவுகொடுக்கிற முகமுந் தேவதூதர்களுக் கானந்தங்கொடுக்கிற முகமு மிதல்லவோ ? ஐயோ ! எந்தவிதமா யவலக்ஷணமானதோ ? வானமண்டலங்க ளிசைந்ததுபோலிருந்த விந்தப் பொங்கமான தேகத்தி னவயவமெல்லா மிப்போ தெவ்வண்ண மேடாகுடமாய்ப் போனதோ ? திரிபுவன அரசாட்சியின் கிரீடம் பொறுத்த விந்தச் சென்னி யிப்போ முள்ளுக்களாற் பொதுக்கப்பட்ட தென்ன ? திரிகாலத்தின் வர்த்தமானங்களைக் காண்கிற விந்த நேத்திரங்க ளிப்போ மறைபட்ட தென்ன ? அமிர்தம்பொழிந்த போதகங்களுரைத்த தேன்வதையாகிய திருவாக் கிப்போது தாள் பூட்டப்பட்டதென்ன? அளவற்ற ஆச்சரியங்கள்செய் தெண்ணில்லாத சனங்களுக்கு நன்மை கொடுத்த விந்தத் திருக்கரங்களும் பாவிகளை நாடி நடந்த விந்தத் திருக்கால்களு மிப்போ தசையமாட்டா திருப்பதென்ன ? எனது பக்ஷ பிரமாணமுள்ள குமாரனே ! உம்மைக் கண்டு தாயாருக்குள்ள வித்தனை வியாகுலமுந் துக்க வழலிக்கையுங் கண் திறந்து பாராதிருப்பதென்ன ? உமக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டாயிருக்கிற விவ்வளவு உபத்திரியங்களையும் நிந்தை நிர்ப்பந்தங்களையு மேது முகாந்திரமென்று வாய்திறந் துரையாதிருப்பதென்ன? எனது தயாவதிக குமாரனே! பெத்லேகமென்கிற நகரியி லும்மைப் பிரசவிக்கிறபோ தொரு பிறவிநோவும் வேதனையுந் தோற்றவில்லையே! இப்போ திந்தக் கபாலமலையி லெனக்குச் சகல வர்தை வருத் தங்களுங் கஸ்தி நோவுகளும் வரவிருந்ததோ? ஐயோ! இப் படிப்பட்ட விதனத்தோடுந் துக்க சந்தாபங்களோடு மென் மகனைப் பார்த்துப்பார்த் தெந்தவாறுய்ப் பிராணனைப் பொறுத்துக்கொண் டிருப்பேனோ? எப்பரிசா யிந்தத் துக் கத்தைப் பார்த்திருப்பேனோவென் றிப்படியே பரிசுத்த தேவமாதா புலம்பியிருக்கிறபோது யுவாமென்கிற சீஷனு மாண்டவருடைய மார்பிலே விழுந்து, எனது தேவகுருச் சுவாமியென் றபயசத்தமாய்ப் புலம்பியழுது, மரியமதலேன வாண்டவருடைய திருப்பாத வடிபணிந்தழுது மற்றப் பத்தி யுள்ள ஸ்திரீகளுந் தலைமுடிவிரித்துத் தரையிற் புரண் டாகா சத்திற்கேட்க வபயசத்தத்தோ டழுது கண்ணீர்களால் தேவ பிரேதங் கழுவுண்டு சில்வண்டுக்குரலா யழுகையும் பிரலா பங்களு முண்டானது. அப்போ யூசே நீக்குதேமுசென்கிற சீஷர் பொழுதுபட முடுகுகிறதைக்கண்டு பரிசுத்த தேவ மாதாவை யாசரித்து இராவாகுமுன்னே ஆண்டவருடைய திருச்சரீரத்தைப் பொதிந் தடக்கக்கொண்டுபோகிறதற் கனு பாதந்தாருமென்று கேட்டார்கள். அப்போது பரிசுத்த தேவமாதா தன்மடியோ டணைத்திருந்த குமாரனுடைய சரீ ரத்தை யவர்கள்கையிற் கொடுக்கத் தன்சரீரத்தி லாத்து மம் பிரிகிறதுபோல விதனமுண்டாய்ச் சொல்லுவது:—

என் குமாரனுடைய ஆத்தும மற்றுப்போனதே. இப் போது பார்த்திருக்கிற சரீரத்தையுங் காணுதிருப்பேனுகி லென் பிராண னிருக்குமோ? என்னுடைய குமாரனுனவர் தம் து மரணமு மெனது பிராணவியோகமு மொருசாவாய், மகனுடைய கல்லறையுந் தாயுடைய வடக்கமு மொருபூம தானமாயிருக்கமாட்டாதோ! ஐயோ! இப்படியும் பேறு பெற்றேனில்லையென்று மகா பரதாப வழுகையோடு குமார னுடைய சரீரத்தை யவர்கள் கைவசமாய்க் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அப்போ தந்தப் பத்தியுள்ள சிஷர்களாண்டவருடைய பவித்திரமான சரீரத்தைத் தங்கள் கையிற் பெற்றுக் கண்ணீர்களாற் கழுவுகிறதாயழுது தாங்கள் கொண்டுவந்த பரிமள தயிலங்களாற் பூசுதல்பண்ணிக் கோடி வஸ்திரங்களால் மறைத்தார்கள். அந்தப் பரிவட்டத்தி லவருடைய திருச்சுரூபம் பதிந்து இற்றைவரைக்கு மித்தாலியவென்கிற விராச்சியத்தி ஞலயத்திலே காண்பிக்கப்படுவது. இந்தப்பிரகாரமாக ஆண்டவருடைய தெய்வீகதேக மமங்கல வாயத்தம் பண்ணினதின்பின் அத்தைக் கொண்டுபோகிற ஆசந்தியையுங் கறுப்பாற் சோடித்து அதில் திவ்விய பிரேதத்தை வளர்த்திக் கூடிய பத்தியுள்ள சனங்க ளிருபுறமா யணிவகுத்தாண்டவரைப் பாடுபடுத்தின முள்முடி, இருப்பாணிகள் முதலான இயற்றினங்கள் சிலர் கையிலேந்தி முன்னேநடக்க, ஆசந்தியை யூசே நீக்குதேமுசுட்பட நாலுபேர் தோளிற் சுமக்க வாகாச மதிருகிற மேரையா யிரக்கமுள்ள வழுகையோ டொப்பாரி புலம்பல்சொல்லி மழைபொழிகிற மேரையாய் வழிநீளங் கண்ணீர்தெளித்துக் கல்லறைமட்டா யெழுந்தேற்றம்பண்ணிப் பூமியை யுண்டாக்கின ஆண்டவரைப் பூமியிலடக்கம் பண்ணினர்கள்.

ஐயோ கிறீஸ்தவர்களே! இந்தப் பத்தியுள்ள சனங்களிம்மாத்திரம் வியாகுலவழுகையோ டெங்களாண்டவருடைய திருப்பிரேதத்தை அடக்கம்பண்ண வெழுந்தேற்றம்பண்ணுகிறபோதே அவர்கள்கூட வெங்களுடைய வியாகுலமு மழுகையும் பெருகவேண்டாமோ? எங்களுடைய வாத்துமத்தினுடைய பிரகாச மின்று மறையப்போகிறபோ தெங்களுக்குத் துக்கமில்லையோ? எங்கள் சுகிர்த கருவூலத்தை யொழிக்கப் போகிறபோதே யெங்கள்மனதிற் சந்தாபமில்லையோ? எங்களுடைய விலைமதியாத விரத்தினங் கெட்டுப்போகிறதாயிருக்கிறபோதே எங்களுக்குப் பரதாபமில்லையோ? இன்று பூமியதிர்ந்து கற்பருவதங்கள் வெடித்தபோதே யெங்கள் மனதுக ளதிர்ந்து நடுங்கவேண்டாமோ? ஆலயத்தின் திரை யிருதுண்டானபோதே எங்க ளிருதயங்க ளிரு அங்கிஷமாய்ப் பிளக்கவேண்டாமோ? சூரியமண்டலந் தனது பிரகாசத்தை யொழித்தபோதே எங்கள்முகத்தி லொளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பதென்ன? அக்காலத்திலே பூமியிற் சலப்பிரளயம் பெருகினதுபோ லின்றெங்கள் கண்ணீர்ப்பிரளயம் லோகமெங்கும் பெருகவேண்டாமோ? பெருகவேணுமே. எங்கள் தேவனு மிராயனும் பிதாவுஞ் சீவநாதனுஞ் சகல சவுந்தரியமும் ஐசுவரியமுமாயிருக்கிற வெங்களாண்டவ ரின்றெங்கள் கண்ணுக்கு மறைந்து போகிறபோதே எங்களிருதயங்கள் துக்கசாகரங்களாய்ப் பிரலாப வலைகளா யங்கதுவார மூற்றுக்களாய் வியாகுலம்பெருகி யழு தக்கினிக்குச்சமானமாயெரிந்து சகல பாவங்கள் வெந்து நீறுகப்பண்ணவேணுமே. ஐயோ வென்யேசுவே! தேவனே! இப்படி யெங்கள் பாவங்களுடைய பொறுதியை நாங்களடையவும் உம்முடைய ஆசந்தியைச்சுமந்து கல்லறையண்டையே யணுகியழவு மெங்க ளிருதயங்களிலே யடக்கம்பண்ணவுஞ் சிலுவையா லிறக்கப்பட்ட உம்முடைய தேவதேகத்தை எங்களுக்குக் காண்பியுஞ்சுவாமீ!




## உத்தம மனஸ்தாப மந்திரம்

அளவுபிரமாணமற்ற என் யேசுவே! உம்முடைய திருமரணத்தைப் பார்த்து எங்களை நரகதிமரணத்தாலகற்றி நிவாரம்பண்ணும். உம்முடைய திருச்சரீரத்தைச் சிலுவையா லிறக்கினதைப்பார்த்து எங்கள்மே லிரக்கமாயிரும். உம்முடைய அடக்கத்தைப்பார்த்து எங்களுடைய சகல பாவங்களையு மும்முடைய கிருபையா லடக்கிப் பொறுத்துக்கொண்டு எங்களை இரட்சித்துக் கொள்ளுஞ் சுவாமீ! ஆமென் யேசு.

வியாகுல பிரசங்கம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழைதீர்க்கிற மந்திரம்

சர்வதயாபர யேசுவே! பாவிகளாயிருக்கிற எங்கள்பேரில்,

**தயவாயிருஞ் சுவாமீ! தயவாயிரும்.**

மண்ணால் மனுஷனை உண்டாக்கி,
திவ்விய கருணையால் வல்லவனாக்கி,
அவன் கையாற் பாடுபடத் திருவுளமான
என் தயாபர யேசுவே!

துஷ்டயூதர்கையிற் சிறைப்பட்டு,
திருக்கண்டத்திற் கரத்திற் கயிறிட்டு,
செம்மறிபோலப் பலிக்கேகப்பட்ட
என் தயாபர யேசுவே!

அநீத குருச்சபையி லமைந்து,
பொய்ச்சாட்சிகளுக்குப் பணிந்து,
தேவபழிகாரனாகக் கூறப்பட்ட
என் தயாபர யேசுவே!

திருக்கன்னத்தி லறையுண்டு,
திருவிழிகள் மறைக்கப்பட்டு,
இராமுழுதுங் கோறணிவாதைக ளநுபவித்த
என் தயாபர யேசுவே!

பிலாத்திட்ட துஷ்ட தீர்வையாற் கற்றூணிற் கட்டுண்டு,
நிஷ்டூரமா யையாயிரத்துக்கதிக மடிபட்டு,
சர்வாங்கமு மிரத்தவாறாகப்பட்ட
என் தயாபர யேசுவே!

திருச்சிரசில் முள்முடிதரித்து,
பீற்றற் சகலாத்தை மேலிற்போர்த்து,
பரிகாச ராசனாக நிந்திக்கப்பட்ட
என் தயாபர யேசுவே!

பாரதூரச் சிலுவை தோளிற் சுமந்து,
கபாலமலைமட்டுந் தொய்வோடே நடந்து,
பெலவீனமாகத் தரையிலே விழுந்த
என் தயாபர யேசுவே!

**தயவாயிருஞ் சுவாமீ! தயவாயிரும்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருத் துகிலைக் கடூரமாயுரிந்து,
சர்வாங்க காயங்கள் விரியாய் மிகுந்து,
சபைமுன்பாக நாணித்து வாதிக்கப்பட்ட
என் தயாபர யேசுவே!

சிலுவை மரத்தின் மீதே சயனித்து,
திருப்பாதகரங்களி லாணிக ளறைந்து,
இரு கள்வருக்கு நடுவே நிறுத்தப்பட்ட
என் தயாபர யேசுவே!

சிலுவையிலேறிச் சுகிர்தம் மொழிந்து,
வாதிக்கிற சத்துராதிகளுக்குப் பாவம்பொறுத்து,
அனைவருக்குந் தயவுகாண்பித்த
என் தயாபர யேசுவே!

சகல வாதைகளைத் தீரவனுபவித்து,
பாவிக ளீடேற்றம் முகிய முகித்து,
சீவபலியாகப் பிராணனைக் கொடுத்த
என் தயாபர யேசுவே!

திருமுகமலர்வு மூடிந்து,
திருவிழிகள் மறைந்து,
திருத்தலை கவிழ்ந்து மரணித்த
என் தயாபர யேசுவே!

எனக்காக வித்தனை பாடுகளைப்பட்டீரே!
என்பாவ முத்தரிக்க வுமதுதிரஞ் சிந்தினீரே,
எனதாத்துமத்துக்காக வுமதாத்துமத்தைக் கொடுத்த
என் தயாபர யேசுவே!

தயாபரா! சுவாமீ! தயாபரா!

இந்த நன்றிகளையெல்லா மடியேன் பாராமல்,
எனக்காகப் பாடுபட்டதையு மெண்ணாமல்,
மகா துஷ்ட துரோகத்தைச் செய்தேனே,
**என்பாவத்தைப் பொறுஞ்சுவாமீ! என்பாவத்தைப்பொறும்.**

இதோ வென்னிருதயஞ் சகலமு மதிர்ந்து,
விதனத்தாற் பொடிப்பொடியாகப் பிளந்து,
கண்களாற் கண்ணீர்சொரிந் தழுது நிற்கிறேன்,
**என்பாவத்தைப் பொறுஞ்சுவாமீ! என்பாவத்தைப்பொறும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்பாவத்தி னதிகத்தையுங் கொடுமையையும் பாராமல்,
உம்முடைய கிருபையையும் மகிமையின் மிகுதியையும்
பார்த்து,

உம்முடைய கசையடிகளையும் முள்முடியையும் பார்த்து,
உம்முடைய சிலுவையையுந் திருமரணத்தையும் பார்த்து,
உம்முடைய சர்வாங்க காயங்களையும் திருவுதிரங்களையும்
பார்த்து,

**சர்வ தயாபர யேசுவே! பாவிகளாயிருக்கிற எங்கள் பேரில் தயவாயிருஞ்சுவாமீ! தயவாயிரும்.**

(இவ்வாக்கியத்தைத் துணைவரோடு மும்முறை மாறிச்சொல்லியபின் மூன்று பரமண்டலமந்திரஞ் சொல்லி முடிக்கவும்)



## வியாகுலமாதாவுக்குத் தோத்திரச்செபம்

வியாகுலத்தினாலே பூரணமரியாயே வாழ்க! சிலுவையில் அறையுண்டநாதர் உம்முடனே! ஸ்திரிகளுக்குள்ளே துக்கம் நிறைந்தவள் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய யேசு துக்கம் நிறைந்தவருமாமே. அர்ச். மரியாயே! சிலுவையில் அறையுண்ட நாதருடைய மாதாவே! உம்முடைய திருக்குமாரனைச் சிலுவையில் அறைந்த எங்களுக்கு இப்பொழுதும் எங்கள் மரணநேரத்திலும் மனஸ்தாபக் கண்ணீரை வருவித்தருளும், ஆமென் யேசு.

(இதைச்சொல்லும் ஒவ்வொருமுறைக்கும் முந்நூறுநாட் பலனுண்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யேசுநாதர்பட்ட திருப்பாடுகளின் பிரார்த்தனை

சுவாமீ! கிருபையாயிரும்
கிறீஸ்துவே! கிருபையாயிரும்
சுவாமீ! கிருபையாயிரும்
கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்
கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்
பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சருவேசுரா,

**எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.**

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சருவேசுரா,
இஸ்பிரீத்துசாந்துவாகிய சருவேசுரா,
அர்ச்சியசிஷ்டதம திரித்துவமாயிருக்கிற ஏக சருவேசுரா,
எங்களுக்காகப்பாடுபட அவதரித்து எழுந்தருளிவந்த யேசுவே,
இவ்வுலகத்திற் சஞ்சரிக்கிறபோது அடக்கத்தோடு சகல இக்கட்டுகளை அனுபவித்துக்கொண்டுவந்த யேசுவே,
அடியோர்களுக்காக அனந்த பட்சத்தால் உமது பிராணனை ஒப்புக்கொடுத்த யேசுவே,

ஏ. ஆ. இ. சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்முடைய திருப்பாடு நிர்ப்பந்த மரணத்தின் நினைப்புக்காகத் தேவநற்கருணையை உண்டாக்கியருளின யேசுவே,

தாழ்ச்சியைக் கற்பிக்க உம்முடைய சீஷர்களின் பாதங்களைக் கழுவிப்பணிந்த யேசுவே,

பூங்காவனத்தில் உம்முடைய தேவபிதாவைநோக்கிச் சாஷ்டாங்கமாய்விழுந்து மன்றாடி, பிதாவே! உமது சித்தத்தின்படியே ஆகட்டுமென்று திருவுளம்பற்றின யேசுவே,

மனிதர் பாவத்தால் துக்கசாகரத்தில் அமிழ்ந்தி அவஸ்தைப் பட்டு இரத்த வேர்வை வேர்த்த யேசுவே,

ஒரு சம்மனசினால் ஆறுதல் சொல்லப்படத் திருவுளமான யேசுவே,

உம்முடைய சீஷனாகிய துரோகியால் கன்னத்திலே முத்த மிட்டு முப்பது வெள்ளிக்காசுக்காக உம்முடைய பகையாளிகளுக் குக் காட்டிக் கையளிக்கப்பட்ட யேசுவே,

ஒரு கள்ளனைப்போலே நெஷ்டூர சேவகரால் மானபங்கமாகக் கயிறு சங்கிலிகளைக்கொண்டு கட்டப்பட மனமொப்பின யேசுவே,

உம்முடைய சீஷர்கள் முதலிய சகலராலுங் கைவிடப்பட்ட யேசுவே,

ஒரு குற்றவாளியைப்போலே ஆசாரியரான ஆனாஸ் கைப்பாஸ் என்பவர்கள் முன்பாகக் கூட்டிக்கொண்டுபோய் விடப்பட்ட யேசுவே,

துஷ்ட சேவகனால் திருக்கன்னத்தில் நெஷ்டூரமாய் அறையப் பட்ட யேசுவே,

பொய்ச்சாட்சிகளாற் குற்றஞ்சாட்டப்பட்ட யேசுவே,

பொய்ச்சாட்சிகளுக்கு மறுமொழி சொல்லாமல் மவுனமாய் இருந்த யேசுவே,

தேவரீர் சருவேசுரனுடைய குமாரனென்று நிச்சயித்ததினால் தேவதூஷணனென்று சாவுக்கு நியமிக்கப்பட்ட யேசுவே,

சேவகர் ஊழியக்காரர் முதலியவர்களால் அடிக்கவுந் திருச் சிரசில் குட்டவும் இராமுழுதுஞ் சகலவிதத்திலும் வாதிக்கப் பட்ட யேசுவே,

அந்தத் துஷ்டர் கருணைநிறைந்த உம்முடைய திருக்கண்களை மூடிக் கன்னத்திலறைந்து உன்னை அடித்தவனைக் காட்டு என் றதைப் பொறுமையோடே சகித்துக்கொண்ட யேசுவே,

திருமுகமலரில் உமிழப்படச் சுளியாத யேசுவே,

நிந்தை அவமானங்களினாற் பூரிக்கப்பட்ட யேசுவே,

அவமானப்படுகையில் ஆச்சரியமான சாந்தகுணத்தால் விளங் கின யேசுவே,

எங்களைச் சமையப்பண்ணி இரட்சியுஞ் சுவாமி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மும்முறை பயத்தால் தேவரீரை மறுதலித்த இராயப்பரைக் கிருபாகடாட்சத்தோடே நோக்கி அவருக்கு மனஸ்தாபம் வருவித்தருளின யேசுவே,

மரணத்தீர்வைக்குப் பாத்திரவானைப்போலே கட்டின கட்டோடே பிலாத்தென்கிற துரையிடத்தில் ஒப்பிக்கப்பட்ட யேசுவே,

பிலாத்தென்கிறவனால் ஏரோதேசென்கிற இராசாவின் நியாயாசனத்துக்கு முன்பாக அனுப்பப்பட்ட யேசுவே,

அதிசய மவுனத்தைப்பற்றி ஏரோதேசென்கிற இராசாவினாலும் அவனுடைய பிரசைகள் சேனைகளினாலும் நிந்திக்கப்பட்ட யேசுவே,

பைத்தியன் என்கிற அடையாளமாக நீளிய வெள்ளைச் சட்டையைத் தரிப்பித்தும் பரிகாசம்பண்ணவும் பிலாத்தண்டைக்குத் திரும்ப அனுப்பவும்பட்ட யேசுவே,

நிந்தை அவமானத்தோடு எருசலேநகரத் தெருவீதிகளிலே பலமுறை இழுத்துக்கொண்டு போகவுந் திரளான சனங்களால் இகழ்ச்சி செய்யவும்பட்ட யேசுவே,

வறவாசென்கிற கொலைப்பாதகக் கள்ளனோடே ஒரேவரிசையாக நிறுத்திச் சனங்களுக்குக் காண்பிக்கப்பட்ட யேசுவே,

வறவாசென்கிறவனை விடுதலாக்கச்சொன்ன சனங்களாற் சிலுவையில் அறையவுங் கொல்லவுங் கூவப்பட்ட யேசுவே,

கற்றூணோடே கட்டுண்டு சம்மட்டி கசை சாட்டைகளால் மிகவும் நெஷ்டூரமாய் அடிபட்ட யேசுவே,

அடியால் திருச்சதை கிழிய இரத்தம் வெள்ளமாயோடச் சருவாங்கமும் ஏக காயமாகிக் குஷ்டரோகி ரூபமான யேசுவே,

எங்கள் அக்கிரம பாவங்களுக்காக அடிகளால் நொருக்கப்பட்ட யேசுவே,

பரிகாச இராசாவாகத் துஷ்ட சேவகராற் பீற்றலான சிவப்புச் சகலாத்து அணியவும் மூங்கிலைச் செங்கோலாகத் தரிக்கவும் முண்முடிசூட்டி அடிக்கவும் இராசாவே வாழ்கவென்று நிந்தை கோறணியாக வணங்கவும்பட்ட யேசுவே,

அந்தத் துக்கத்துக்குரிய வேஷத்தோடே பிலாத்துதுரையால் யூதசனங்களுக்குக்காட்டி இதோ மனிதனென்று சொல்லப்பட்ட யேசுவே,

[illegible]மும் அநீதமும் ஈனமுமான மரணத்தீர்வைக்கு உள்ளாகத் திரு[illegible]ளமான யேசுவே,

யூதருடைய குரூர வர்மமுள்ள மனதுக்குக் கையளிக்கப்பட்ட யேசுவே,

[illegible]திசய தைரிய பொறுமையோடே சிலுவைசுமந்துகொண்டு போன யேசுவே,

எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி

மிகவுஞ் சாதுள்ள செம்மறிப்புருவைபோலே கொலைக்களத்துக்குக் கூட்டிக்கொண்டுபோகப்பட்ட யேசுவே,

சிலுவையின் பாரத்தால் நெரிந்து அயர்ந்துவிழுந்த யேசுவே,

சிலுவையில் அறையப்படுவதற்கு உம்முடைய காயங்களோடே ஒட்டியிருந்த வஸ்திரங்கள் உரியப்பட்டதினால் அகோர வேதனையையும் மானபங்கத்தைபுமனுபவித்த யேசுவே,

திரு அஸ்தபாதங் கொடூர இருப்பாணிகளாலே துளைத்து அறையுண்டு இருகள்வர்நடுவிற் சிலுவையில் உயர்த்தப்பட்ட யேசுவே,

சிலுவையில் மூன்றுமணிநேரம் ஒரு ஆறுதலுமில்லாமல் நிகரில்லாத நிர்ப்பந்தங்களை அனுபவித்த யேசுவே,

சிலுவையில் யூதர்களுடைய பரிகாசத்துக்கும் வழிபோகிறவர்களுடைய தூஷணங்களுக்குமுள்ளான யேசுவே,

எங்கள் பாவத்துக்காக இரத்தப்பலியான யேசுவே,

பாதகர்களோடே சமானமாக்கப்பட்ட யேசுவே,

உம்மை வாதித்துக் கொலைப்படுத்தின பகையாளிகளுக்காக உம்முடைய தேவபிதாவை வேண்டிக்கொண்ட யேசுவே,

உமது இடதுபக்கத்திற் சிலுவையில் அறையுண்ட துஷ்ட கள்வனாலும் தூஷிக்கப்பட்ட யேசுவே,

மனஸ்தாபப்பட்ட கள்வனைநோக்கி இன்று நம்மோடே பரகதியில் இருப்பாயென்று திருவுளம்பற்றின யேசுவே,

உம்முடைய நேசதாயாரைப் பிரிய சீஷனுக்கு மாதாவாகக் கையளித்த யேசுவே,

மனிதர் ஈடேற்ற ஆசையைக் குறித்துத் தாகமாயிருக்கிறேன் என்று கூப்பிட்ட யேசுவே,

தாகத்துக்குப் பிச்சோடே கலந்த புளித்த இரசங் கொடுக்கப்பட்ட யேசுவே,

மிகுந்த துக்க துயரத்தோடே உம்முடைய தேவபிதாவை நோக்கி, என் தேவனே! என் தேவனே! என்னைக் கைநெகிழ்ந்ததேதென்று கூப்பிட்ட யேசுவே,

சிலுவைமரணபரியந்தங் கீழ்ப்படிந்த யேசுவே,

தேவரீரைக்குறித்து வேதாகமங்களில் எழுதப்பட்டதெல்லாம் நிறைவேறினதைப்பார்த்து எல்லாம் நிறைவேறிற்றென்று திருவுளம்பற்றின யேசுவே,

சகல மனுஷருடைய ஈடேற்றத்துக்காக மகா அபயசத்தமிட்டுப் பிதாவே! உம்முடைய கரங்களில் என் ஆத்துமத்தைக் கையளிக்கிறேனென்று திருவுளம்பற்றின யேசுவே,

திருவிழிகள் மறைந்து திருத்தலை குனிந்து பிராணனைவிட்ட யேசுவே,

எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்காக மட்டற்ற அன்பினுற் சிலுவையில் மரித்த யேசுவே,

மரித்தவேளையில் அநேக அற்புதங்களால் உமது தெய்வீக வல்லமையை விளங்கச் செய்தருளின யேசுவே,

மரித்தபின் ஈட்டியரற் குத்தித் திறக்கப்பட்ட உமது திருவிலாவினின்று அற்புதமாகத் திருவுதிரமுந் தண்ணீரும் சொரியத் திருவுளமான யேசுவே,

சிலுவையினின்று இறக்கப்பட்டு வியாகுலம் நிறைந்த உம்முடைய திருமாதாவின் மடியில் வளர்த்தப்பட்ட யேசுவே,

விலையேறப்பெற்ற சுகந்த பரிமள தயிலத்தாற்பூசி மெல்லிய பரிவட்டத்தால் மூடிப் புதுக் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்ட யேசுவே,

மூன்றும்நாள் மரணத்தைச் ஜெயித்து உயிர்த்தெழுந்தருளின யேசுவே,

நாற்பதாம்நாள் பரலோகத்துக்கு ஒட்டோலகமாய் எழுந்தருளின யேசுவே,

எங்கள்பேரிலுள்ள மாருதபட்சத்தின் அடையாளமாக உமது திருக்காயங்கள் இப்போதைக்கும் எப்போதைக்கும் உமது திருச்சரீரத்திற் பதிந்திருக்கச் சித்தமான யேசுவே,

அந்தத் திருக்காயங்களை உம்முடைய தேவபிதாவுக்குக் காண்பித்து எங்களுக்காக எந்நேரமும் மன்றுடுகிற மத்தியஸ்தராகிய யேசுவே,

தயாபரராயிருந்து,

**எங்கள் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமீ.**

தயாபரராயிருந்து,

**எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமீ.**

சகல பொல்லாப்புக்களிலேயும் நின்று,

**எங்களை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமீ**

சகல பாவங்களிலே நின்று,

உம்முடைய கோபத்திலே நின்று,

துர்மரணத்திலே நின்று,

நித்திய ஆக்கினையிலே நின்று,

பிசாசினுடைய சகல தந்திரங்களிலேயும் நின்று,

ஆங்காரம், கோபம், மோகம் முதலான துர்க்குணங்களிலே நின்று,

தேவரீர் ஏவுகிற தருமவிசாரங்களை அசட்டைபண்ணுகிற துர்க்குணத்திலே நின்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திக் குருட்டாட்டத்திலே நின்று,
கன்னெஞ்சத்தனத்திலே நின்று,
பஞ்சம், படை, கொள்ளைநோய் முதலிய ஆக்கினையிலே நின்று,
தேவரீருடைய துக்கக் கண்ணீரையும் இரத்தவேர்வையையும் நிர்ப்பந்தப்பாடுகளையும் பார்த்து,
தேவரீர் மரணமட்டும் பிதாவுக்குக் கீழ்ப்படிந்த ஆச்சரியமான தாழ்ச்சி பொறுமையைப் பார்த்து,
தேவரீருடைய திருமுண்முடி, ஆணி, சிலுவையைப்பார்த்து,
தேவரீருடைய திரு மரணத்தையும் திரு அடக்கத்தையும் பார்த்து,
தேவரீருடைய மகிமையான உத்தானத்தையும் ஆச்சரியமான ஆரோகணத்தையும் பார்த்து,
நடுத்தீர்வை நாளிலே,

எங். இரட். சுவாமி

பாவிகளாயிருக்கிற நாங்கள் தேவரீரை மன்றாடுகிறோம்,

**எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமி.**

எங்களை இரட்சித்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,
எங்கள் பாவங்களைப் பொறுத்து எங்களை இரட்சித்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,
உம்முடைய இஸ்பிரீத்துசாந்துவின் இஷ்டப்பிரசாதத்தை எங்களிடத்தினின்று மறுபடி வாங்கிக்கொள்ளாதபடிக்குத் தேவரீரை மன்றாடுகிறோம்,
எங்களை உமது தயாப சமுகத்தினின்று தள்ளிவிடாமல் கிருபைசெய்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,
நாங்கள் ஒருகாலும் உம்மைவிட்டுப் பிரியாதபடிக்குத் தயவுசெய்யவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,
எங்களுக்கு மெய்யான மனஸ்தாபத்தையும் தாழ்ச்சி, சரீர வொறுத்தல், செபத்தியான பத்தியையுந் தந்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,
உமது திருச்சபையை ஆண்டு பாதுகாத்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,
சகல சனங்களுக்கும் உமது வேதத்தின் உண்மையையுஞ் சுகிர்த நன்மைத்தனத்தையும் விளங்கப்பண்ண வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,
உமது சத்தியவேதம் பரம்பச்செய்வதற்கு வேண்டிய சற்குருக்களையனுப்பி அவர்கள் பிரயாசங்களுக்கு அநுகூல உதவி செய்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் நினைவு, ஆசை எப்போதும் பரலோக நன்மைகளை நோக்கியிருக்க வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்களுடைய ஆத்துமங்களையும் எங்கள் சகோதரர் பந்துக்கள் உபகாரிகளுடைய ஆத்துமங்களையும் நித்திய ஆக்கினையிலே நின்று இரட்சிக்க வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்களை மோக்ஷவாசிகளின் ஆனந்த மகிமைக்குப் பங்காளிகளாக்கவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

மரித்த சகல விசுவாசிகளுக்கும் நித்திய சீவியத்தைக் கட்டளையிட்டருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் வேண்டுதலைக் கேட்டருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

சருவேசுரனுடைய சுதனே, தேவரீரை மன்றாடுகிறோம்,

எங். மன். கேட். சுவாமி

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சருவேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய யேசுவே,

**எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமீ.**

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சரு......

**எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமீ.**

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சரு......

**எங்களுக்குத் தயவுபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.**

சுவாமீ! கிருபையாயிரும்

கிறீஸ்துவே! கிருபையாயிரும்

சுவாமீ! கிருபையாயிரும்

மு.—ஆண்டவரே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

து.—எங்கள் அபயசத்தம் உமது சந்நிதிக்கேறக்கடவது.

## பிரார்த்திக்கக்கடவோம்

சொல்லிலடங்காத நிர்ப்பந்தங்களுக்கும் கடின மரணத்துக்கு முள்ளாகத் திருவுளமான யேசுவே! தேவரீர்பட்ட இத்தனை பாடுகளெல்லாம் அடியோர்களுக்கு வியர்த்தமாய்ப்போக ஒட்டாமல் அவைகளின் பலனை எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமீ, ஆமென்யேசு.

தேவரீர் சிந்தின திருவிரத்தத்தால் எங்கள் ஆத்துமங்களைக் கழுவிப் பரிசுத்தமாக்கும். தேவரீர் அசையாத பொறுமையோடு இத்தனை கொடூர கஸ்திகளை அனுபவித்துப் பிரியத்தோடு உமது பாரமான சிலுவையைச் சுமந்துகொண்டதுபோல, அடியோர்களும் எங்கள் பாவங்களுக்குப் பரிகாரமாக எங்களுக்கு நேரிடுகிற கஸ்தி ஆக்கினைகளைப் பொறுமையோடு அனுபவித்து உமது தேவதிருவுளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்குக் கட்டளையிடுகிற சிலுவையைச் சந்தோஷத்துடனே சுமந்துகொள்ள அநுக்கிரகஞ்செய்தருளும்.

அப்படியே நாங்கள் கஸ்தி அவமானத்தில் தேவரீருடைய பொறுமையின் மாதிரியைக் கண்டுபாவித்தபின்பு உமது உத்தானத்தின் பேரின்ப மகிமைக்குப் பங்காளிகளாகும்பொருட்டுத் தயவுபண்ணியருளுஞ் சுவாமீ.

மிகவும் எங்கள் நேசத்துக்குரியவருமாய் மேலான ஆராதனைக்குப் பாத்திரமுமாயிருக்கிற திவ்விய இரட்சகரே! சிலுவையில் அறையப்பட்ட மதுர யேசுவே! சதாகாலமும் இராச்சியபாரம்பண்ணுகிற சீவியரான ஆண்டவரே! மிகுந்த துர்ப்பலமுள்ள பாவிகளாகிய அடியோர்கள்பேரில் இரக்கமாயிரும். எங்கள் இரட்சணியத்தின் பேரில் தேவரீருக்குள்ள ஆசைப்பெருக்கத்தையும் உம்முடைய துயரமான பாடுகளையும் தேவரீர்பட்ட வியாகுலம்பொருந்திய அவஸ்தையையுஞ் சிந்தின திருவிரத்தத்தையும் உம்முடைய திரு ஆத்துமத்தைப் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்த சிரவணத்தையும் மரணமடையும் வேளையிற் கூப்பிட்ட கடைசி அபயசத்தத்தையும்பற்றி எங்களுடைய இரட்சணியத்தை நிறைவேற்றியருளும். இப்போது மெப்போதும் எங்கள் ஆத்துமத்தை உம்முடைய தயாளமுள்ள மடியில் ஆதரித்து எங்கள் மரணநேரத்தில் அதை உம்முடைய திருக்கரத்தால் அரவணைத்துக் கொண்டு நல்ல மரணத்தையும், தேவரீரைத் தரிசிக்கிற சொல்லிலடங்காத பேரின்பத்தையுங் கட்டளையிட்டருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறேஞ் சுவாமீ, ஆமென்யேசு.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சுருக்கமான

# சிலுவைப்பாதை

---

இதைப் பத்தியோடே செபிப்பவர்கள், யேசுநாதசுவாமி பாடுபட்ட ஸ்தலமாகிய ஜெருசலேம் பட்டணத்தைத் தரிசித்துச் சந்திப்பவர்களுக்கு அர்ச். பாப்புக்களால் முன் அளிக்கப்பட்ட பரிபூரண பலன்களைக் குறைவின்றி அடைவார்கள். இப் பதினாலு ஸ்தலங்களையும் ஒரே இடத்திலிருந்து செய்யாமல் கொஞ்சமாகிலும் நடந்து யேசுநாதசுவாமி பட்டபாடுகளைத் தியானித்துக் கொண்டே செய்யவேண்டியது. பெரிய சிலுவைப்பாதைக்கும் இந்தச் சுருக்கமான சிலுவைப்பாதைக்கும் பலன் சரிதான்.

கோவிலிலே பீடத்துக்கு முன்பாக முழந்தாளிலிருந்து
உத்தம மனஸ்தாபமந்திரம் ஓதியபின் சொல்லத்தகும்

## ஆயத்தச் செபம்

திவ்விய யேசுவே! எங்கள் நேசத்துக்குரிய இரட்சகரே! இதோ அடியோர்கள் எங்களுக்காகவும் மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்களுக்காகவும் உமது திவ்விய இரக்கத்தைக் கேட்டு மன்றாடும்படிக்குத் தாழ்ச்சி வணக்கத்துடனே உமது திருப்பாதத்திலே விழுந்துகிடக்கிறோம். உம்முடைய திருப்பாடுகளைத் தியானிக்கப்போகிற அடியோர்கள் எல்லாருக்கும் அதுகளின் அளவில்லாப் பேறுகளைத் தந்தருளுஞ்சுவாமீ. அழுகைப் பிரலாபத்துக்குரிய உமது திருச்சிலுவையின் பாதையை அனுசரிக்கையில் நாங்கள் முழுதும் மனந்திரும்பி மெய்யான துக்கமனஸ்தாபப்பட்டு இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுலகத்தின் துன்பம், பீடை, கஸ்தி, அவமானங்களைச் சந்தோஷத்துடனே ஏற்றுக்கொள்ளும்படியாக அனுக்கிரகஞ் செய்தருளும்.

ஆ திவ்விய மாதாவே! அர்ச்சியஷ்ட மரியாயே! நீர் சிலுவையின் பாதையிலே எங்களுக்கு முந்தி நடந்ததினால் அதை எங்களுக்குக் காட்டிப் படிப்பித்தவள் நீரே. பத்தியுள்ள இந்த முயற்சியை அனுசரிக்கும் இந்நேரத்திலே இஸ்பிரீத்துசாந்துவானவர் எங்கள் இருதயத்தில் வருவிக்கும் நல்ல மனஸ்தாபத்தையும் தேவசிநேகத்தின் பற்றுதலையும் அர்ச்சியசிஷ்ட திரித்துவமாகிய சருவேசுரன் தமக்குச் செய்யப்பட்ட நிந்தைகளுக்குப்பரிகாரமாக ஏற்றுக்கொள்ளும்படிக்கு நீரே மன்றாடவேணுமென்று உம்மைநோக்கி நம்பிக்கையோடே பிரார்த்திக்கிறோம், ஆமென்யேசு.

(பாடல் இராகம் ஆனந்தபைரவி)

புவனரட்சகா யேசுநாதர்—மோட்சநெறியைப்
போதித்தருளுஞ் சத்தியவேதா,
தவமாமரி திருக்குமாரா, பாவிகளானோர்
தம்மையீடேற்று முபகாரா

(பாடல் இராகம் தேசிகம்)

கன்னியே மாசில்லா மாமரியே நின்றிருமகன்—பட்ட
காயங்க ளெங்களுள்ளத்திற் பதியச்செய்தா ளம்மா

---

## I

## முதலாம் ஸ்தலம்

முதலோதி—திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்.

துணைவர்—ஏனென்றால், உம்முடைய அர்ச்சியசிஷ்ட சிலுவையைக்கொண்டு உலகத்தை இரட்சித்தீர் சுவாமீ.

### யேசுநாதர் மரணத்துக்குத் தீர்வையிடப்படுகிறார்

திவ்விய யேசுவே, தேவரீர் சிலுவையிலே அறையுண்டு மரணமடையத் தீர்வையிடப்பட்டதைத் தியானித்து நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவரீரை வணங்கி நமஸ்கரிக்கிறோம். அகோரத் தீர்வை யிலே நின்று எங்களை இரட்சித்தருளுஞ் சுவாமீ.

ஒரு பரமண்டல மந்திரமும் ஒரு பிரியதத்த மந்திரமும் ஒரு திரித்துவ தோத்திரமுஞ் சொல்லவும்

மு.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ!

து.—எங்கள்பேரில் தயவாயிரும்.

மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுர னுடைய இரக்கத்தினால் சமாதானத்திலே இளைப்பாறக் கடவது. ஆமென்யேசு.

(பாடல்)

யேசுநாதரே சுவாமீ- தோத்திரம்—எங்கள் பாவத்தாற்
செகத்தி லவதரித்தீர் தோத்திரம்
தோஷ ரெங்களை மீட்க மெய்யாய்—உயிர்ப்பலியாய்
துஷ்ட தீர்வைக்குள்ளானீர் ஐயோ!
கன்னியே மாசில்லா மாமரியே நின்றி....(106-ம் பக்.)

---

# II

## இரண்டாம் ஸ்தலம்

மு.—திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம்பக்)
து.—ஏனென்றால் உம்முடைய....

### யேசுநாதர் சிலுவை சுமத்தப்படுகிறார்

திவ்விய யேசுவே, தேவரீர் பாரமான சிலுவையைச் சுமந்துகொண்டு போனதைத் தியானித்து உம்மை ஆரா திக்கிறோம். எங்களுக்கு இவ்வுலகில் வருகிற கஸ்தி பொல் லாப்புகளைப் பொறுமையோடே அனுபவிக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ. (ஒரு பர. பிரி. திரி.)

மு.—எங்கள்பேரிற் தயவாயிருஞ் சுவாமீ!

து.—எங்கள்பேரிற் தயவாயிரும்.

மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாடல்)

பாவச்சுமை சுமக்குங் கடமை—எங்கள்மேல்நிற்கப்
பாரம்பொறுக்கோமென்ற திடமோ,
தேவரீர் தயவாகப் பூமி—மீதுகனத்த
சிலுவை சுமக்கலானீர் சுவாமீ.

கன்னியே மாசில்லா மாமரியே நின்றிரு....(106-ம் பக்.)

---

III

### மூன்றும் ஸ்தலம்

மு.—திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம் பக்.)
து.—ஏனென்றால் உம்முடைய....

**யேசுநாதர் முதல்முறை சிலுவையோடு குப்புற விழுகிறார்**

திவ்விய யேசுவே, தேவரீர் சிலுவையோடு முதல்முறை குப்புற விழுகிறதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் செய்கிற பாவங்களிலே மூர்க்கராய் நிலைகொள்ளாமல் உடனே அவைகளைவிட்டு எழுந்திருக்க அனுக்கிரகஞ் செய்தருளும் சுவாமீ. (ஒரு பர. பிரி. திரி.)

மு.—எங்கள்பேரிற் தயவாயிருஞ் சுவாமீ!
து.—எங்கள்பேரிற் தயவாயிரும்.
மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

(பாடல்)

அடியால் முள்ளின் முடியால்—உதிரவெள்ள
ஆற்றால் திடனுமற்று நிற்கக்
கொடிய சிலுவைப்பாரம் ஐயோ!—தாளாமல் வீழ்ந்தீர்
கொலைக்காரராளே மிது பொய்யோ?

கன்னியே மாசில்லா மாமரியே நின்றிரு....(106-ம் பக்.)

---

IV

### நாலாம் ஸ்தலம்

மு.—திவ்வியயேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம் பக்.)
து.—ஏனென்றால் உம்முடைய....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யேசுநாதர் தம்முடைய**
**பரிசுத்த மாதா எதிர்கொண்டுவருகிறதைக் காண்கிருர்**

திவ்விய யேசுவே, தேவரீருடைய பரிசுத்தமாதா உமக்கு எதிர்கொண்டு வருகிறதைக்கண்டு நீர். சொல்லிலடங்காத கஸ்தி அனுபவித்ததைத் தியானித்து உம்மை ஆராதிக்கிருேம். நாங்கள் சாகும்வேளையிலே வியாகுலமாதாவின் அடைக்கலத்தை அடைய அனுக்கிரகஞ்செய்தருளும் சுவாமீ. (ஒரு பர. பிரி. திரி.)

மு.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ !

து.—எங்கள்பேரில் தயவாயிரும்.

மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

**(பாடல்)**

தாயே மாசில்லாமரி யம்மா !—ஓ ஓ ! என்சொல்வோம்
 தளர்ந்து நின்றிருமகன் எம்மால்
தூயகல்வாரி மலைமீதே—உயிர்கொடுக்கச்
 சிலுவைசுமந்து போரு ரீதோ.
கன்னியே ~~மாசில்லா~~ மாமரியே நின்றிரு....(106-ம் பக்.)

---

பொது நூலகம் மாநகர சபை யாழ்ப்பாணம்.

**V**

**ஐந்தாம் ஸ்தலம்**

மு.—திவ்வியயேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம் பக்.)

து.—ஏனென்றுல் உம்முடைய....

**யேசுநாதர் சிலுவை சுமந்துகொண்டுபோகிறதற்குச்**
**சீரேன் என்கிற சீமோன் உதவிசெய்கிருர்**

திவ்விய யேசுவே, தேவரீர் சிலுவைசுமந்துகொண்டு போகிறதற்குச் சீரேன் என்கிற சீமோன் உதவிசெய்ததைத் தியானித்து உம்மை ஆராதிக்கிருேம். எங்களுக்கு நியமித்திருக்கிற சிலுவையாகிய துன்பங்களை உம்மோடேகூட நாங்கள் சுமக்கக் கிருபைசெய்தருளுஞ்சுவாமீ. (ஒரு பர.பிரி.திரி.)

மு.—எங்கள்பேரில் தயவாயிருஞ்சுவாமீ !

து.—எங்கள்பேரில் தயவாயிரும்.

மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(பாடல்)

சகல படைப்புக்கும் இறையோன்—பரதேசிபோல்
தவித்துத் தள்ளாடிநின்ற முறையால்
சுகிர்த சீமோனென்கிறவர் உதவச்—சிலுவை தன்னைச்
சுமந்து நடக்கலானார் வதைய
கன்னியே மாசில்லா மாமரியே நின்திரு....(106-ம் பக்.)

---

## VI

### ஆறும் ஸ்தலம்

மு.—திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம் பக்.)

**து.**—ஏனென்றால் உம்முடைய....

**பத்தியுள்ள ஒரு ஸ்திரீயானவள்**
**யேசுநாதருடைய திருமுகத்தைத் துடைக்கிறாள்**

திவ்விய யேசுவே, வெரோணிக்கம் என்கிற ஸ்திரீயான வளால் தேவரீருடைய திருமுகம் துடைக்கப்பட்டதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் முகத்தாட்சணியத்தைப் பாராமற் புண்ணியநெறியில் உறுதியாய் நடக்க அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ. (ஒரு பர. பிரி. திரி.)

மு.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ!

**து.**—எங்கள்பேரில் தயவாயிரும்.

மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

(பாடல்)

அழுதகண்ணீர் துடைத்துக்காக்கும்—ஆண்டவரைநாம்
அந்நீத கொலைக்குள்ளாயாக்க
பழுதற்ற மாதொருத்தி கண்டு—முகந்துடைக்கப்
பார்த்தோம் கன்னெஞ்சர் நம்போலுண்டோ!
கன்னியே மாசில்லா மாமரியே நின்திரு....(106-ம் பக்.)

---

## VII

### ஏழாம் ஸ்தலம்

மு.—திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம் பக்.)

**து.**—ஏனென்றால் உம்முடைய....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுநாதர் இரண்டாம்முறை சிலுவையோடு குப்புற விழுகிறார்

திவ்விய யேசுவே, தேவரீர் சிலுவையின்கீழே இரண்டாம்முறை குப்புறவிழுந்ததைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் எந்தப் பாவத்திலும் திரும்ப விழாதபடிக்குக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ. (ஒரு பர. பிரி. திரி.)

மு.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ !

து.—எங்கள்பேரில் தயவாயிரும்.

மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

(பாடல்)

மூவுலகத்தையேந்துந் தேவன்—அடியால் நொந்து
மீண்டுங் குப்புறவீழ்ந்தார் ஆ! ஆ!!
பாவிகளான நம தடிமை—நீக்கிட இந்தப்
பாடோ ஐயையோ! என்ன கொடுமை!
கன்னியே மாசில்லா மாமரியே நின்றிரு....(106-ம் பக்.)

---

## VIII

### எட்டாம் ஸ்தலம்

மு.—திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம் பக்.)

து.—ஏனென்றால் உம்முடைய....

யேசுநாதர் தம்மைப் பின்சென்று புலம்புகிற
ஜெருசலேம் பட்டணத்தின் புண்ணிய ஸ்திரீகளுக்கு
ஆறுதல் சொல்லுகிறார்

திவ்விய யேசுவே, தேவரீர் உம்மைநோக்கி அழுகிற ஜெருசலேம்பட்டணத்தின் புண்ணிய ஸ்திரீகளுக்கு ஆறுதல் சொன்னதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் செய்த பாவதுரோகங்களுக்காகத் துயரப்பட்டு அவைகளுக்காக எப்பொழுதும் அழுதுகொண்டிருக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ. (ஒரு பர. பிரி. திரி.)

மு.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ !

து.—எங்கள்பேரில் தயவாயிரும்.

மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாடல்)

இசருயேல் மாதர்கண்டு புலம்ப—ஆறுதலவர்க்
　கீதோ வுலகநாதர் விளம்ப
அசையா நமதுமனங் கல்லோ—நாம்கரையேற
　அடுத்த சமயமிது வல்லோ.
கன்னியே மாசில்லா மாமரியே நின்றிரு....(106-ம் பக்.)

IX

ஒன்பதாம் ஸ்தலம்

மு.—திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம் பக்.)
து.—ஏனென்றால் உம்முடைய....

**யேசுநாதர் மூன்றாம்முறை சிலுவையோடு தரையிலே விழுகிறார்**

திவ்விய யேசுவே, தேவரீர் சிலுவையின்கீழே மூன்றாம் முறை குப்புற விழுந்ததைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் சாவானபாவத்தோடே செத்து நித்திய நரகத்திலே விழாதபடிக்குக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ. (ஒரு பர. பிரி. திரி.)

மு.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ!
து.—எங்கள்பேரில் தயவாயிரும்.
மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

(பாடல்)

சீலதேகம் நொருங்கிச் சிதைய—மூன்றாம்முறையும்
　சிலுவையுடனே வீழ்ந்தார் வதைய
பாலரும் பால்குடிக்கார் கண்டால்—ஆண்டவர் படும்
　பாடுகள் சொல்ல நாவு முண்டோ?
கன்னியே மாசில்லா மாமரியே நின்றிரு....(106-ம் பக்.)

X

பத்தாம் ஸ்தலம்

மு.—திவ்வியயேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம் பக்.)
து.—ஏனென்றால் உம்முடைய....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யேசுநாதருடைய வஸ்திரங்களை உரிந்துகொள்ளுகிருர்கள்

திவ்விய யேசுவே, தேவரீருடைய வஸ்திரங்கள் உரியப்பட்டதையுந் தேவரீருக்குக் கசப்பான காடி குடிக்கக் கொடுக்கப்பட்டதையுந் தியானித்து உம்மை ஆராதிக்கிறேம். நாங்கள் சகலத்திலும் தேவசித்தத்துக்குக் கீழ்ப்படிந்து பொறுமையோடே நடக்கக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ. (ஒரு பர. பிரி. திரி.)

மு.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ !

து.—எங்கள்பேரில் தயவாயிரும்.

மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

(பாடல்)

தூர்த்த ருடலோ டொட்டிக்காய்ந்த—திருச்சட்டையைத்
 தோலுரிபோ லுரிக்க நேர்ந்தார்
பார்க்கக்கூடுமோ இந்தக்கோரம்—வானேர்களேனும்
 பரனை மறைக்காரோ இந்நேரம்.
கன்னியே மாசில்லா மாமரியே நின்றிரு....(106-ம் பக்.)

---

XI

பதினேராம் ஸ்தலம்

மு.—திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம் பக்.)

து.—ஏனென்றல் உம்முடைய...

யேசுநாதரைச் சிலுவையில் அறைகிருர்கள்

திவ்விய யேசுவே, தேவரீர் சிலுவையிலே அறையப்பட்டதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறேம். நாங்கள் இவ்வுலக செல்வங்களை வெறுத்துப் பரலோகத்தை மாத்திரம் நாடக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ. (ஒரு பர. பிரி. திரி.)

மு.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ !

து.—எங்கள்பேரில் தயவாயிரும்.

மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாடல்)

அய்யோ மூன்ருணியாலே சிலுவை—மீது கர்த்தரை
அறைந்துகொல்லுவதென்ன வலுமை
மெய்யாய் நம்மைரட்சிக்கும் வான—ஆண்டவர்க்கு நாம்
விரும்பிச்செய் நன்றி யிதுதானே?
கன்னியே மாசில்லா மாமரியே நின்றிரு....(106-ம் பக்.)

---

# XII

## பன்னிரண்டாம் ஸ்தலம்

மு.—திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம் பக்.)
து.—ஏனென்ருல் உம்முடைய....

### யேசுநாதர் சிலுவையில் உயிர்விடுகிருர்

திவ்விய யேசுவே, தேவரீர் சிலுவைமரத்தில் உயிர் விட்டதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறேம். நாங்கள் உம்மைமாத்திரமே நேசித்து இஷ்டப்பிரசாதத்தோடே மரித்துப் பரகதியில் உம்மோடே வீற்றிருக்கக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ. (ஒரு பர. பிரி. திரி.)

மு.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ!
து.—எங்கள்பேரில் தயவாயிரும்.
மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

(பாடல்)

பொதுவில் மன்னுயிர்களை மீட்க—சிலுவைமீது
பலியாய்த் தன்னுயிர் தந்தார்பார்க்க
கதிரோன் சுடரும் மங்கிப்போச்சே—நமதுமனம்
கரையாததென்ன இரும்பாச்சோ?
கன்னியே மாசில்லா மாமரியே நின்றிரு....(106-ம் பக்.)

---

# XIII

## பதின்மூன்ரும் ஸ்தலம்

மு.—திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம் பக்.)
து.—ஏனென்ருல் உம்முடைய....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுநாதருடைய திருச்சரீரத்தைச் சிலுவையில் நின்று இறக்கி அவருடைய திருத்தாயார்மடியில் வளர்த்துகிறார்கள்

திவ்விய யேசுவே, தேவரீருடைய திருச்சரீரத்தைச் சிலுவையில்நின்று இறக்கி வியாகுலமாதாவின் மடியில் வளர்த்தப்பட்டதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். எங்களுடைய இருதயத்திலே தேவரீருடைய திருக்காயங்களும் பரிசுத்தமாதாவின் வியாகுலங்களும் பதிந்திருக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ. (ஒரு பர. பிரி. திரி.)

மு.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ!

து.—எங்கள்பேரில் தயவாயிரும்.

மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

(பாடல்)

மரியே ஐயையோ! உயிர்பிரிந்த—நின்மகன் றன்னை
மடிமேல் வளர்த்தமனங் கரிந்தே
இருகண்ணீ ராருயோட முகமும்—சோரப்புலம்ப
இக்கோலங் கண்வைத்தார் தகுமோ?
கன்னியே மாசில்லா மாமரியே நின்றிரு....(106-ம் பக்.)

---

# XIV

## பதினாலாம் ஸ்தலம்

மு.—திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து....(106-ம் பக்.)

து.—ஏனென்றால் உம்முடைய....

யேசுநாதருடைய திருச்சரீரம் அடக்கஞ்செய்யப்படுகிறது

திவ்விய யேசுவே, தேவரீருடைய திருச்சரீரம் அடக்கம் பண்ணப்பட்டதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் மரணபரியந்தம் தேவரீரை நேசிக்கவுந் தேவரீருடைய பேரின்ப இராச்சியத்திற் சேரவுங் கிருபை செய்தருளும் சுவாமீ. (ஒரு பர. பிரி. திரி.)

மு.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ!

து.—எங்கள்பேரில் தயவாயிரும்.

மு.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாடல்)

கர்த்தர் திருக்கல்லறை யருகில்—நெருங்கியன்பால்
  கண்ணீர்சொரிந்து மனதுருகி
நித்திய கதியிற் சேரவாரும்—பாவிகள்மீது
  நிமலா யேசுவே! தயைகூரும்.

கன்னியே மாசில்லா மாமரியே நின்றிரு....(106-ம் பக்.)

பீடத்துக்கு முன்பாக முழந்தாளிலிருந்து யேசுக்கிறீஸ்துநாதருடைய ஐந்து திருக்காயங்களைக்குறித்து ஐந்துமுறை பர. பிரி. திரி. சொல்லியபின் அர்ச்சியசிஷ்ட பாப்பாண்டவருடைய சுகிர்த கருத்துக்கள் நிறைவேறும் படிக்கு ஒரு பர. பிரி. திரி. சொல்லவும்.

---

## யேசுநாதர் பட்ட திருப்பாடுகளின் பலனை அடைவதற்குரிய செபம்

அவமான நிந்தை நிர்ப்பந்தப் பாடுகளால் பூரிக்கப்பட்ட திவ்விய யேசுவே, தேவரீர்பட்ட இந்தப் பாடுகளெல்லாம் அடியேனுக்கு நேரிடுகிற துன்பத்தில் ஆறுதலாகவும், உமது துயரம் எனக்கு மோக்ஷானந்த பேறுகவும், உம்முடைய காயங்கள் எனக்கு நேச அடையாளமாகவும், தேவரீர்பட்ட அவமானங்கள் என்னுடைய துர்க்குணங்களுக்கு அவுழ்த மாகவும், உம்முடைய திருவிரத்தம் என் அசுத்த பாவங் களுக்குச் சுத்திகரமாகவும், உம்முடைய மரணம் எனக்குச் சதத சீவியமாகவுங் கடவது. இப்படியே தேவரீருடைய சகல பீடைகளால் எனக்கு இரட்சணியமும் ஆரோக்கியமும் ஆனந்தமும் ஆத்தும சரீர நன்மையும் என் சகல நல்லாசை களுக்குத்தக்க சம்பூரண திருப்தியும் உண்டாவதாக. இப் போதும் எப்போதும் சதாகாலமுஞ் சீவியருமாய் இராச்சிய பரிபாலகருமாயிருக்கிற ஆண்டவரே, ஆமென்யேசு.

---

149 R.C 117802

St. Joseph's Catholic Press, Jaffna 13-F-52

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA
30 MAY 1960
8630

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org